விலை : 20.00
website : www.valampurii.lk
Registered as a Newspaper in Srilanka
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 ஆனி 08 புதன்கிழமை (22.06.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 186

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

## பரபரப்பான தகவலுக்கு பதிலளிக்க முடியாது

# கொத்துக் குண்டு குற்றச்சாட்டை பாதுகாப்பு செயலர் நிராகரிப்பு



(கொழும்பு) ------------------------------


**இறுதிக் கட்டப்போரில் பொதுமக்களுக்கு ஆபத்தை ஏற்படுத்தும் கொத்துக் குண்டுகள் பயன்படுத்தப்பட்டதாக வெளியான ஆதாரபூர்வமான செய்திகளை பாதுகாப்பு அமைச்சு முற்றாக மறுத்துள்ளது. அத்துடன் ஜெனிவா மனித உரிமை பேரவையில் போர்க்குற்ற விவகாரத்தை துல்லியமாக அரசாங்கம் கையாண்டுவரும் சூழ்நிலையில் சர்வதேச செய்தி நிறுவனங்கள் வெளியிடும் பரபரப்பு தகவல்களுக்கு பதிலளிக்க வேண்டிய கடப்பாடு அரசாங்கத்துக்கு இல்லை என பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.**

இறுதிப்போரின்போது பொதுமக்களுக்கு ஆபத்தை ஏற்படுத்தும் கொத்துக் குண்டுகள் என அழைக்கப்படும் சர்வதேச ரீதியில் தடைசெய்யப்பட்டுள்ள கொத்துக் குண்டுகளை படையினர் பயன்படுத்தியுள்

23ஆம் பக்கம் பார்க்க....

## நிறைவேற்று ஜனாதிபதி முறையை முற்றாக ஒழிக்கக்கூடாது

### அமைச்சர் சம்பிக்க எதிர்ப்பு



(கொழும்பு)

நிறைவேற்று அதிகாரங்கள் கொண்ட ஜனாதிபதி முறை முற்றாக ஒழிக்கப்பட கூடாதென்று அரசாங்கத்தின் கூட்டணி கட்சியான ஜாதிக ஹெல உறுமய கட்சியின் தலைவரும், அமைச்சருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற கூட்டமொன்றில்

23ஆம் பக்கம் பார்க்க....




## வவுனியா வர்த்தகர் கடத்தப்பட்டார்!

வவுனியா கோவில்குளம் பகுதியைச் சேர்ந்த அரிசி ஆலை உரிமையாளர் ஒருவர் இனந்தெரியாத நபர்களால் நேற்றிரவு 7.15 மணியளவில் கடத்தப்பட்டுள்ளார்.

சண்முகம் செல்வராசா (வயது-55) என்ற வர்த்தகரே இவ்வாறு கடத்தப்பட்டுள்ளார். வவுனியாவிலிரு

24ஆம் பக்கம் பார்க்க

## ஆயுத மீட்புப் பணி தோல்வி

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவிற்கு உட்பட்ட சுண்டிக்குளம் பகுதியில் ஆயுத மீட்பு பணிகள் நேற்று முன்னெடுக்கப்பட்டன.

மக்கள் பயன்பாடு அற்ற குறித்த காணியில் பெருமளவு ஆயுதங்கள் காணப்படுவதாக பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கு

23ஆம் பக்கம் பார்க்க....

### வழங்கிய வாக்குறுதிகள் என்னவாயிற்று

# ஜனாதிபதி, பிரதமர் ஆகியோருடன் த.தே.கூட்டமைப்பு விரைவில் சந்திப்பு!

(கொழும்பு)

அரசாங்கத்துடன் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாக கூட்டமைப்பின் உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனடிப்படையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தலைமையிலான குழு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரைச் சந்தித்து விரைவில் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன்போது போர்க்குற்ற விசாரணைகளின் தாமதம் மற்றும் அரசாங்கம் வழங்கிய வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாமை தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தப்படும் என்று கூறப்படுகின்றது.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் உரிய விசாரணை நடத்தப்பட்டு நீதி நிலைநாட்டப்படும் என்று ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவில் தற்போதைய அரசாங்கம் உறுதி அளித்திருந்த போதிலும், அதற்கான நடவடி

24ஆம் பக்கம் பார்க்க....

# ஐந்து மாணவிகள் மீது பாலியல் துன்புறுத்தல்!

## ஆசிரியருக்கு எதிராக முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் ஐந்து மாணவியர்களுக்கு பாலியல் துன்புறுத்தல் கொடுத்த ஆசிரியர் ஒருவருக்கு எதிராக யாழ்.பொலிஸ் நிலையத்தில் பாதிக்கப்பட்ட மாணவிகளால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

குறித்த பாலியல் சேட்டையை கண்டித்து பாடசாலையின் மாணவர்கள், பழைய மாணவர்கள் ஒன்றுதிரண்டு நேற்று எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

யாழ்.நகரை அண்மித்த பாடசாலையில் தரம் ஏழில் கல்வி கற்று வரும் மாணவியர் ஐவருக்கு குறித்த பாடசாலையில் விஞ்ஞான பாடம் கற்பிக்கும் ஐம்பத்து ஐந்து வயதுடைய ஆசிரியர் ஒருவர் கடந்த

23ஆம் பக்கம் பார்க்க....

## வலி.வடக்கு மக்கள் சாத்வீக போராட்டம்

(யாழ்ப்பாணம்)

வலி.வடக்கில் உள்ள மக்களின சொந்த நிலங்களை விடுவிப்பதாக ஜனாதிபதி கொடுத்த வாக்குறுதி ஏமாற்றமளித்துள்ள காரணத்தால் வலி.வடக்கு மக்கள் பாரிய சாத்வீக போராட்டத்தை விரைவில் முன்னெடுக்கவுள்ளதாக அறிவித்துள்ளனர்

இது தொடர்பாக வலி.வடக்கு மீள்குடியேற்ற புனர்வாழ்வுச் சங்க தலைவர் ஊடகங்களுக்கு அனுப்பி

24ஆம் பக்கம் பார்க்க....

### கச்சதீவு விவகாரம்

# ஜெயாவின் கருத்துக்கு கருணாநிதி கண்டனம்

(சென்னை)

கச்சதீவை இலங்கைக்கு இந்திய அளித்தது தொடர்பான விவகாரத்தில், நேற்று முன்தினம் சட்டப் பேரவையில் முதலமைச்சர் ஜெயலலிதா தெரிவித்த கருத்துக்கு திமுக தலைவர் கருணாநிதி கண்டனம் தெரிவித்திருக்கிறார்.

நேற்றுமுன்தினம் தமிழக சட்டப் பேரவையில் பேசிய முதலமைச்சர் ஜெயலலிதா, கச்சதீவை இந்தியா இலங்கைக்கு அளித்தபோது, மாநில முதல்வராக இருந்த கருணாநிதி நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லையென்றும், போராட்டங்களை நடத்தவில்லையென்றும் கூறினார்.

தற்போது மீனவர்கள் படும் அல்

23ஆம் பக்கம் பார்க்க....

### எம்.பிக்களுக்கான வீட்டுத் தொகுதியில்

# போலி இலக்க தகடுடன் வாகனம் கண்டுபிடிப்பு!

(கொழும்பு)

கொலை மற்றும் கடத்தல் நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் வாகனம் ஒன்று நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான வீட்டுத் தொகுதியில் போலி இலக்கத்தகட்டுடன் தரித்து நின்றதை பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ஆனந்த அளுத்கமகே ஆகியோர் வெளிப்படுத்தியுள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான வீட்டுத் தொகுதிக்கு நேற்று செவ்வாய்க்கிழமை ஊடகவியலாளர்களை அழைத்துச் சென்ற பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க இது தொடர்பிலான தகவல்களை

23ஆம் பக்கம் பார்க்க....

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது பாடசாலை ஆசிரியர்
திரு.
**அமிர்தலிங்கம் கஜேந்திரன்**
அவர்கள் அதிபர் சேவை தரம்
III இற்கு பதவி உயர்வு
பெற்றதையிட்டு மகிழ்ச்சி
அடைவதோடு மேலும் அவர்
பல பதவிகள் பெற்று உயர்வடைய
வேண்டுமென்று வாழ்த்துகின்றோம்.

(5010)

**ஆசிரியர் நலன்புரிக் கழகம்**
கிளி/ முருகானந்தா கல்லூரி, முரசுமோட்டை.


# கேரள கஞ்சா வைத்திருந்த இளைஞர் ஒருவர் கைதானார்

யாழ்ப்பாணம் குருநகர் பகுதியில் சட்ட விரோத மாக கேரள கஞ்சாவினை வைத்தி ருந்த நப ரொருவரை கைது செய்துள்ளதாக யாழ்.பொலிஸ நிலைய குற்றத்தடுப்பு பிரிவு உப பொலிஸ் பரி சோதகர் எஸ்.சிறிகஜன் தெரிவித்துள்ளார்.

மேற்படி சம்பவத்தில் குருநகர் பகுதியை சேர்ந்த 21 வயதுடைய இளைஞன் ஒருவரையே நேற்று முற் பகல் கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, நேற்றையதினம் முற்பகல் குறித்த நபர் கேரள கஞ்சா வைத்திருப்பதாக கிடைத்த தகவலொன்றையடுத்து மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படை யிலேயே குறித்த நபரை கைது செய்ததாகவும் அவரி டமிருந்து 126 கிராம் கேரள கஞ்சாவைக் கைப் பற்றியுள்ளதாகவும் பொலிசார் தெரிவித்தனர்.

மேலும் கைது செய்யப்பட்ட குறித்த நபர் ஏற் கெனவே இரு தடவை கஞ்சா வைத்திருந்த குற் றச்சாட்டில் தண்டனை பெற்றிருந்தவர் எனவும் இறுதியாக அவரிற்கு ஒரு வருட வெளிமறியல் வழங்கப்பட்டிருந்ததாகவும் பொலிஸார் தெரி வித்துள்ளனர்.

இதேவேளை குறித்த நபரிடம் மேற்கொள ளப்பட்டு வரும் விசாரணைகளின் அடிப்படை யில் மேலும் ஒருவர் கைது செய்யப்படவுள்ளதாக வும் இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணை களை தாம் மேற்கொண்டுவருவ தாகவும் யாழ்ப பாண பெரும் குற்றத் தடுப்புப் பிரிவு பொலிஸார் தெரிவித்தனர். (செ-4)


## SLEAS விசேட கருத்தரங்கு

யூலை 10ஆம் திகதி பரீட்சை நடை பெறவுள்ளது. விசேட மாலை நேர. கருத்தரங்கு நாளை வியாழன் பி.ப 4.45 - 6.45 மணிக்கு ஆரம்பமாகும். திங்கள் தொடக்கம் வெள்ளிவரை பி.ப 4.45 - 6.45 மணிவரை

**யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புக்கள் பிரிவு.**

ஆஸ்பத்திரி வீதி,
கொமர்ஷல் வங்கி அருகில் நடைபெறும்.

(C-4985)



## INVITATION FOR BID
## VALIKAMAM SOUTH PRADESHIYA SABHA
## CHUNNAKAM

1. The Chairman, Local Authority Procurement Committee on behalf of the Valikamam South Pradeshiya Sabha invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table below.

2. Bidding will be conducted through National Bidding Procedure.

3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered in the field of building construction for grade mentioned in the table below with the Institute for Construction Training and Development (ICTAD).

4. Qualifications requirements are indicated in Section 4 of the Bidding document. Additional details are provided in the Schedule (Section V).

5. Interested bidders may obtain further information from **Secretary, Valikamam South Pradeshiya Sabha, Chunnakam (T.No: 0212240017)** and inspect the bidding documents at the respective places on any working days from 9.00 hrs to 15.00 hrs from 22.06.2016 to 13.07.2016.

6. A complete set of Bidding Documents in English language may be purchase by interested bidders on the submission of a written application to the **Secretary, Valikamam South Pradeshiya Sabha, Chunnakam (T.No: 0212240017) from 22.06.2016 until 13.07.2016 from 9.00 hrs to 15.00 hrs working days upon payment of a non – refundable fees of LKR 5,000.00.** The method of payment should be by cash.

7. Bids (original & Duplicate) shall be delivered to the **Secretary, Valikamam South Pradeshiya Sabha, Chunnakam on or before 14.00 Hrs on 14.07.2016.** Late Bids will be rejected. Bidders must write Bid ID on left hand upper corner of envelop for each. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.

8. Pre bid conference will be held at the **Office of the Valikamam South Pradeshiya Sabha, Chunnakam** commencing at **10.00 Hrs on 01.07.2016.**

9. Bids shall be accompanied by a Bid Security as per the information given in the Table.

| Bid ID | Description of Work | Estimate Cost(with out VAT) Mn | Contract Period | Required Grade | Required Bid Security | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | Security Amount (LKR) | Validity Period |
| NP/VSPS/MM/2016/01 | Construction of Public Toilet at Maruthanarmadam Market | 6.44 | 03 Months | C7 or above (Buildings) | 100,000.00 | Till 08 Nov 2016 |

*Chairman*
*Local Authority Procurement Committee*
*Valikamam South Pradeshiya Sabha*
*Chunnakam*

(C-4982)


# தேசிய வீடமைப்புத்தின கொடிவாரம் ஜனாதிபதி, பிரதமருக்கு கொடி அணிவிப்பு



(கொழும்பு)

யூன் 23 ஆம் திகதி இடம் பெறும் தேசிய வீடமைப்புத் தின த்தை முனனிட்டு பிரகடனப்படுத் தப்பட்டுள்ள கொடிவாரத்தை ஆரம்பித்துவைக்கும் வகையில் முதலாவது கொடி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகி யோருக்கு அணிவிக்கும் நிகழ்வு நேற்று முற்பகல் ஜனாதிபதி அலு வலகத்தில் நடைபெற்றது.

வீடமைப்பு, நிர்மாணத் துறை அமைச்சர் சஜித் பிரேமதாசவினால் ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கும் கொடிகள் அணிவிக்கப்பட்டன.

காலம்சென்ற முன்னாள் ஜனாதிபதி, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் ஸ்தாபகர் ரணசிங்க பிரேமதாச அவர்களின் பிறந்த தினத்தை குறிக்குமுகமாக யூன் மாதம் 23 ஆம் திகதி தேசிய வீடமைப்புத் தினமாகப் பிரகடனப்படுத்தப் பட்டுள்ளது.

நேற்றுத் தொடக் கம் ஒரு வார காலத் திற்கு நடை முறைப் படுத்தப்படவுள்ள தேசிய வீடமைப்பு வாரத்தில் புதிய வீட மைப்புக் கருத்திட் டங்களை ஆரம்பித் தல் உள்ளிட்ட பல் வேறு நிகழ்ச்சிதிட் டங்கள் முன்னெடுக் கப்படவுள்ளன.

இந்த நிகழ்வில் கருத்துத் தெரிவித்த அமைச்சர் சஜித் பிரே மதாச, இக்கொடி விற் பனையின் மூலம் கிடைக்கும் வரு மானம் வீடுகள் இல் லாதிருக்கும் வறிய மக்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுக் கும் நிகழ்ச் சித்திட் டத்திற்கு பயன்படுத் தப் படுமெனக் குறிப் பிட்டார்.

மேலும் சீறுநீரக நோயினால் பாதிக் கப்பட்டிருக்கும் வீடு களற்ற குடும்பங் களுக்கு வீடுகளை நிர்மாணித்துக் கொடுக்கும் திட்டமும இவ்வருட தேசிய வீட மைப்புத்திட்ட நிகழ்ச் சித்திட்டத்தின் கீழ் ஒரு விசேட நிகழ்ச்சித் திட்டமாக முன்னெடுக கப்படவுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட் டார். (செ-12)


## ஏல விற்பனை

இடம் - பாடசாலை அலுவலக முன்புறம்
காலம் - 05.07.2016 - காலை 10 மணி

ஏல விற்பனைக்கு விடப்படும் பொருட்கள்

| | |
|---|---|
| பாலர் கதிரை - 44 | புத்தகங்கள் - 135 |
| இணை வாங்கு - 45 | U.P.S - 04 |
| பஞ்சர் பெரியது - 01 | Mouse - 04 |
| பஞ்சர் சிறியது - 01 | Head Phone - 01 |

யா/ புத்தூர் இந்து ஆரம்ப பாடசாலை
- அதிபர்

(சி-4978)

## ஏல விற்பனை

இடம் - பாடசாலை அலுவலக முன்புறம்
காலம் - 06.07.2016 - 10 மணிக்கு

ஏல விற்பனைக்கு விடப்படும் பொருள்
பாவித்த நல்ல நிலையிலுள்ள தண்ணீர் தாங்கி (1000 லீற்றர்)

யா/ அச்சுவேலி ஆரம்ப பாடசாலை
- அதிபர்

(சி-4979)

## உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்

- கடிதங்கள்
- அன்பளிப்புப் பொருட்கள்
- உடு புடைவைகள்
- CD,VCD க்கள் அனுப்ப

நாட வேண்டிய ஒரே இடம்

**ஸ்ரீமுருகன் தொலைத்தொடர்பகம்**
303.கே.கே.எஸ் வீதி. யாழ்ப்பாணம்
T.P.No : 021 222 5392

(C-4976)

## பெயர் மாற்றம்

புத்தூர் மேற்கு நவற்கிரியில் வசிக்கும் சுந்தரன் ரஜனி ஆகிய எனது பெயரை இன்றிலிருந்து சுந்தரன் சஜனி என மாற்றவுள்ளேன் என்பதன்னை இத்தால் அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

உண்மையுள்ள
சுந்தரன் சஜனி

(5011)

# கம்மன்பிலவின் மனு நிராகரிப்பு




விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில. பாராளுமன்ற அமர்வுகளில் பங்கேற்க அனுமதிக்குமாறு விடுத்த கோரிக்கையை நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

அவுஸ்ரேலிய வர்த்தகரின் 110 மில்லியன் ரூபா பெறுமதியான பங்குகளை மோசடி செய்து விற்பனை செய்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட உதய கம்மன்பிலவை எதிர்வரும் ஜூலை 4 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க கோட்டே நீதவான் உத்தரவிட்டார்.

இந்த நிலையில் நடைபெறவுள்ள பாராளுமன்ற அமர்வில் பங்கேற்பதற்கு அனுமதிக்குமாறு, தனது சட்டத்தரணி மூலம் உதய கம்மன்பில நேற்று முன்தினம் கோட்டே நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்தார்.

இருப்பினும் நீதிச்சேவை ஆணைக்குழு அண்மையில் விடுத்துள்ள சுற்றறிக்கையின் படி, இத்தகைய உத்தரவைத் தம்மால் பிறப்பிக்க முடியாது என நீதவான் லங்கா ஜெயலத்ன தெரிவித்துள்ளதோடு, குறித்த மனுவையும் நிராகரித்துள்ளார். (இ-5)




# 20 பில்லியன் அமெரிக்க டொலர் வெளிநாட்டில் பதுக்கி வைப்பு

## மகிந்த மீது குற்றஞ்சாட்டும் சம்பிக்க



(கொழும்பு)

**கடந்த பத்து வருட ஆட்சிக்காலத்தின் போது சுமார் 20 பில்லியன் அமெரிக்க டொலர் சட்டவிரோதமாக வெளிநாட்டில் பதுக்கி வைக்கப்பட்டுள்ளது. இது புள்ளிவிபர ரீதியாக நிரூபிக்கப்பட்டுள்ளது. மேலும் இது தொடர்பிலான பனாமா ஆவணம் விரைவில் வெளிவரும் என மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் நிதி குற்றப் புலனாய்வு பிரிவினால் மாத்திரம் விசாரணை செய்து கண்டுபிடிக்க முடியாது. இதற்கு சர்வதேச உதவியும் மிக அவசியமாகும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

முன்னைய ஆட்சிக் காலத்தில் நிகழ்த்தப்பட்ட ஊழல் மோசடி மற்றும் தற்போதைய பொருளாதார நிலைமை குறித்து அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க எழுதிய நூல் வெளியீட்டு விழா நேற்று முன்தினம் இலங்கை மன்ற கல்லூரியில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-5)

## எவருடைய தேவைக்காகவும் மத்திய வங்கியின் ஆளுநரை பணி நீக்க முடியாது- கல்வி அமைச்சர்

யார் யாருக்கும் தேவையான வகையில் மத்திய வங்கியின் ஆளுநரை பணி நீக்கம் செய்ய முடியாது என கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகம் ஸ்ரீகொத்தவில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதன் போது தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர், மத்திய வங்கியின் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரனை



நீக்க வேண்டுமாயின் அதற்காக உரிய முறைமையொன்று பின்பற்றப்பட வேண்டும்.

அவ்வாறு இன்றி யார் யாரும் நினைக்கும் வகையில் மத்திய வங்கியின் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரனை பணி நீக்கம் செய்ய முடியாது. ஊடக அறிக்கைகளின் அடிப்படையிலோ அல்லது கூட்டு எதிர்க்கட்சியின் குற்றச்சாட்டுக்களின் அடிப்படையிலோ அரசாங்கம் செயற்படாது.

அரசாங்கத்தினை ஆட்சிப் பீடம் ஏற்றிய சிவில் அமைப்புக்களின் கருத்துக்களை ஆராய்ந்து சட்ட ரீதியான அடிப்படையில் அரசாங்கம் நடவடிக்கைகளை எடுக்கும் என அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

## ஆளும் கட்சி எம்.பிக்கள் இந்த வார அமர்வுகளில் பங்கேற்பது கட்டாயம்!

ஆளும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்த வாரம் நாடாளுமன்ற அமர்வுகளில் பங்கேற்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்று முன்தினம் அலரி மாளிகையில் நடைபெற்ற ஆளும் கட்சியின் கூட்டத்தில் இதுபற்றி அறிவிக்கப்பட்டுள்ளது.

தகவல் அறிந்து கொள்ளும் சட்டம், குடிவரவு குடியகல்வு சட்டம் மற்றும் தேர்தல் காலத்தில் ஊடகங்கள் செயற்பட வேண்டிய விதம் குறித்த ஒழுக்கக் கோவை தொடர்பிலான சட்டம் ஆகியன இந்த வாரத்தில் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

அவசர வாக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டால் அதனை எதிர்கொள்ளும் நோக்கில் ஆளும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கட்டாயம் அமர்வுகளில் பங்கேற்க வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது. காணிக்கொள்வனவின் போது மூலதன வரி விதிப்பது குறித்து நேற்று முன்தின சந்திப்பின் போது நீண்ட கலந்துரையாடல் நடத்தப்பட்டுள்ளது.

வற்வரி குறித்த ஆவணங்களை அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் வழங்குவதற்கு நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க இணக்கம் வெளியிட்டுள்ளார்.

வற்வரி குறித்து பொது மக்களை தெளிவுபடுத்துமாறு ஆளும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. (இ-5)

## பௌத்த எதிர்ப்பு கொள்கையை அரசு கடைப்பிடிக்கப்படுகிறது

### தம்மாலோக தேரர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

அரசாங்கம் பௌத்த எதிர்ப்புக் கொள்கையைக் கடைப்பிடிக்கின்றது என்பது தெளிவாக விளங்கக் கூடியதாகவுள்ளது என உடுவே தம்மாலோக தேரர் தெரிவித்தார்.

சட்டவிரோதமான முறையில் யானைக் குட்டியை வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டதன் பின்னர் குறித்த தேரர் நேற்று முன்தினம் பிணையில் விடுவிக்கப்பட்டார். இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-5)




## சீனியின் விலை ஏற்றம்

மக்களின் அத்தியாவசிய நுகர்வுப் பொருட்களில் ஒன்றான சீனியின் விலை உயர்த்தப்பட்டுள்ளது. புறக்கோட்டை மொத்த விற்பனை சந்தையில் நேற்று முன்தினம் ஒரு கிலோ சீனியின் விலை 112 ரூபா என பதிவாகியிருந்தது.

இதன்படி ஒரு கிலோ சீனியின் சில்லறை விலை 118 முதல் 120 ரூபா வரையில் விற்பனை செய்யப்பட உள்ளது. உலக சந்தையில் துரிதகதியில் சீனியின் விலை உயர்வடைந்து செல்கின்றது. இந்தியாவில் தொடர்ச்சியாக நிலவி வரும் வரட்சியினால் இவ்வாறு சீனி உற்பத்தியில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

சில வாரங்களுக்கு முன்னதாக ஒரு கிலோ கிராம் சீனி 85 ரூபா முதல் 90 ரூபா வரையில் விற்பனை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-5)


திறப்புவிழா
கோண்டாவில் இராஜேஸ்வரி மண்டபத்தின் மற்றுமோர் புதிய உதயம் இல, 573, காங்கேசன்துறை வீதி, தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோவில் அருகாமையில் அதிநவீன வசதிகளுடன் மிக பிரமாண்டமான மண்டபம் இன்று 22.06.2016 புதன்கிழமை உதயமாகின்றது.
இராஜேஸ்வரி மண்டபம் - தெல்லிப்பழை
திருமண நிகழ்வுகள்
பிறந்தநாள் நிகழ்வுகள்
பூப்புனித நீராட்டுவிழா
ஒன்றுகூடல்
விருந்துபசாரம்
போன்ற மங்கல நிகழ்வுகளை எண்ணம் போல் வண்ண மயமாக மகிழ்வுடன் கொண்டாட இன்றே நாடுங்கள்
இல. 573, காங்கேசன்துறை வீதி, தெல்லிப்பழை.
(C-4984)

# புதிய சுங்கக்கட்டளைச் சட்டத்திற்கு தொழிற்சங்கங்கள் போர்க்கொடி

(கொழும்பு)

புதிய சுங்கக் கட்டளைச் சட்டத்திற்கு எதிராக தொழிற் சங்கங்கள் போர்க்கொடி பிடித்துள்ளன.

நிதி அமைச்சரின் தேவைக் காக வரையப்பட்டுள்ள உத் தேச சுங்கக் கட்டளைச் சட்டத்தை சமர்ப்பித்தால் சுங்கப் பணியாளர்கள் தொடர் வேலை நிறுத்தப் போராட் டமொன்றை முன் னெடுக்க நேரிடும் என தொழிற்சங் கங்கள் அரசாங்கத்திற்கு எச்சரிக்கை விடுத்துள்ளன.

தற்பொழுது அமுலில் இருக்கும் சுங்கக் கட்டளைச் சட்டம் வரி வருமானத்தை அதிகரிக்கும் வகையில் உரு வாக்கப்பட்டது என தொழிற் சங்க அழைப்பாளர் எம். ஆர்.ரீ. விஜேகோன் சிங் களப் பத்திரிகையொன்றுக் குத் தெரிவித்துள்ளார். (இ-5)

# மரண அறிவித்தல்

## பொன்னு-கந்தசாமி (நவம்)

### (பிரபல கட்டட ஒப்பந்தகாரர்)



யாழ்.அரியாலையைப் பிறப்பிடமாகவும், றக்காவீதி, சுண்டிக்குளியை வசிப்பிடமாக வும் பிரான்ஸில் வசித்து வந்தவருமான நவம் என்று அன்பாக அழைக்கப்படும் பொன்னு -கந்தசாமி அவர்கள் 18.06.2016 சனிக்கிழமை பிரான்ஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னு-சிதம்பரம் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்லத் துரை-செல்லம்மா தம்பதிகளின் அன்பு மரு மகனும், புஸ்பராணி (கோமதி) அவர்க ளின் அன்புக் கணவரும், பிரான்ஸை வதி விடமாகக் கொண்டவர்களான றமணன், றகுலன், ராஜு, ராஜி, றஜித்தன் (இலங்கை) ஆகியோரின் அன்பு தந்தையாரும், காலஞ்சென் றவர்களான திருநாவுக்கரசு, குகதாசன் மற் றும் குமாரசாமி (திரவியம்-கொழும்பு), உமா பாலன் (France), காலஞ்சென்ற உதய பாலன் மற்றும் நகுலேஸ்வரி (வள்ளி-இத் தாலி), சிவபாலன் (குட்டி-France) ஆகி யோரின் அன்பு சகோதரனும், சதானந்தம் (இந்தியா), நாகேஸ்வரி, உருத்திராணி (ஜேர் மனி), பரமேஸ்வரி, சற்குணேஸ்வரி, விஜ யன், உதயகுமார் (கொலண்ட்), காலஞ்சென்ற ஜெயகுமார் மற்றும் ராஜன் (லண்டன்) ஆகி யோரின் அன்பு மைத்துனரும், பிரான்ஸை வதிவிடமாகக் கொண்டவர்களான கல் பனா, ரஸ்மினா, தர்சினி, உதயகுமார் ஆகி யோரின் அன்பு மாமனாரும், றஷல், யோசுவா, ரெபேக்கா, றாகப், றெனோ, றெமி, றெஜித்தா, றெனுஜா, மதுவாந்தி, யது, ஆதவன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 22.06.2016 இன்று புதன்கிழமை பிரான்ஸ் நேரப்படி பிற்பகல் 2 மணியளவில் பிரான்ஸில் இடம்பெறும். இவ் அறிவித் தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:-ராஜு (மகன் France-0033651189299)
சுமித்திரன் (பெறாமகன்-077 711 3050)
றக்கா வீதி, சுண்டிக்குளி.
(5008)

# சப்ரகமுவ முதல்வருக்கு எதிராக பொதுமக்கள் பாரிய ஆர்ப்பாட்டம்

## நிகழ்வில் பங்கேற்காது திரும்பிச் சென்றார் மஹிபால



(கொழும்பு)

சப்ரகமுவ மாகாண முத லமைச்சர் மஹிபால ஹேரத் துக்கு எதிராக எம்பிலிப்பிட் டியவில் நேற்று முன்தினம் பொது மக்கள் ஆர்ப்பாட்ட மொன்றை நடத்தியுள்ள னர்.

எம்பிலிப்பிட்டிய பல்லே பெத்த பிரதேசத்தில் புதிய பேருந்து நிலையம் ஒன்றுக் கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்றுமுன்தினம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

சப்ரகமுவ முதலமைச்சர் மஹிபால ஹேரத் இந்த நிகழ் வின் பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவிருந்தார்.

இந்நிலையில் முதலமைச் சரின் வருகைக்கு முன்னர் பல்லேபெத்த பிரதேச வர்த் தகர்கள் தங்கள் வர்த்தக நிலையங்களை மூடி எதிர்ப புத் தெரிவித்ததுடன், பொது மக்களும் அடிக்கல் நடவி ருந்த இடத்தில் எதிர்ப்பு ஆர்ப பாட்டமொன்றில் ஈடுபட்டிருந் தனர்.

இதற்கிடையே பொதுமக் களின் எதிர்ப்பைக் கண்ட நிகழ்வின் ஏற்பாட்டாளர் களான சப்ரகமுவ மாகாண போக்குவரத்து ஆணைக் குழுவின் அதிகாரிகள் பல்லே பெத்த பேருந்து நிலைய நிர் மாணத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதியை இரத்துச் செய்வதாக வும் வேறொரு இடத்துக்கு அந்த நிதியை ஒதுக்கீடு செய் யப் போவதாகவும் ஒலிபெருக் கியில் அறிவித்துள்ளனர்.

இது பொதுமக்களின் ஆத்திரத்தை மேலும் அதி கரித்துள்ளது. இதனைய டுத்து அடிக்கல் நடுவதற்காக தோண்டப்பட்டிருந்த இடத் தைச் சுற்றி நின்று கொண்டு பொதுமக்கள் மூர்க்கமான முறையில் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

இதன் காரணமாக நிகழ் வில் கலந்து கொள்ள வருகை தந்த முதலமைச்சர் மஹி பால ஹேரத் திரும்பிச் செல்ல நேர்ந்துள்ளது. (இ-5)

# மீனவர்களின் பிரச்சினையை தீர்க்க பிரதமரை சந்திப்பதென தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கடற் றொழிலாளர் கள், கூட்டுறவு சங்க சம்மேளனங்கள் எதிர் நோக்குகின்ற பிரச்சி னைகளை தீர்ப்பது தொடர் பாகவும் உதவும் நோக்கில் சம்மே ளனத் தலைவர் வே. தவச்செல்வன் தலைமையில் கடந்த 18 ஆம் திகதி நடைபெற்ற கூட்டத் தில் பிர தமர் ரணில் விக்கி ரம சிங்கவை சந்திப்பது எனத் தீர்மானிக்கப்ப ட்டுள்ளது.

இக் கூட்டத்தில் பாராளுமன்ற குழுக்களின் பிரதி தலைவர் செல்வம் அடைக்கலநாதன் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத் தக்கது. (இ-7)

## வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை மானிப்பாய் கிராம உப அலுவலகம், ஆனைக்கோட்டை. ஆதன பெயர்மாற்ற அறிவித்தல்

வட்டாரம்:-13
ஆதன இலக்கம்:-57 (புதிய இலக்கம்)
அரசடி ஒழுங்கை
கிராம சேவையாளர் பிரிவு:-J/141 சண்டிலிப்பாய் வடக்கு

வட்டாரம் 13,அரசடி ஒழுங்கை,ஆதன இலக்கம் 57 (புதிய இலக்கம்) இல் அமைந்துள்ள (உறுதிப்படி வடமாகாணம், யாழ்ப்பாணம், வலிகாமம் மேற்கு பகுதி,மானிப்பாய் கோவிற்பற்று, சண்டிலிப்பாயிறை ''கொக்குமான் கூடல்'' என்னும் பெயருள்ள நிலப்பரப்பு 01 குளி 15 கொண்ட இவ்வாதனமானது சண்டிலிப்பாய் வடக்கு,கொம்பனிப்புலத்தைச் சேர்ந்த இராமன் நாகமுத்து பெண் தங்கம்மா ஆகிய இவர்களால் அதேயிடத்தைச் சேர்ந்த இவர்களின் மகள் இரத்தினசிங்கம் கைம்பெண் சகுந்தலாதேவி என்பவருக்கு நன்கொடை உறுதி மூலம் பிரசித்த நொத்தாரிஸ் திரு.நன்னியன் தம்பிமுத்தன் அவர்கள் முகதாவில் 8949 ஆம் இலக்க 18.11.2012 ஆம் திகதிய நன்கொடை உறுதி மூலம் தமக்கு சொந்தமென தெரியப்படுத்தி எமது மானிப்பாய் கிராம உப அலுவலக (ஆனைக்கோட்டை) ஆதனப் பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளார். நில அளவையாளர் திரு.எஸ்.பாலேந்திரன் அவர்களால் வரையப்பட்ட 2016/01/85 ஆம் இலக்க 2016.05.20 ஆம் திகதிய நில அளவைப்படத்தின் பிரகாரம் இவ் ஆதனமானது ''கொக்குமான் கூடல்'' நிலப்பரப்பு 01 குளி 15 கொண்ட குறித்த ஆதனத்தின் பெயர்மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 14 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு உரிமை கோரப்படாத விடத்து குறித்த ஆதனமானது இரத்தினசிங்கம் கைம்பெண் சகுந்தலாதேவி என்பவர் பெயருக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை அறியத்தருகின்றேன். (5009)

செயலாளர்,வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்.

# இராசி பலன்

22.06.2016
(ஆனி 08, புதன்கிழமை)
சூரிய உதயம் காலை 5.57 மணிக்கு
துதியை மாலை 5.45 மணிவரை
பூராடம் முற்பகல் 9.18 மணிவரை
சுபநேரம் 4.24-5.54 மணிவரை
இராகுகாலம் 11.54-1.24 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | சூரி சுக் புத |
| கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் திருவாதிரை பிற்பகல் 3.32 இற்கு மகர-சந் | | |
| | | | குரு ராகு |
| | சனி | செவ் | |

**மேடம்:** நினைத்த காரியத்தை நினைத்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், கனவு பலிதமுண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**இடபம்:** சுணங்கிய காரியங்கள் மாலை நேரத்திற்குப் பின் கைகூடலாம், மகிழ்ச்சிதரும் பயணங்கள் இடம்பெறலாம், ஆன்றோர்களின் சந்திப்புண்டு, ஆரோக்கியமான நாள்.

**மிதுனம்:** காலையில் கலகலப்பாகவும் மாலையில் சலசலப்புமாக அமையலாம், சில பிரச்சினைகளை கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**கடகம்:** அன்பு நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம், ஆதாயம் தரும் வேலையொன்றில் அக்கறை காட்டுவீர்கள், தொலைதூரத்திலிருந்து வரும் தகவல்கள் மகிழ்ச்சி தரும்.

**சிம்மம்:** போட்டிகளுக்கு மத்தியில் முன்னேற்றம் காண்பீர்கள், நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், போசன சுகமுண்டு.

**கன்னி:** சொல்லைச் செயலாக்கிக் காட்டுவீர்கள், வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், மைத்துனர் வழியில் ஒத்துழைப்புகள் கிடைக்கும், சுப செலவுகள் கூடும்.

**துலாம்:** நம்பி வந்தவர்களுக்கு கைகொடுத்து உதவுவீர்கள், பெற்றோர் வழியில் பிரியம் கூடும், உற்சாகத்துடன் பணி புரிவீர்கள், பிரச்சினைகளிலிருந்து விடுபடுவீர்கள்.

**விருச்சிகம்:** உடன் பிறப்புக்கள் உதவிக் கரம் நீட்டுவர், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், வெற்றிகரமான தகவல்கள் வந்து சேரலாம்.

**தனுசு:** ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு, உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள், தொலைபேசி வழியில் பொன்னான தகவல்கள் வந்து சேரலாம்.

**மகரம்:** தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், பெரியோர்களின் உதவியால் சில நன்மைகள் நடைபெறலாம், வருமானத்தை அதிகரிக்கும் வழியில் நாட்டம் செல்லும்.

**கும்பம்:** சுபகாரியச் செலவுகள் இடம்பெறலாம், சிறிய வேலை ஒன்றிற்காக பலமுறை அலைய நேரிடலாம், தொழிலில் சில மாற்றங்களைச் செய்ய முற்படுவீர்கள்.

**மீனம்:** புதிய பொருட்சேர்க்கையுண்டு, அரசு தொடர்பான காரியங்கள் அனுகூலமாக அமையும், நண்பர்கள் வட்டம் விரிவடையும், உற்சாகமான நாள்.

# போதைப்பொருளை எதிர்த்து அடையாள உண்ணாவிரதம்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச போதைப்பொருள் எதிர்ப்பு தினமான ஜூன் 26 ஐ முன்னிட்டு வட பிரதேச நல்லொழுக்க சம்மேளன ஏற்பாட்டில் அடையாள உண்ணாவிரதப் போராட்டம் எதிர்வரும் 27 ஆம் திகதி திங்கட்கிழமை சங்கானை மத்திய பேருந்து நிலையத்தில் காலை 8 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணிவரை இடம்பெறவுள்ளது.

## 27 ஆம் திகதி சங்கானையில்

சங்கானை வலி.மேற்கு பிரதேச செயலர் அ.சோதிநாதன் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்படும் இவ் உண்ணாவிரதப் போராட்டத்தில் சித்தன் கேணி சிவன்தேவஸ்தான பிரதம குருவும் வீணாகான குருபீட அமைப்பாளர் சிவஸ்ரீ. சபா.வாசுதேவக் குருக்கள், கொழும்புத்துறைகுருமட அருட்பணிஅசெபஸ்ரியன்அடிகளார், யாழ்.மாநகரசபை ஆணையாளர் பொ.வாகீசன், சங்கானை கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஆ.றோபேட் உதயகுமார், ஓய்வு பெற்ற ஆசிரிய ஆலோசகரும் உப அதிபருமான த.தர்மராசா, சங்கானை சுகாதார வைத்திய அதிகாரி ஆகியோர் உரை நிகழ்த்தவுள்ளனர்.

அடையாள உண்ணா விரதத்தை வடமாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே நிறைவு செய்து வைக்கவுள்ளார். (இ-5)

## புகைத்தலிலிருந்து மாணவர்களைப் பாதுகாக்கும் விழிப்புணர்வு நிகழ்வு ஸ்ரான்லிக் கல்லூரியில்




(யாழ்ப்பாணம்)

சர்வதேச புகைத்தல் மறுப்பு தினத்தை முன்னிட்டு மாணவர்களை புகைத்தலிலிருந்து பாதுகாப்பதற்கான நோக்கத்துடன் விழிப்புணர்வு நிகழ்வொன்று நேற்று முன்தினம் திங்கட்கிழமை யாழ்.ஸ்ரான்லி கல்லூரியில் நடைபெற்றது.

இந்த விழிப்புணர்வு நிகழ்வில் சிறுவர்கள், இளைஞர்களை எவ்வாறு புகையிலை கம்பனிகள் நுட்பமான முறையில் தந்திரோபாயங்களை பயன்படுத்தி இலக்கு வைக்கின்றார்கள்.அதாவது சிறுவர்கள் இளைஞர்களுக்கு விரும்பிய சினிமா பிரபலங்களின் திரைப்படங்கள், கார்ட்டுன் திரைப்படங்கள், சிறுவர்களுக்கு விரும்பிய விளையாட்டுப் பொருட்கள் மூலமும் எவ்வாறு இலக்கு வைக்கின்றனர் என்றும் புகையிலை பாவனையினால் ஏற்படக் கூடிய இனங்காணக்கூடிய பாதிப்புக்களான உதடு கறுத்தல், வாய்த்துர்நாற்றம், வயதில முதிர்ந்த தோற்றம், கண்கள் கலங்கி சிவத்தல் , பற்களில் காவி படிதல் போன்றவை பற்றிய தெளிவினை மாணவர்களுக்கு கருத்துரைகள் மூலம் தெளிவுபடுத்தியிருந்தனர்.

இந்த நிகழ்வில் யாழ். மாநகரசபை வைத்திய அதிகாரி திருமதி சிவதாஸ், பொதுச் சுகாதார பரிசோதகர் பா.கிசோக குமார், மதுபானம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலைய மாவட்ட இணைப்பாளர் கோகுலஸ்வரன மற்றும் தேசிய அபாய ஔடதங்கள் கட்டுப்பாட்டுச்சபையின் யாழ். மாவட்ட உளவளத்துணையாளர் அ.எட்வின் றொஜர் ஆகியோர் கலந்து கொண்டு கருத்துரைகளை வழங்கியிருந்தனர். (இ-9)




## மத்திய கல்லூரி நடத்தும் சிறுவர் நாடகப் போட்டி

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் 200 ஆவது ஆண்டு நிறைவினை முன்னிட்டு கல்லூரியின் நாடக மன்றத்தின் ஒருங்குபடுத்தலில் வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான சிறுவர் நாடகப் போட்டி ஒன்றினை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி நடத்தவுள்ளது.

போட்டிக்கான நிபந்தனைகள்

➢ நாடகத்தில் பாத்திர மேற்று நடிக்கும் நடிகர்களின் எண்ணிக்கை 16 தொடக்கம் 20 ஆக இருத்தல் வேண்டும்.

➢ நடிகர்கள் ஆரம்பப் பிரிவின் இவ் வருடம் புலமைப் பிரிவில் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்கள் தவிர்ந்த தரம் 4 மற்றும் அதற்கு உட்பட்ட மாணவர்களாக இருத்தல் வேண்டும். போட்டியில் பங்கு கொள்ளும் மாணவர்களுடைய பிறந்த திகதி, முழுப்பெயர், பாடசாலை அதிபரினால் உறுதிப்படுத்தப் பட்டிருத்தல் வேண்டும்.

➢ நாடகத்தில் பங்கு கொள்ளும் பிற்பாட்டுக்காரர்களின் எண்ணிக்கை 10 பேருக்கு மேற்படலாகாது. இவர்கள் பாத்திரமேற்று நடிப்பவர்களுள் கணிக்கப்படமாட்டார்கள்.

➢ பக்கவாத்தியம் வாசிப்போர் அதே பாடசாலையைச் சேர்ந்த மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களாக இருத்தல் வேண்டும்.

➢ நாடகத்தின் கருப்பொருளானது ஜீவகாருண்யம், அன்பு, நட்பு, கருணை, ஒற்றுமை, பிறருக்கு உதவி செய்தல், மூத்தோர் சொற்கேட்டல் முதலான விடயங்களைக் கொண்டு சுய ஆக்க பிரதியாக அமைதல் வேண்டும்.

➢ ஆற்றுகைக்கான நேரம் 20 நிமிடங்கள் ஒரு நிமிடம். முன் பின் விலகலாக கருத்தில் கொள்ளப்படும். அதற்கு குறைவாக அல்லது மேலதிகமாக ஆற்றுகை நேரம் அமையுமாயின் ஒவ்வொரு நிமிட நேர விலகலுக்கும் ஒரு புள்ளிவீதம் குறைக்கப்படும்.

➢ நாடக ஆற்றுகைக்கான மேடை ஒழுங்கமைப்பிற்கு 10 நிமிடங்கள் மாத்திரமே தரப்படும். மேலதிகமாக எடுக்கப்படும் நேரத்திற்கு நிமிடத்திற்கு ஒரு புள்ளி வீதம் ஒட்டுமொத்த ஆற்றுகைக்கான புள்ளியில் இருந்து கழிக்கப்படும்.

மேடையில் உள்ள ஒளியுடனே ஆற்றுகை செய்யப்பட வேண்டும். பிரத்தியேக ஒளியமைப்புக்கள் யாவும் செய்ய அனுமதிக்கப்படமாட்டாது.

➢ நாடகஎழுத்துருப்பிரதிகள் போட்டி நடைபெறும் போது நடுவர்களிடம் கையளிக்கப்படுதல் வேண்டும். அத்துடன் சுய ஆக்கம் என்பதனை பாடசாலை அதிபர் உறுதிப்படுத்த வேண்டும்.

➢ நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது. போட்டிகள் தொடர்பாக முறைப்பாடுகள் மேற்கொள்ள வேண்டி ஏற்படின் நாடக பொறுப்பாசிரியர் ஊடாக எழுத்துமூலம் போட்டிமுடிவு அறிவிக்கப்படுவதற்கு முன்னர் தரப்படவேண்டும். போட்டிமுடிவு அறிவிக்கப்பட்ட பின் முடிவுகளில் எந்தவொரு மாற்றமும் செய்யப்படமாட்டாது.

➢ நாடகப்போட்டிகள் எதிர்வரும் ஜூலை மாதம் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் தம்பர் மண்டபத்தில் இடம்பெறும். இந் நாடகப் போட்டிக்கு பார்வையாளர்கள் அனுமதிக்கப்படு வார்கள்.

➢ போட்டியில் பங்குபற்றுகின்ற பாடசாலைகள் விண்ணப்பப்படிவங்களினை ஜூலை மாதம் முதலாம் திகதிக்கு முன்பாக சிறுவர் நாடகப் போட்டி, அதிபர், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். போட்டியில் பங்கு பற்றுகின்ற பாடசாலைகள் தமதுவரவினை 0779773538 என்னும் தொலைபேசி இலக்கத்தின் ஊடாக ஜூலை 12 ஆம் திகதிக்கு முன்னர் வரவினை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும் என பாடசாலை அதிபர் எஸ்.கே.எழில்வேந்தன் அறிவித்துள்ளார். (இ

# திக்கம் வடிசாலை பிரச்சினைகளைத் தீர்க்க இணக்கம்

கடந்த சில வருடங்களாக இயங்காத நிலையில் இருக்கும் திக்கம் வடிசாலையில் பல்வேறு பிரச்சினைகள் நிலவுகின்றன. இவற்றில் சிலவற்றை முன்னுரிமை அடிப்படையில் தீர்த்து வைப்பதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. வடமாகாண கூட்டுறவு அமைச்சர் பொ.ஐங்கரநேசனுக்கும் திக்கம் வடிசாலையை இயக்கி வரும் வடமராட்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச சங்கங்களின் கொத்தணியின் இயக்குநர் சபையினருக்கும் இடையிலான கலந்துரையாடல் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றது.

திக்கம் வடிசாலையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலின் போதே வடிசாலையில் நிலவும் பிரச்சினைகள் சிலவற்றை உடனடியாகத் தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது.

திக்கம் வடிசாலையில் கடந்த காலங்களில் மதுபான உற்பத்தி இடம்பெறாததால், பணியாளர்களுக்கு நீண்ட காலமாக வேதனம் வழங்காத நிலை நீடித்து வருகிறது. பல பணியாளர்கள் வேறு சங்கங்களுக்கு இடம்மாற்றப்பட்டபோதும் வடிசாலையின் பாதுகாப்புக் கடமையில் இருக்கும் ஆறு பணியாளர்களை அவர்களது சேவையின் அவசியம் கருதி இடம் மாற்றம் செய்ய முடியவில்லை.

இதனால் வேதனம் இல்லாமலே பெரும் சிரமங்களுக்கு மத்தியில் இவர்கள் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டுவருகின்றனர். இவர்களுக்கு ஜூன் மாதம் முதல் எதிர்வரும் டிசெம்பர் மாதம் வரையான காலப்பகுதிக்கு கொத்தணியில் இடம்பெற்றுள்ள கரவெட்டி, பருத்தித்துறை மற்றும் அச்சுவேலி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் வேதனம் வழங்க வேணடும் என இக்கலந்துரையாடலில் முடிவாகியுள்ளது.



மேலும் திக்கம் வடிசாலையில் ஒரு இலட்சம் லீற்றர் வரையான மதுசாரம் கையிருப்பில உள்ளது. இதனை தென்னிலங்கையில் உள்ள மதுபான உற்பத்தியாளர்களுக்கு விரைவில் வழங்குவதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுப்பது எனவும், இதிலிருந்து பெறப்படும் வருவாயில் ஊழியர்களுக்கான கடந்தகால வேதனக் கொடுப்பனவுகளை வழங்குவதெனவும், திக்கம் வடிசாலை இதுகாலவரை பெற்ற கடன்களை மீளளிப்பது எனவும் முடிவாகியுள்ளது.

திக்கம் வடிசாலைக்கான உரிமத்தை பனை அபிவிருத்திச்சபையே கொண்டுள்ளது. இந்த உரிமத்தை முற்று முழுதாகவடமராட்சி பனைதென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியிடம் கையளிக்க வேண்டும் என்று கொத்தணியும் வடக்கு மாகாணசபையும் கோரிவருகின்றன. இது தொடர்பாக மத்திய அரசாங்கம் இன்னமும் முடிவெடுக்காததால், திக்கம் வடிசாலையின் செயற்பாடுகளை உடனடியாக முன்னெடுப்பதற்கு வசதியாக ஒரு வருட காலத்துக்கு கொத்தணியிடம் உரிமத்தைக் கையளிக்கும் ஒப்பந்தம் ஒன்றை மேற்கொள்வதற்குப் பனை அபிவிருத்திச் சபையிடம் கோருவதெனவும் இதன்போது தீர்மானிக்கப்பட்டுள்ளது.

திக்கம் வடிசாலை தற்போது எதிர்கொண்டுள்ள நெருக்கடி நிலையில் இருந்து மீள்வதற்கு தற்போதுள்ள இயக்குநர் சபையுடன் மேலதிகமான உறுப்பினர்களை நியமிக்குமாறு, கொத்தணியின் பொதுச்சபை தீர்மானம் ஒன்றை நிறைவேற்றிக் கூட்டுறவு ஆணையாளருக்கு அனுப்பி வைத்திருந்தது. இதன் அடிப்படையில் யாழ். மாநகரசபையின் முன்னாள் ஆணையாளர் செ.சரவணபவா இயக்குநா சபையின் தலைவராகவும் வடமாகாண பனை தென்னை வளக்கூட்டுறவுச்சங்கங்களின் சமாசத்தின் முன்னாள் தலைவர் பு.குணரத்தினம் உறுப்பினராகவும் தற்போது நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இவர்களும் வடக்கு மாகாண சபை உறுப்பினர் வே.சிவயோகன், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ.மோகன் ஆகியோரும் இக்கலந்துரையாடலில் கலந்து கொண்டிருந்தனர். (இ-5)

# நினைத்தால் நடத்துவேன்

## தேர்தல்கள் ஆணையாளர் தேசப்பிரிய அறிவிப்பு

(கொழும்பு)

**எல்லை நிர்ணயப் பணிகள் மாத்திரம் உள்ளூராட்சி மன்ற தேர்தல்கள் காலம் தாழ்த்தப்படுவதற்கான காரணம் இல்லை. அதற்கான காரணங்களை நீதிமன்றத்திற்கு அறிவித்துள்ளதால் அது தொடர்பில் தற்போதைக்கு கருத்து வெளியிட நான் தயாராக இல்லை. எல்லை நிர்ணய பணிகள் தொடர்பிலான அறிக்கை கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் ஆணைக்குழுவிற்கு தேர்தலை நடத்துவதற்கான அதிகாரம் உள்ளது என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.**



எவ்வாறாயினும் தற்போது எல்லை நிர்ணய பணிகள் முற்றுபெற்றமை தொடர்பிலான அறிக்கை எமக்கு கிடைக்கும் பட்சத்தில் அதிலிருந்து இரு மாதங்களில் தேர்தலை நடத்த முடியும் என்றும் ஓகஸ்ட் 31 ஆம் திகதி எல்லை நிர்ணயம் தொடர்பிலான அறிக்கைகள் எமக்கு கிடைக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

கொழும்பு ராஜகிரியவில் அமைந்துள்ள தேர்தல்கள் செயலகத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது நாட்டின் அரசியலமைப்பு வலுவாக்கம், நிறைவேற்று அதிகாரத்தை நடைமுறைப்படுத்தல் அடிப்படை கட்டமைப்புக்களை தீர்மானிப்பவர்களை உருவாக்க தேர்தல் அவசியம்.

அதேபோல் நாட்டை நிர்வகிப்பதற்கும் அரசாங்கம் . ஒன்று அவசியம். எனவே எமது மக்களுக்கு அரசாங்கம் ஒன்று தேவையாயின் சகலரும் தமது வாக்குரிமையை பாதுகாக்க வேண்டும்.

அதனால் அனைவரும் கண்டிப்பாக வாக்குச்சீட்டில் பெயரை பதிவு செய்ய வேண்டும். கடந்த நாட்களில் இயற்கை அனர்த்தங்களுக்கு முகம் கொடுத்த பகுதிகள் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் வாக்கு சீட்டுக்கள் பயன் படுத்தும் நடவடிக்கைகள் முற்றுப் பெற்றுள்ளன.

எனவே சகலரும் தமது பெயர் விபரங்கள் அடங்கிய விண்ணப்பங்களை ஜூலை 15 ஆம் திகதிக்கு முன்னதாக கிராம சேவகரிடத்தில் வழங்க வேண்டும். அவ்வாறு வழங்க முடியாவிட்டாலும் வாக்குச் சீட்டுக்கள் கிடைக்கா விட்டாலும் அது தொடர்பில் கிராம சேவகருக்கு அறிவிப்பது அவசியமாகும்.

சர்வஜன வாக்கெடுப்பை வலுப்படுத்தும் தேசமாக இலங்கையை மாற்றியமைக்க எதிர்பார்க்கின்றோம். முக்கியமானது சரியான நேரத்தில் தேர்தலை நடத்து வதாகும்.

அதனால் இந்த முறை வீதியில் இருப்பவர் உட்பட சகலரையும் வாக்குச்சீட்டில் உள்வாங்கியுள்ளோம். அத்துடன் கொழும்பை பொறுத்தவரையில் 60 ஆயிரம் பேர் வரையில் வாடகை வீடுகளில் வசிப்பவர்கள்.

இவர்களுக்கு வாக்குரிமையை பெற்றுக்கொள்ள முடியும். இவர்களின் சொந்த வசிப்பிடம் கருத்திற் கொள்ளப்பட மாட்டாது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)


### பெயர்மாற்றம்

ஆனைக்கோட்டை 4 ஆம் கட்டையில் வசிக்கும் செல்வரத்தினம் சந்திராதேவி ஆகிய எனது பெயர் பிறப்பு அத்தாட்சி பத்திரத்தில் மாத்திரம் செல்வரத்தினம் மேரிகத்தரினா் என்று பதியப்பட்டுள்ளது. ஏனைய ஆவணங்களில் செல்வம் சந்திராதேவி என பதியப்பட்டுள்ளது. எனவே இன்று முதல் என் சார்ந்த சகல ஆவணங்களிலும் செல்வரத்தினம் சந்திராதேவி என்ற பெயரையே பயன்படுத்துவேன் என இத்தால் அனைவருக்கும் அறியத் தருகின்றேன்.

(4475) உண்மையுள்ள
செல்வரத்தினம் சந்திராதேவி.



### பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது பாடசாலை
ஆசிரியர்
திரு. லதிஸ்லாஸ்
அமலானந்குமார்
(SLPS 3
B.A. (Gen),
PGDE,
Bp.Trd (Pri)

அவர்கள் அதிபர் சேவை தரம் 3 இற்கு பதவி உயர்வு பெற்றதையிட்டு மகிழ்ச்சி அடைவதோடு மேலும் அவர் பல பதவி உயர்வுகளைப் பெற்று உயர்வடைய வேண்டும் என்று வாழ்த்துகின்றோம்

(5011)

ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலைச் சமூகம்,
யா/ மாரீசன்கூடல் றோ.க.த.க.பாடசாலை.


# எல்லை நிர்ணயம் முடியாமல் தேர்தலை நடத்த இயலாது

## பைசர் முஸ்தபா தெரிவிப்பு

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் விடயத்தில் புதிய முறைமையில் தொகுதிகளின் எல்லை நிர்ணயம் மேற்கொள்வதில் பல்வேறு சிக்கல்கள் எழுந்துள்ளன. எல்லை நிர்ணய சபையின் வேலைத் திட்டத்திற்கு இறுதி நாள் காலக்கெடு இதுவரையில் கொடுக்க முடியாது உள்ளது என மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் பைசர் முஸ்தபா தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கில் அரசியல் கட்சிகளின் ஆலோசனைகளைப் பெற்றும் பூகோள அமைவுகளின் அடிப்படையிலும், அரநாயகவில் புதிய குடியேற்றத்தின் பின்னரும், வில்பத்துவில் சட்டவிரோத குடியேற்றம் தவிர்ந்தும் எல்லை நிர்ணயம் செய்யப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

உள்ளூராட்சி சபைத் தேர்தலை பிற்போட்டு ஐக்கிய தேசியக் கட்சியினருக்கு வாய்ப்புகளை நாம் ஏற்படு த்திக் கொடுப்பதாக பல்வேறு விமர்சனங்களை முன் வைக்கின்றனர். மகிந்த அணியினர் மட்டும் அல்லாது எமது கட்சியிலும் சிலர் அவ் வாறான விமர்சனங்களை முன்வைக்கின்றனர்.

எனினும் இந்த குற்றச்சாட்டுகளை ஒருபோதும் என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது. இதுவரை எல்லை நிர்ணயம் செய்யப்பட்டிருந்த முறைமையில் எம்மால் தேர்தலை நடத்த இயலாது. குளிரூட்டப்பட்ட அறைகளில் இருந்து தீர்மானிக்கப்பட்ட எல்லை நிர்ணய முறைமை களை இப்போதும் எம்மால் நடைமுறைப்படுத்த இயலாது. புதிதாக அனைத்து மாவட்டங்களினதும் எல்லை நிர்ணயம் தொடர்பில் மாற்றம் செய்ய வேண்டியுள்ளது. எல்லை நிர்ணயம் சரியான முறையில் மேற்கொள்வ தென்பது இலகுவில் செய்க் கூடிய விடயம் அல்ல.

மேலும் கடந்த ஆண்டு பொதுத் தேர்தலின் பின்னர் புதிய எல்லை நிர்ணய வேலைகளை ஆரம்பித்து இந்த ஆண்டு பெப்ரவரி மாத மளவில் நிறைவு செய்ய முடியும் என கருதப்பட்டது. எனினும் தொகுதிகளின் எல்லை நிர்ணயம் மேற்கொண்ட போது பல்வேறு சிக்கல்கள் எழுந்துள்ளன.

அதேபோல் மக்களின் சார்பில் பல்வேறு முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டும் உள்ளன.. ஆகவே அவற்றையும் கருத்தில் கொண்டு சரியான முறைமையை கையாண்டு இந்த எல்லை நிர்ணய வேலைகளை செய் வதென்பது இலகுவான காரி யம் அல்ல. எல்லை நிர்ணய சபையின் வேலைத் திட்டத்திற்கு இறுதி நாள் காலக்கெடு இதுவரையில் கொடுக்க முடியாதுள்ளது.

எனினும் இப்போது வரையில் பெரும்பாலான மாவட்டங்களில் எல்லை நிர்ணய வேலைகள் முடிவுக்கு வந்துள்ளன. இன்னும் எட்டு மாவட்டங்களின் எல்லை நிர்ணய பணிகள் மட்டுமே உள்ளன. அவற்றை விரைவில் முடிக்க நாம் முயற்சித்து வருகின்றோம். எவ்வாறு இருப்பினும் இன்னும் சில தினங்களில் முழுமைப்படுத்த முடியும் என நம்புகின்றோம். கால அவகாசம் தேவைப் படுகின்றது. அனைவரும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

பழைய முறைமையில் உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்தக்கூடாது என அனைத்து கட்சிகளும் தெரிவிக்கின்றன. ஆனால் உடனடியாக தேர்தலை நடத்த வேண்டும் எனவும் கூறுகின்றனர். புதிய முறைமையில் தேர்தலை நடத்தி மக்களின் பூரணமான பங்களிப்பை பெற்றுக்கொள்ள வேண்டும் எனின் அதற்கான கால அவகாசத்தையும் எமக்கு கொடுக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)


### கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை

**மணமகள் தேவை**

பிறப்பு: 1977 இந்து
நட்சத்திரம்: அத்தம்
கி.பா:50 உயரம்: 5'6"
தகைமை/தொழில்:O/L/ சொந்ததொழில்
தொ.இ: B/5968

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: சித்திரை
கி.பா: 43
உயரம்: 5'8"
தகைமை/தொழில்:A/L/ சொந்ததொழில்
தொ.இ: B/5969

பிறப்பு: 1973 இந்து
நட்சத்திரம்: அத்தம்
கி.பா: 19 செவ் 2 இல்
உயரம்: 5'9"
தகைமை/தொழில்: A/L/ அவுஸ்திரேலியா PR
தொ.இ: B/5970

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: அனுசம்
கி.பா: 33
தகைமை/தொழில்: BBA/ கணக்காளர்
தொ.இ: B/5972

**மணமகன் தேவை**

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம்
கி.பா: 27
உயரம்: 5'1"
தகைமை/தொழில்:HND/தனியார் தொழில்
தொ.இ: G/5582

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: உத்திரட்டாதி
கி.பா: 16
உயரம்: 5'2"
தகைமை/தொழில்:BA
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ: G/5584

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: உத்தரம்
கி.பா: 35 செவ் 4 இல்
உயரம்: 5'
தகைமை/தொழில்:A/L
எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்
தொ.இ: G/5592



பிறப்பு: 1973 இந்து
நட்சத்திரம்: உத்தராடம்
கி.பா: 22 உயரம்: 5'6"
தகைமை/தொழில்O/L/தனியார் தொழில்
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ: G/5594

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:-021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

# யாழிலிருந்து கொழும்பு நோக்கி

# பயணித்த புகையிரதத்துடன் டிப்பர் மோதுண்டு வாகனச் சாரதி படுகாயம்

## முறிகண்டியில் சம்பவம்

(முல்லாவி)

முல்லைத்தீவு முறிகண்டி பகுதியில் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கி பயணித்துக்கொண்டிருந்த புகையிரதத்துடன் டிப்பர் வாகனம் மோதுண்டு விபத்துக்குள்ளானதில் வாகன சாரதி படுகாயம் அடைந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு அதிதீவிர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவ்விபத்தின்போது டிப்பர் வாகனம் கடும்சேதமடைந்ததுடன் புகையிரதத்தில் பொருத்தப்பட்டிருந்த கைபிடிகள் சேதமடைந்தன.

அத்துடன் புகையிரதமும் சேதமடைந்ததாகக் கூறப்படுகின்றது.

இச்சம்பவம் நேற்று காலை 7.15 மணியளவில் அக்கராயன் முறிகண்டி பிரதான வீதியில் இடம்பெற்றுள்ளது.

இதன்போது யாழ்ப்பாணம் காரைநகரைச் சேர்ந்த சிவலிங்கம் குகதாஸ் (வயது-35) என்ற ஒரு பிள்ளையின் தந்தையே படுகாயமடைந்தவராவார்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

அக்கராயன் பகுதியிலிருந்து மணல் ஏற்றிச்சென்ற டிப்பர், குறித்த வீதியில் அமைந்துள்ள புகையிரத கடவையை கடக்க முற்பட்ட போது, யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கி பயணித்துக்கொண்டிருந்த புகையிரதத்துடன் மோதுண்டு குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது, இதன்போது டிப்பர் வாகனத்தை செலுத்திய சாரதி படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

குறித்த பாதுகாப்பற்ற புகையிரதக்கடவையில் புகையிரதம் கடப்பதற்கான சமிக்ஞை ஒளி ஒளிர்ந்து கொண்டிருக்கையில் டிப்பர் வாகனம் அவதானிக்காது கடவையை கடக்க முற்பட்டமையை அடுத்து குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது, விபத்தில் டிப்பர் வாகனம் கடும் சேதங்களிற்குள்ளானதுடன், புகையிரதத்தில் பொருத்தப்பட்டிருந்த கைபிடி களும், புகையிரதமும் சேதமடைந் துள்ளன, புகையிரதத்தின் மிதி பல கையில் பயணிப்பவர்களிற்கு இவ்விபத்து அச்சுறுத்தலாக அமைந்துள்ளது.

குறித்த விபத்து தொடர்பிலான விசாரணைகளை மாங்குளம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர. (2-15-281-312-307)

# தமிழர்களின் மீள்குடியேற்றம் கானல் நீராக மாறியுள்ளது

## செல்வம் எம்.பி.

தமிழ் மக்களுக்கான மீள்குடியேற்றம் கானல் நீராகவுள்ளதாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

சர்வதேச அகதிகள் தினம் இன்று அனுஷ்டிக்கப்படும் நிலையில் தமிழ் மக்களின் மீள்குடியேற்றம் தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனை தொடர்பு கொண்டு வினவிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அத்துடன் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பல ஆண்டுகளாக தமிழ் மக்கள் அகதி வாழ்க்கை வாழ்ந்து வருகின்றனர்.

இவ்வாறான ஒரு நிலையில் இந்த ஆண்டு இறுதிக்குள்ளாவது தமிழ் மக்களின் அகதி வாழ்க்கைக்கு அரசாங்கம் ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என அவர் கேட்டுக்கொண்டுள்ளார். (2-281)

# சிறார்களுக்கு பரிசுப் பொதிகள்

(சோலைநகர்)

கிளிநொச்சி மக்கள் வங்கி கிளையினரால் 150 முன்பள்ளி சிறார்களுக்கு பரிசுப் பொதிகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

கிளி/தர்மபுரம் இல.01 அ.த.க .பாடசாலையில் கண்டாவளை பிரதேச ஒன்றிணைந்த முன்பள்ளிகளின் மழலைகள் விளையாட்டு விழா நேற்று முன்தினம் கரைச்சி பிரதேச முன்பள்ளிகளின் உதவிக் கல்விப் பணிப்பாளர் செ.விந்தன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்துகொண்ட கிளிநொச்சி மக்கள் வங்கியின் சிறுவர் மேம்பாட்டுப் பகுதி உத்தியோகத்தர் ச.ஐங்கரன் பதினைந்து முன்பள்ளிகளைச் சேர்ந்த 150 சிறார்களுக்கு இப் பரிசுப் பொதிகளை வழங்கி வைத்தார். (2-309)

# திருடிய பொருளை அதே கிராமத்திலேயே விற்று பணம்பெற்ற நபர் விளக்கமறியலில்

தனது கிராமத்திலேயே திருடிய தொலைக்காட்சி பெட்டியை மீண்டும் அதே கிராமத்திற்குள்ளேயே விற்று பணம் பெற்ற திருடன் ஒருவர் வசமாக மாட்டிக்கொண்ட சம்பவம் ஒன்று முல்லைத்தீவு கேப்பாபிலவு கிராமத்தில் கடந்த 17ஆம் திகதி இடம் பெற்றுள் ளது.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

சம்பவ தினத்தன்று இரவு குறித்த வீட்டின் உரிமையாளர் குடும்பத்துடன் உறக்கத்தில் இருந்தவேளை பிரஸ்தாப நபர் மிகவும் இலாவகமாக வீட்டுக்குள் நுழைந்து வீட்டிற்குள் இருந்த பெறுமதியான தொலைக்காட்சிப் பெட்டியை திருடிச்சென்று அதே கிராமத்தைச் சேர்ந்த இன்னொரு நபருக்கு மிகவும் குறைந்த விலைக்கு விற்றுள்ளார். பெறுமதியான தொலைக்காட்சிப்பெட்டியை மிகவும் குறைந்தவிலைக்கு பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு கிடைத்த அந்த நபரும் வேறு விடயங்களைப்பற்றி சிந்திக்காமல் அதை கொள்வனவு செய்துள்ளார். மறுநாள் காலை திருட்டு சம்பவம் தொடர்பில் முள்ளியவளை பொலிஸாருக்கு கிடைத்த முறைப்பாட்டை அடிப்படையாக வைத்து உடனடியாக களத்தில் இறங்கிய பொலிஸார் சந்தேக நபரை கைது செய்து விசாரித்ததில் உண்மை வெளிவந்தது. இதனையடுத்து உண்மையை ஒத்துக்கொண்ட அவர் தன்னிடம் தொலைக் காட்சி பெட்டியை கொள்வனவு செய்த நபரையும் காட்டிக்கொடுத்துள்ளார். இதே வேளை குறித்த சந்தேக நபரை கடந்த 19 ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்ட பதில் நீதவான் முன்னிலையில் முற்படுத்திய போது அவரை 14 நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது. அத்துடன் இவ்வாறான திருட்டுப் பொருட்களை கொள்வனவு செய்வோரும் நீதிமன்றம் செல்ல வேண்டி வரும் என பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர். (2-310)




# வீடுகள் கட்டி முடிக்கப்படாத குடும்பங்களுக்கு தலா பத்து சீமெந்து பக்கெற்றுக்கள் வழங்கல்



கிளி/ புதுமுறிப்பு கேஎன் 37 கிராம அலுவலர் பிரிவின் கீழ் உள்ள புதுமுறிப்பு சோலை நகர், சாலோம் நகர் ஆகிய இடங்களைச் சேர்ந்த 60 குடும்பங்களுக்கு 600 சீமெந்துப் பக்கெற்றுக்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன.

ஒரு குடும்பத்திற்கு தலா 10 சீமெந்துப் பக்கெற்றுக்கள் வீதம் வழங்கப்பட்டன.

இந்தச் சீமெந்து பக்கெற்றுக்கள் நேற்றுக் காலை 9.30 மணியளவில் புதுமுறிப்பு பொது நோக்கு மண்டபத்தில் சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சரினால் வழங்கப்பட்டன.

மேற்படி மூன்று கிராமங்களிலும் பல வருடங்களுக்கு முன்னர் அரசினால் வழங்கப்பட்ட வீட்டுத்திட்டத்தின் ஊடாக வீடுகள் கட்டி முடிக்கப்படாத நிலையிலுள்ளவர்களுக்கு உதவி செய்யுமாறு கிளிநொச்சி ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதான அமைப்பாளர் இரவீந்திரன் துஜீபன் மூலமாக பொது அமைப் புக்கள் மேற்கொண்ட நடவடிக்கையின் பயனாக சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் கிளிநொச்சியில் இயங்கும் வீடமைப்பு அதிகார சபையிடம் குடும்பம் ஒன்றுக்கு தலா 10 பக்கெற் சீமெந்து வழங்குமாறு விடுத்த பணிப்புரைக்கு அமைய 600 சீமெந்துப் பக்கெற்றுக்கள் 60 பயனாளிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டதோடு தென்னம் நாற்றுக்களும் வழங்கப்பட்டன.

இந் நிகழ்வில் சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், கிளி. மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதான அமைப்பாளர் இரவீந்திரன் துஜிபன், கிளிநொச்சி வீடமைப்பு அதிகார சபையின் மாவட்ட முகாமையாளர் ஜெயச்சந்திரன் உட்பட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

கட்டிமுடிக்கப்படாத நிலையிலுள்ள ஏனைய வீடுகளுக்கு எதிர்வரும் ஜூலை மாதம் சீமெந்துப் பக்கெற்றுக்கள் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதான அமைப்பாளர் இ.துஜிபன் தெரிவித்தார். (2-309)





மாங்குளம் தச்சடம்பன் புதியநகர் மலரும் அரும்புகள் முன்பள்ளி மற்றும் கிரிப்பட்டமுறிப்பு வைகறை முன்பள்ளி ஆகியன ஒன்றிணைந்து நடத்திய முன்பள்ளி சிறார்களுக்கான விளையாட்டுப் போட்டி நேற்று முன்தினம் பிற்பகல் 3 மணியளவில் மலரும் முன்பள்ளி விளையாட்டு முற்றத்தில் நடைபெற்ற போது....

(படங்கள் முள்ளியவளை செய்தியாளர்)

# ஏ-9 வீதியிலுள்ள மரம் தறிப்பு; போக்குவரத்து தடைப்பட்டது



கிளிநொச்சி மத்திய கல்லூரிக்கு முன்பாக முறிந்து விழும் நிலையிலிருந்த மரத்தை தறித்தமையால், ஏ - 9 வீதியினூடான போக்குவரத்து சுமார் ஒரு மணி நேரம் நேற்று தடைப்பட்டது.

முறிந்து விழும் நிலையில் இருந்த இந்த மரத்தால் ஏற்படவிருந்த உயிராபத்துக்கள், சொத்து இழப்புக்களை தடுக்கும் வகையில், வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் மரத்தை தறித்து அப்புறப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதனால் நேற்று முற்பகல் 10.30 மணி முதல் 11.30 மணி வரையில் ஏ-9 வீதி பொலிஸாரின் ஒத்துழைப்புடன் மூடப்பட்டு, மரம் அப்புறப் படுத்தப்பட்டது. (2)

# வட்டுவாகல் பாலத்தில் விபத்து; இளம் குடும்பஸ்தர் மரணம்



உழவு இயந்திரமும் மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதிய விபத்தில் இளம் குடும்பஸ்தர் மரணமடைந்தார்.

இவ் விபத்து நேற்றுக்காலை 6.30 மணியளவில் வட்டுவாகல் பாலத்தில் இடம்பெற்றது.

இதில் புதுக்குடியிருப்பு ஆனந்தபுரத்தைச் சேர்ந்த சிவலிங்கம் சதீஸ் என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையாரே மரணம் அடைந்தவராவார்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

முல்லைத்தீவு பகுதியில் இருந்து புதுக்குடியிருப்பு நோக்கி பயணித்துக் கொண்டிருந்த உழவு இயந்திரம் ஒன்று பாலத்தின் நடுப்பகுதியில் வந்த நிலையில் புதுக்குடியிருப்பில் இருந்து முல்லைத்தீவு நோக்கி பயணித்துக் கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்றும் மேற்படி இடத்தை சென்ற வேளை இக் கோர விபத்து நடைபெற்றது.

இதன்போது உழவு இயந்திரத்தின் முன்பக்கத்துடன் மோட்டார் சைக்கிளின் கண்ணாடி மோதுண்டு நிலை தடுமாறி வேகக்கட்டுப்பாட்டை இழந்த நிலையில் மோட்டார் சைக்கிளுடன் பாலத்தினுள் வீழ்ந்து பிரஸ்தாப நபர் பலியானார்.

சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டதோடு சடலம் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டது.

பிரேத பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படும். (2-9-281-310)







முல்லைத்தீவு முள்ளியவளை வடக்கு சமாதான நல்லிணக்க குழுவும் முள்ளியவளை வெண்மலர் விளையாட்டுக்கழகமும் இணைந்து நேற்று முன்தினம் முள்ளியவளை வடக்கு பொதுநோக்கு மண்டபத்தில் நடத்திய முதியோர் கௌரவிப்பு விழாவையும் முதியோர் விளையாட்டு நிகழ்வுகளையும் படங்களில் காணலாம்.
(படங்கள்:-வற்றாப்பளை, பனிக்கன்குளம் செய்தியாளர்கள்)

# சட்டவிரோத செயற்பாடுகளை கட்டுப்படுத்தி அமைதியான சூழல்நிலை ஏற்படுத்தப்படும்

## பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு



இவர் எங்களுடைய பொலிஸ்மா அதிபர் என வடக்கு மக்கள் அச்சமின்றி கூறவேண்டும் என்று பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர தெரிவித்துள்ளார். கடந்த 18 ஆம் திகதி சனிக் கிழமை கிளிநொச்சிக்கு விஜயம் செய்த அவர் மாவட்டச் செயலகத்தில் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகளை சந்தித்து கலந்துரை யாடிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளர். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாணத்தில் பிரதி பொலிஸ்மா அதிபராக கடமையாற்றியிருக்கின்றேன். எனவே இந்தப் பிரதேசத்தின் நிலைமைகளை நான் நன்கறிவேன், பல தடவைகள் இதற்கு முன் சிவில் அமைப்புக்களை சந்தித்திருக்கிறேன். எனவே வடக்கு மக்கள் அச்சமின்றி இவர் எங்களுடைய பொலிஸ்மா அதிபர் என கூற வேண்டும்.

பதவி ஏற்ற பின்னர் இரண்டாவது விஜயமாக வடக்கு மாகாணத்திற்கு வந்திருக் கிறேன். என்னுடைய விஜயம் மிகவும் வெற்றிகரமாக அமைந்துள்ளது. எனது முதலாவது விஜயம் மத்திய மாகாணத்திற்கானதாக அமைந்திருந்தது. நான் எனக்கு கீழ் உள்ள 84 ஆயிரம் பேருக்கு மேற்பட் டவர்களின் நலன்கள், அவர்களின் தேவை கள் உள்ளிட்ட விடயங்களையும் கவனிக்க வேண்டும்.

ஐந்தாண்டு திட்டம் ஒன்றை உருவாக்கி அதன் மூலம் பொலிஸ் துறையின் செயற்பாடுகளை முன்னெடுக்கவுள்ளதாகவும், சட்டம், ஒழுங்கு ஆகியவற்றை பாதுகாக்கின்ற வகையில் மாற்றங்களை ஏற்படுத்தி மக்களுக்கு சிறந்த சேவையை வழங்க கூடிய வகையில் திட்டங்களை முன்னெடுப்பதோடு நாட்டில் இடம்பெறுகின்ற குறிப்பாக வடக்கில் இடம்பெற்ற வாள்வெட்டு,கோஷ்டி மோதல்கள் உள்ளிட்ட சட்டவிரோத செயற்பாடுகளை கட்டுப்படுத்தி ஒரு அமைதியான சூழல் ஏற்படுத்தப்படும் என்றும் குறிப்பிட்டார். (2-312)




# பள்ளிமுனையில் காணி வழங்கியமைக்கு எதிர்ப்புக்கூறி கண்டன ஆர்ப்பாட்ட ஊர்வலம்

## மன்னார் பிரதேச செயலாளரிடம் மகஜர் கையளிப்பு



மன்னார் - பள்ளிமுனை கிராமத்தில் ஆலயத்திற்குரிய காணியை தனிநபருக்கு கொடுத்ததற்கு எதிராகவும் வேறு இடத்தைச் சேர்ந்த குடும்பம் ஒன்றிற்கு காணி வழங் கியமைக்கு எதிர்ப்புத்தெரிவித்தும் கண்டன ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

பள்ளிமுனை கிராம மக்களினால் நேற்று முன்தினம் காலை இந்த கண்டன ஆர்ப்பாட்ட ஊர்வலம் மேற்கொள்ளப்பட்டது. மன்னார் பள்ளிமுனை கிராமத்தில் ஆலய சொரூபம் அமைந்துள்ள 8 பேர்ச்காணியை அக்கிராமத்தைச் சேர்ந்த குடும்பம் ஒன்றிற்கு மன்னார் பிரதேச செயலாளர் வழங்கியுள்ளார்.

இதேவேளை, பள்ளிமுனை கிழக்கில் கடந்த 2 மாதங்களுக்கு முன்னர், காணி இல்லாதவர்களுக்கு காணி பகிர்ந்தளிக்கப்பட்டது. 100 குடும்பங்களுக்கு காணி அளந்து எடுக்கப்பட்ட நிலையில், 96 நபர்களுடைய பெயர்ப்பட்டியல் காட்சிப்படுத்தப்பட்டது. ஆனால், பெயர்ப்பட்டியலில் இல்லாத பள்ளிமுனை கிராமத்தைச் சேராத குடும்பம் ஒன்றிற்கு காணி வழங்கப்பட்டுள்ளது.

குறித்த காணியில் தற்போது கொட்டில் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ள நிலையில், பள்ளிமுனை கிராமத்தைச் சேர்ந்த பல குடும்பங்கள் காணி இல்லாத நிலையில் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். எனவே, தெரிவு செய்யப்படாத பள்ளிமுனை கிராமத்தைச் சேராத குடும்பம் ஒன்றிற்கு காணி வழங்கப்பட்டமைக்கு குறித்த கிராம மக்கள் கண்டனம் வெளியிட்டுள்ளனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் 100 இற்கும் மேற்பட்ட பள்ளிமுனை மக்கள் தமது கிராமத்தில் இருந்து ஊர்வலமாக மன்னார் பிரதேச செயலகம்வரை சென்றனர். பின்னர், பள்ளிமுனை கிராமமக்களின் பிரதிநிதிகள் சிலர் மன்னார் பிரதேச செயலாளர் கே.எஸ். வசந்த குமாரிடம் மகஜர் ஒன்றைக் கையளித்தனர்.

தமது கோரிக்கை அடங்கிய மகஜரையும் கையளித்ததோடு, தமது பிரச்சினைக்கு உரிய தீர்வை பெற்றுத்தருமாறு பள்ளிமுனை கிராம மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். இந்தநிலையில், மகஜரை பெற்றுக் கொண்ட பிரதேச செயலாளர் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு உறுதியளித்துள்ளார். (2-281)

# 103.5 ஏக்கர் நிலப்பரப்பில் இடைப்போக பயிர்ச்செய்கை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு, ஒலுமடுவில் 103.5 ஏக்கர் நிலப்பரப்பில் இடைப்போக பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ஒலுமடு கமநல சேவை நிலைய தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்கமைய, 86.5 ஏக்கரில் நெற் செய்கையும் 17 ஏக்கரில் கச்சான் செய்கையும் மேற்கொரள்ளப்படுகின்றது.

அதாவது, ஒலுமடுக்குளத்தின் கீழ் 32.5 ஏக்கரும், அம்பகாமம் குளத்தின் கீழ் 38 அரை ஏக்கரும் தச்சடம்பன் குளத்தின் கீழ் 33 ஏக்கரும் இவ்வாறு பயிர்ச் செய்கை செய்கை பண்ணப்படுகின்றது.

கடந்த மாதம் பெய்த மழையினால் குளங்களின் நீர் மட்டம் அதிகரித்தது. இதனையடுத்து, சிறுபோகத்துக்கு மேலாக இடைப்போகம் செய்யப்படுகின்றதாக அந்தத் தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன. (2)

# அகதிகள் படகை கடலுக்குள் தள்ளும் இந்தோனேசியாவின் முயற்சி தோல்வி

(கொழும்பு)

**இந்தோனேசியாவில் தரைதட்டியுள்ள, இலங்கைத் தமிழ் அகதிகளின் படகை மீண்டும் ஆழ்கடலுக்குள் தள்ளிச் செல்வதற்கு நேற்று முன்தினம் காலை முன்னெடுக்கப்பட்ட முயற்சி மீண்டும் தோல்வியில் முடிந்துள்ளது.**





இந்தியாவில் இருந்து அவுஸ்ரேலியா நோக்கிச் செல்லும் வழியில் அகதிகள் படகு இயந்திரக் கோளாறினால், இந்தோனேசியாவின் ஆச்சே மாகாணத்தில், தரைதட்டியது.

ஒரு வாரகாலமாக படகில் இருந்து இறங்க அகதிகளுக்கு அனுமதி மறுத்து வந்த இந்தோனேசிய அதிகாரிகள், அனைத்துலக அழுத்தங்களை அடுத்து கடந்த சனிக்கிழமை, அகதிகளை தரையிறங்க அனுமதித்தனர்.

இதையடுத்து, ஆச்சே மாகாணத்தின் லோக்நா கடற்கரையில் அமைக்கப்பட்டுள்ள கூடாரங்களில், 44 அகதிகளும் தற்காலிகமாக தங்கவைக்கப்பட்டுள்ளனர். இவர்களைச் சந்திக்க நேற்று முன்தினம் அகதிகளுக்கான ஐ.நா. முகவரமைப்பு அதிகாரிகளுக்கு முதல்முறையாக அனுமதி அளிக்கப்பட்டது.

தற்காலிக கூடாரங்களில் தங்கியுள்ள அகதிகள், தாம் ஆளுக்கு ஒன்றரை இலட்சம் ரூபா கொடுத்து படகில் பயணம் மேற்கொண்டதாகவும், படகின் கப்டன் தப்பிச் சென்று விட்டதாகவும் கூறியுள்ளனர்.

அதேவேளை, தாம் தொடர்ந்து அவுஸ்ரேலியாவுக்கு பயணம் மேற்கொள்ளவே விரும்புவதாகவும் தெரிவித்துள்ளனர்.

இந்தநிலையில், பழுதடைந்துள்ள படகைத் திருத்தி, அகதிகளை மீண்டும் ஆழ்கடலுக்குள் தள்ளிச் செல்வதில் இந்தோனேசிய அதிகாரிகள் உறுதியாக உள்ளனர்.

நேற்றுமுன்தினம் காலை இந்தோனேசிய பாதுகாப்பு அதிகாரிகள், பெக்கோ இயந்திரத்தின் துணையுடன், அகதிகள் படகை கடலுக்குள் மீண்டும் தள்ளிச் செல்வதற்கு முயற்சித்தனர்.

எனினும், கடுமையான அலைகளினால் அந்த முயற்சி சற்று நேரத்திலேயே கைவிடப்பட்டது.

படகை கடலுக்குள் தள்ளிச் சென்று, அருகில் உள்ள துறைமுகம் ஒன்றில் வைத்து அந்தப் படகில் அகதிகளை ஏற்றி அனைத்துலக கடற்பரப்புக்கு இழுத்துச் செல்வதற்கு இந்தோனேசியா திட்டமிட்டுள்ளது. (இ-05)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## நீர்முள்ளி



**Botanical Name-** Hydrophila spinosa
**Family-** Acanthaceae
**Engl:** Long leaved barderia
**Sinh:** Neermulliya



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

இது முட்களையுடையதாலும் தண்ணீர் தங்கும் சிறு பள்ளங்களிலும் வளருவதாலும் இப்பெயர் பொருத்தமானது என்று கூறலாம். சுமார் ஒரு மீற்றர் உயரம் வரைக்கும் வளரக்கூடியது. ஒரு வகையான குத்துச்செடியாகும். இரண்டொரு தண்டுகள் அடி வேரினின்றும் தோன்றி வளரும். அழுத்தமற்ற இத்தண்டுகள் சிறிது சிவப்பு நிறமுடையன. கணுக்கள் நெருக்கமாகவுள்ளன. கணுக்கள் தோறும் சுமார் 2 அங்குல நீளமுள்ள முட்களையும் இலைகளையும் காணலாம்.

செடிகள் சுமார் ஒரு அடிக்கு மேல் வளர்ந்தபின்புதான் முட்கள் தோன்ற ஆரம்பிக்கும். இலைகளிலும் தண்டுகளிலும் சிறிய சுணை போன்ற அமைப்புகள் காணப்படும். பூக்கள் மங்கிய ஊதா நிறம் போன்றவை. மிகச்சிறிய தட்டையான விதைகள் மங்கலான சிவப்பு நிறமுடையன.

கோடையில் செடிகள் காய்ந்து விடும். மீண்டும் மழை பெய்ததும் அடிவேரினின்றும் துளிர்க்க ஆரம்பிக்கும். இப்படி ஒரே இடத்தில் பல்லாண்டுகள் வாழ்கின்றன.

இதில் சுத்த வெண்ணிறப் பூக்களுள்ள இனமும் உண்டு. இவ்வினம் மிக அரிதாகவே காணப்படும். இதன் இலைகளையும் மருத்துவத்திற்கு பயன்படுத்தலாம்.

20 கிராம் இலைச்சாற்றை வெந்நீருடன் அருந்தலாம். அல்லது இதன் இலைகளை நிழலில் உலர்த்தி பொடித்து அரைத்தேக்கரண்டி அளவு வெந்நீரில் அருந்த சிறுநீர் எரிச்சல் நீங்கி சிறுநீர் நன்கு வெளியேறும்.

40 கிராம் இலை, 100 கிராம் தானிய மாவுடன் சேர்த்து அடை தயாரித்து உண்ணலாம். அல்லது 30 கிராம் இலையை 90 கிராம் முளைக்கீரையுடன் கலந்து சமைத்து உண்ணலாம். இதனால் உடல் குளிர்ச்சி அடைந்து உடலுக்கு நல்ல பலத்தைக் கொடுக்கும்.

நீர்முள்ளி செடிகளை வேருடன் பிடுங்கி அவற்றை நன்றாக தூய்மை செய்ய வேண்டும். அவற்றைச் சிறு சிறு துண்டுகளாக வெட்டி உரலில் போட்டு இடிக்கவேண்டும். அதனை ஒரு மண் சட்டியில் இட்டு 1.3 லீற்றர் தண்ணீர் விட வேண்டும். அதில் பெருஞ்சீரகம், கொத்துமல்லி, நீர்முள்ளி விதை ஆகியவற்றை ஒவ்வொன்றிலும் 60 கிராம் இடித்து சேர்க்க வேண்டும். அதை அடுப்பில் ஏற்றி கொதிக்கவைத்து 300 மில்லியாக வற்றியதும் இறக்கி 30 மில்லி அளவு காலை, மாலை அருந்த கால்வீக்கம் குறையும். சிறுநீர் தடைகள் நீங்கும்.

காய்ந்த நீர்முள்ளியை நன்றாக கொளுத்தி அதன் சாம்பலை மெல்லிய தூளாக்கி அரித்து ஒரு புட்டியில் வைத்துக்கொள்ளவும். இந்தச் சாம்பலில் ஒரு தேக்கரண்டி அளவு வெந்நீரில் கலக்கி குடித்தால் சிறுநீர்த்தடைகளை நீக்கி வீக்கம் குறையும். அல்லது இந்தச் சாம்பலை நீரில் கரைத்து வீக்கங்களுக்கு பற்றிடலாம்.

30 கிராம் நீர்முள்ளி விதைகள், 100 கிராம் பாதாம்பருப்பு, 30 கிராம் வெள்ளரி விதை, 20 கிராம் கசகசா ஆகியவற்றை நீரில் நன்கு ஊற வைக்கவேண்டும். சிறிது நேரம் கழித்து அதை நன்றாக அரைத்து தினமும் இரவில் காய்ச்சி ஆறிய பசுவின் பாலில் கரைத்துக் குடிக்க ஆண்மலடு நீங்கும்.

40 கிராம் நீர்முள்ளிவிதை, 40 கிராம் சிறுநெருஞ்சி விதை, 20 கிராம் வெள்ளரிவிதை ஆகியவற்றை நன்றாக உலர்த்தி 650 மில்லி தண்ணீரில் இட்டு 100 மில்லியாக சுண்டக்காய்ச்சி தினசரி காலை, மாலை 30 மில்லி அளவு அருந்த கல்லடைப்பு, உடலெரிச்சல், சிறுநீர் எரிச்சல் நீங்கும்.

நீர்முள்ளி விதைகளை அரைத்து 2 கிராம் அளவு 200 மில்லி பாலில் அருந்திவர இரத்த விருத்தி உண்டாகும்.

நீர்முள்ளி இலைச்சாற்றில் பாதாம் பருப்பை சேர்த்துச் சாப்பிட்டாலும் ஆண்மை அதிகரிக்கும்.

நீர்முள்ளிச்சாற்றில் பார்லி அரிசியை வேகவைத்துச் சாப்பிட்டாலும் சிறுநீர் எரிச்சல் நீங்கி, சிறுநீர் தாராளமாக வெளியேறும்.


நீர்முள்ளி, சிறுநெருஞ்சில், சாரணைவேர், மாவிலங்கம்பட்டை ஒரே அளவாக எடுத்து 8 பங்கு நீர்விட்டு 1/8 பங்கை சுண்டக் காய்ச்சி 30-60 மில்லி காலை, மாலை தொடர்ந்து 21 நாட்கள் எடுத்துவர சிறுநீரகக் கற்கள் கரையும்.

நீர்முள்ளிச் சாற்றில் நீர்முள்ளி விதை, சிறு நெருஞ்சில் முட்கள் ஆகியவற்றை ஊறவைத்து உலர்த்தி பொடித்து 2 கிராம் அளவு சாப்பிட்டுவர விந்தில் உயிரணுக்களின் எண்ணிக்கை அதிகரித்து வரும்.

குளக்கரை, ஆற்றங்கரை, வாய்க்கால் நீரோடும் கரைகளில் நீர்முள்ளி அதிகமாக வளரும்.







யாழ்.தென்மராட்சி கல்வி வலயத்தின் இசையாசிரியர்கள், மாணவர்கள் இணைந்து நடத்திய ஏழிசை மாலை நிகழ்ச்சியின் 14 ஆவது நிகழ்வு கைதடி முத்துக்குமார சுவாமி மகாவித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்றது. பாடசாலை அதிபர் செ.பேரின்பநாதன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ் வில் பாடசாலை அதிபர் விருந்தினர்களை வரவேற்பதையும், பாடசாலை இசையாசிரியை திருமதி.தயாமதி சிவநாதன் வயலின் இசைப்பதையும், பாடசாலை மாணவிகள் இறைவழிபாடு நிகழ்த்துவதையும் படங்களில் காணலாம்.(படங்கள்: சிவநகர் செய்தியாளர்)









சுற்றுச்சூழல் விழிப்புணர்வு தினத்தை முன்னிட்டு வேல்ட்விசன் நிறுவன அனுசரணையுடன் வலி.மேற்கு பிரதேச சபையின் ஏற்பாட்டில் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் தெருவெளி நாடக ஆற்றுகைகள் அண்மையில் நடத்தப்பட்ட போது...

அளவெட்டி பாரதி முன்பள்ளி நிலையத்தின் விளையாட்டுப் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றபோது...

நிகழ்வின் நிழல்கள்










கைதடி நவீல்ட் பாடசாலையின் பரிசளிப்பு விழா அண்மையில் அதிபர் ஜி.சாள்ஸ் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வைத்திய கலாநிதி எம். மலரவன் கலந்து கொண்டிருந்தார்.












நல்லைகலாமந்திர் நடனாலயம் நடத்திய சதங்கை நாதம் என்ற நடன ஆற்றுகை நிகழ்வு கடந்த ஞாயிற்றுக் கிழமை நல்லூர் ஸ்ரீ துர்க்கா தேவி மணி மண்டபத்தில் நடைபெற் றது. கோப்பாய் ஆசிரிய கலாசாலை பிரதி அதிபர் ச.லலீசன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டதுடன் இலங்கையின் மூத்த நடன ஆசிரியர்களான கலாகீர்த்தி சாந்தினி சிவநேசன், கலாபூஷணம்பத்மினி செல்வேந்திரகுமார் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.



பிரான்ஸில் உள்ள புலம் பெயர் தமிழர் குலேந்திரன் ஜெமிஸ் இன் மகளின் பிறந்த நாள் பரிசாக ராஜ கிராமத்தில் வறுமைக்கோட்டிற்குட்பட்ட உயர்தர வகுப்பில்கல்வி கற்கும் மாணவி ஒருவருக்கு துவிச்சக்கர வண்டி ஒன்று வழங்கப்பட்டதுடன் தகப்பனார் ஊனமுற்று தாயாரை இழந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவரு க்கு 5 ஆயிரம் ரூபா வீதம் மொத்தம் 15 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டது.



வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தினரால் பொன்னாலை மேற்கு சுழிபுரம் கிராமத்தைச் சேர்ந்த புற்றுநோயால் பாதிக்கப்பட்ட பராசக்தி என்பவருக்கு மருத்துவ தேவைக்கான நிதியுதவி, உணவு பொருட்கள் என்பன அண்மையில் அன்பளிப்பு செய்யப்பட்ட போது...

# உலகெங்கும் மோதல்கள் காரணமாக 65.3 மில்லியன் மக்கள் இடம்பெயர்வு

(வோஷிங்டன்)

**உலகெங்கும் மோதல்கள் காரணமாக 65.3 மில்லியன் மக்கள் இடம்பெயர்ந்துள்ளதாகவும் அகதிகளின் தொகை ஒருபோதும் இல்லா வகையில் அதிகரித்துள்ளதாக ஐக்கிய நாடுகள் அகதிகள் முகவர் நிலையம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை தெரிவித்துள்ளது.**



உலக அகதிகள் தினத்தைக் குறிக்கும் வகையில் வெளியிடப்பட்ட ஆண்டறிக்கையிலேயே அந்த நிலையம் இவ்வாறு தெரிவித்துள்ளது.

உலகளாவிய அகதிகள் தொகையானது முதல் தடவையாக 60 மில்லியனை தாண்டியுள்ளதாக அந்த நிலையம் தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டின் இறுதியில் அகதிகளாகவோ அல்லது புகலிடக்கோரிக்கையாளர்களாகவோ 65.3 மில்லியன் பேர் உள்நாட்டில் இடம்பெயர்ந்துள்ளதாக அந்த நிலையம் கூறுகிறது.

மேற்படி இடம்பெயர்ந்தவர்கள் தொகையானது ஒரு வருட காலப் பகுதியில் 5 மில்லியனால் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த இடம்பெயர்ந்தவர்கள் தொகை பூமியிலுள்ள ஒவ்வொரு 113 பேருக்கும் ஒருவர் என்ற அடிப்படையில் உள்ளதாக ஐக்கிய நாடுகள் அகதிகள் முகவர் நிலையம் தெரிவித்துள்ளது.

மேலும் இது இரண்டாம் உலகப் போருக்கு பின்னர் இடம்பெற்ற மாபெரும் இடம்பெயர்வாக உள்ளது.

கடந்த ஆண்டில் ஒவ்வொரு நிமிடத்திலும் 24 பேர் இடம்பெயர்ந்துள்ளனர்.

மேற்படி அகதிகளில் 54 சதவீதமானவர்கள் சிரியா, ஆப்கானிஸ்தான் மற்றும் சோமாலியா ஆகிய 3 நாடுகளை மட்டுமே சேர்ந்தவர்களாவர்.

அத்துடன் இடம்பெயர்ந்த அனைத்து அகதிகளில் அரைப் பங்கானவர்கள் 18 வயதுக்குக் கீழ்ப்பட்ட சிறுவர்களாவர்.

மேலும் உலக அகதிகளில் 86 சதவீதமானவர்கள் குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் பெறும் நாடுகளிலேயே தஞ்சமடைந்துள்ளதாக ஐக்கிய நாடுகள் அகதிகள் முகவர் நிலையம் தெரிவிக்கிறது.

உலகில் அதிகளவில் அகதிகள் தஞ்சமடைந்துள்ள நாடாக துருக்கி உள்ளது. அங்கு 2.5 மில்லியன் பேர் அகதிகளாகவுள்ளனர். அதற்கு அடுத்து அதிகளவு அகதிகளைக் கொண்ட நாடுகளாக முறையே பாகிஸ்தான் மற்றும் லெபனான் ஆகிய நாடுகள் விளங்குகின்றன.

கடந்த வருடத்தில் ஐரோப்பாவை 1,001,700 அகதிகள் கடல் மார்க்கமாக வந்தடைந்துள்ளதாக சர்வதேச புலம்பெயர்தல் தொடர்பான அமைப்பு தெரிவிக்கிறது.

அதேசமயம் தரை வழியாக ஐரோப்பாவை சுமார் 35 ஆயிரம் பேர் வந்தடைந்துள்ளனர்.

ஐரோப்பாவை வந்தடைந்துள்ள பலரின் இலக்கு ஜேர்மனி மற்றும் சுவீடன் ஆகிய செல்வந்த நாடுகளுக்குச் செல்வதாகும் எனக் கூறப்படுகிறது. (இ-5)

# வேட்பாளர் டொனால்ட் டிரம்பை கொல்லப் பாய்ந்தவர் கைது


(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவின் பதவிக் காலம் விரைவில் முடிவ தால வரும் நவம்பர் மாதம் 8 ஆம் திகதி அங்கு ஜனாதிபதி தேர்தல் நடைபெறுகிறது.

இந்த தேர்தலில் ஜனநாயகக் கட்சி வேட்பாளராக பிரபல தொழிலதிபரான டொனால்ட் டிரம்புடன் குடியரசுக்கட்சி வேட்பாளராக ஹிலாரி கிளின்டன் போட்டியிடுகிறார்.

இந்நிலையில், லாஸ் வேகாஸ் நகரில் நடைபெற்ற ஜனநாயகக்கட்சியின் பிரசார நிகழ்ச்சியில் கடந்த சனிக்கிழமை டொனால்ட் டிரம்ப் பங்கேற்றார். இந்த கூட்டத்தில் ஏராளமானோர் திரண்டிருந்தனர். அப்போது, அங்கு பாதுகாப்புக்கு நின்றிருந்த ஒரு பொலிஸ் அதிகாரியின் துப்பாக்கியை உருவி டொனால்ட் டிரம்ப்பை கொல்லப் பாய்ந்த இளைஞனை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைதான இளைஞரின் பெயர மைக்கேல் சான்ட் போர்ட்(வயது-19) என்றும் 



அவர் இங்கிலாந்து நாட்டை சேர்ந்தவர் என்றும் பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது. டிரம்பை சுட்டுக்கொல்லும் திட்டத்துடன் 18 மாதங்களுக்கு முன்னர் இங்கிலாந்தில் இருந்து அமெரிக்காவுக்கு வந்த மைக்கேல், நியூ ஜெர்சி, கலிபோர்னியா ஆகிய பகுதிகளில் வசித்து வந்துள்ளார் என தெரிய வந்துள்ளது. (இ-5)




# குண்டுத்தாக்குதலில் 25 பேர் உயிரிழப்பு

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் பாதுகாப்பு படைவீரர்கள் சென்ற வான் மீது தலிபான்கள் நேற்று முன்தினம் காலை தற்கொலைப்படை வெடிகுண்டு தாக்குதலில் ஈடுபட்டனர்.

இந்த தாக்குதலில் 14 நேபாளிகள் உட்பட 25 பேர் கொல்லப்பட்டனர். இந்நிலையில் காபூலில் நேற்று முன்தினம் நடைபெற்ற தாக்குதலில் இரண்டு இந்தியர்கள் உயிரிழந்துள்ளனர்.

டேராடூனை சேர்ந்த கணேஷ தாபா மற்றும் கோவிந்த் சிங் ஆகியோர் கொல்லப்பட்டுள்ளதாக இந்திய வெளியுறவுத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இறுதி சடங்கிற்காக இறந்தவர்களின் உடல்களை இந்தியா கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளை ஆப்கான் அரசுடன் மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)



# ரோம் நகரில் பெண் மேயர்

(ரோம்)

இத்தாலி தலைநகர் ரோமின் மேயராக விர்ஜினியா ரேகி (வயது-37) தேர்ந்தெடுக்கப்பட்டார்.

**அந்த நகரின் 2,700 ஆண்டு வரலாற்றில் ஒரு** பெண் மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டது இதுவே முதல் முறை என இத்தாலிய ஊடகங்கள் தெரிவித்தன.

கடந்த ஞாயிற்றுக் கிழமை நடைபெற்ற தேர்தலில் 60 சதவீதத்துக்கும் மேலான வாக்குகளைப் பெற்று அவர் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டார்.

நகைச்சுவை நடிகர் பெப் கிரில்லோவால் கடந்த 2009 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட "ஐந்து நட்சத்திர இயக்கம்" கட்சி சார்பில் போட்டியிட்ட வர்ஜினியா ரேகியின் வெறறி, ஆளும் ஜனநாயகக் கட்சிக்கு மிகப்பெரிய பின்னடைவு என்று கூறப் படுகிறது. (இ-5)

# வெள்ளத்திற்கு மத்தியிலும் இயல்பு வாழ்க்கை

வெள்ள அனர்த்தம் ஏற்படும் இடங்களில் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்படுவது வழமையாகும்.

இத்தாலிய நகரான வெனிஸில் பிரதேச மக்கள் வெள்ள அனர்த்தத்தை ஒரு பொருட்டாகக் கருதாது இயல்பு வாழ்க்கை வாழ்வதை படத்தில் காணலாம். அந்நகரில் குளிர்காலங்களில் வீதிகளும் கட்டடங்களும் வெள்ளத்தில் மூழ்குவது வழமையாகவுள்ளது. இந்த வாரம் அங்கு பெய்த மழையால் பிரபல சென்மார்க் 



சதுக்கத்தில் ஒரு மீற்றருக்கும் அதிகமான உயர வெள்ளம் ஏற்பட்டுள்ளது.

ஆனால் பிரதேச வாசிகளும் சுற்றுலா பயணிகளும் அந்த வெள்ளத்தை ஒருபொருட்டாகக் கருதாது வெள்ளத்தில் மூழ்கிய தேநீர்சாலைகளில் வழமை போன்று தேநீர் அருந்தியும் உரையாடியும் பொழுதைக் கழித்துள்ளனர். (இ-5)

# இலங்கைத்தமிழ் அகதிகளை மீட்க நடவடிக்கை எடுக்கவும்

## தி.க.தலைவர் வீரமணி வலியுறுத்து

**இந்தோனேசியாவிலுள்ள இலங்கைத்தமிழ் அகதிகளை மீக நடவடிக்கை எடுக்க வேண்டும் என திராவிடர் கழக தலைவர் கி.வீரமணி வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

கும்பகோணத்தில் நேற்று முன்தினம் நிருபர்களுக்கு பேட்டியளித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அவுஸ்திரேலியா செல்லும் வழியில் இந்தோனேசியாவுக்குள் இலங்கைத் தமிழர்களை அனுமதிக்காதது வேதனைக்குரியது. மனித நேயம் இல்லாமல் இந்தோனேசிய அரசு நடந்துள்ளது.

இப்பிரச்சினையில் ஐ.நா. சபை தலையிட்டு தீர்வு காண வேண்டும். மேலும் இந்தோனேசியாவில் உள்ள இலங்கையின் தமிழ் அகதிகளை மீட்க மத்திய, மாநில அரசுகள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.



ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சிறையில் உள்ள நளினி, முருகன், சாந்தன், பேரறிவாளன் உள்ளிட்டோர் விடுதலைக்கு கடந்த சட்ட பேரவையில் இயற்றப்பட்ட சிறப்பு தீர்மானத்தை உடனடியாக தமிழக அரசு நிறைவேற்ற வேண்டும் என அவர் தெரிவித்தார். (இ-5)


## குண்டு வெடிப்பு; ஒருவர் கைது


குஜராத் மாநிலம் அகமதாபாத் நகரில் 2008ஆம் ஆண்டு ஜுலை மாதம் 26ஆம் திகதி தொடர் குண்டு வெடிப்பு சம்பவங்கள் நிகழ்ந்தன. இதில் 50 பேர் கொல்லப்பட்டனர்.

இதில் தொடர்புடைய தடை செய்யப்பட்ட சிமி இயக்கத்தைச் சேர்ந்த நசீர் என்கிற பர்வேஸ் அப்துல் மஸ்ஜித் என்பவரை தீவிரவாத தடுப்பு பிரிவு பொலிஸார் தேடி வந்தனர். இந்த நிலையில் ஆட்டோ சாரதியான நசீர் பொலிஸாரால் நேற்று முன்தினம் அகமதாபாத் நகரில் கைது செய்யப்பட்டார். இவர் கர்நாடக மாநிலம் பெல்காம் நகரைச் சேர்ந்தவர் ஆவார்.

கடந்த 8 ஆண்டுகளாக தேடப்பட்டு வந்த நசீர் குஜராத் தொடர் குண்டு வெடிப்பு சம்பவங்களுக்கு மூளையாக செயற்பட்டவர் என்றும், சிமி இயக்கத்தினருக்காக பயிற்சி முகாம்களையும் நடத்தியவர் எனவும் தீவிரவாத தடுப்புபிரிவு பொலிஸார் தெரிவித்தனர். (இ-5)

# ஹொங்கொங்கில் சர்வதேச யோகா தினம்





ஹொங்கொங் சன்யட் நினைவு பூங்காவில் நடைபெற்ற 2வது சர்வதேச யோகா தின நிகழ்ச்சியில் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர். ஹொங்கொங்கிற்கான தற்காலிக தூதர் ரவி சின்கா வரவேற்றார். ஹொங்கொங் உள்துறை செயலர் லாவ் கோங்-வா கௌரவ விருந்தினராக கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார். ஹொங்கொங்கிலுள்ள பல்வேறு யோகா மையங்களில் யோகா நிகழ்ச்சிகளுக்கு இந்தியத் தூதரகம் ஏற்பாடு செய்திருந்தது குறிப்பிடத்தக்கது.

## ராகுலை பிரதமராக்குவோம்

ராகுல் காந்தியை பிரதமர்க்க பாடுபட வேண்டும் என்று காங்கிரஸ் தொண்டர்களுக்கு புதுச்சேரி முதல்வர் நாராயணசாமி கோரிக்கை விடுத்துள்ளார்.

அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவர் ராகுல் காந்தியின் 46 ஆவது பிறந்த நாள் விழா, புதுச்சேரி காங்கிரஸ் சார்பில் கட்சி தலைமை அலுவலகத்தில் கொண்டாடப்பட்டது. இதில், முதல்வர் நாராயணசாமி 46 கிலோ கேக்கை வெட்டி தொண்டர்களுக்கு வழங்கினார். இதன் போது தொண்டர்கள் மத்தியில் உரையாற்றிய அவர், ராகுல் காந்தி பிரதமர் மோடிக்கு சிம்ம சொப்பனமாக விளங்குகிறார். அவரை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும். எதிர்வரும் 2019 ஆம் ஆண்டில் அவர் பிரதமராக நாம் பாடுபட வேண்டும்.

மேலும், புதுவையில் கடந்த ஆட்சியாளர்களின் கோப்புகளைப் பார்த்தால் பல முறைகேடுகள் வெளிவருகின்றன.

கடந்த 10 ஆண்டுகளாக காரைக்கால் பக்கம் அவர்கள் செல்லவே இல்லை. காரைக்காலில் பல்வேறு துறைகளில் குளறுபடிகள் உள்ளன. அதனை எல்லாம் சரிசெய்ய வேண்டும். அமைச்சர்கள் தங்கள் துறைகளில் சுதந்திரமாகவும் சிறப்பாகவும் பணியாற்றாத பட்சத்தில் தான் நான் தலையிடுவேன். ஆளுநரையும் நாம் அரவணைத்துச் செல்ல வேண்டும் அண்டை மாநிலத்தோடும் சுமுக உறவு வைக்க வேண்டும். தமிழகத்தில் ரமழான் நோன்பிருக்கும் இஸ்லாமியர்களுக்கு இலவச அரிசி வழங்கப்படுவது போல புதுவையிலும் அந்தத் திட்டம் உடனடியாக அமுல்படுத்தப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## 13 சிறுவர்கள் உட்பட 14 பேர் ஏரியில் படகு கவிழ்ந்ததில் பலி

வட ரஷ்யாவிலுள்ள கரேலியா பிராந்தியத்திலுள்ள ஏரியொன்றில் புயல் தொடர்பான எச்சரிக்கை யையும் மீறி படகு சவாரியில் ஈடுபட்ட 13 சிறுவர்களும் அவர்களது பயிற்றுவிப்பாளரும் உயிரிழந்துள்ளனர்.

அதேசமயம் அந்த சயமோஸீரோ ஏரியில் மேற்படி படகு சவாரியில் பங்கேற்ற ஏனைய 37 பேர் ஏரியின் மத்தியிலுள்ள நிலப் தீவு போன்ற பகுதியொன்றிலிருந்து பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் இடம்பெற்ற போது அந்தப் படகில் 47 சிறுவர்களும் 4 பயிற்றுவிப்பாளர்களும் இருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

அவர்கள் மொஸ்கோ நகரிலிருந்து விடுமுறையைக் கழிப்பதற்காக அந்தப் பிராந்தியத்துக்கு சென்றிருந்தனர்.

இந்நிலையில் எச்சரிக்கையையும் மீறி படகுச் சவாரியை மேற்கொண்ட குற்றச்சாட்டில் பயிற்றுவிப்பாளர்கள் உட்பட நால்வரை பொலிஸார் கைது செய்துள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மேற்படி மீட்பு நடவடிக்கைகளில் பல படகுகளும் உலங்குவானூர்திகளும் ஈடுபடுத்தப்பட்டிருந்தன. (இ-5)

## விமானப் பெண் பணியாளர்களுக்கு சீனாவில் விசேட இராணுவப் பயிற்சி



(பீஜிங்)

சீனாவில் விமானத்தில் அவசரகால நிலைமைகளை எதிர்கொண்டு சமாளிக்கும் முகமாக விமானத்தில் சேவையாற்றவுள்ள பணியாளர்களுக்கு இராணுவப் பயிற்சி வழங்கப்படுகிறது.

செங்டு ஈஸ்ட் ஸ்டார் எயார்லைன்ஸ் கல்லூரியைச் சேர்ந்த மேற்படி பெண்களுக்கு செங்டு சிவில் விமான அக்கடமியில் இராணுவப் பயிற்சி வழங்கப்படுவதை படத்தில் காணலாம்.


மேற்படி பயிற்சியில் பங்கேற்ற சுமார் 20 பெண்கள் பாரிய மரக்குற்றிகளைத் தூக்குதல், மண் சகதியினூடாக பயணித்தல் உள்ளடங்கலான பயிற்சிகளில் ஈடுபட்டனர்.

மேற்படி பயிற்சியானது வன்முறையில் ஈடுபடும் பயணிகளை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு விமானப் பணிப்பெண்களுக்கும் ஏனைய பெண் உத்தியோகத்தர்களுக்கும் உதவும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (இ-5)



# சிறுவர் அரங்கம்

1463




# ஒரு தேவதையும் மயிலும்!

...பாவம் மலைபோன்ற இவனின கறுத்த உடல், மிகவும் தடித்த உலக்கை போன்ற கால்கள், படு கோரமான உலக அதிசயமான நீண்ட மூக்கு, இந்த லட்சணங்களுக்கு சற்றும் ஒவ்வாத மிகவும் குட்டையான வால்.

இவனுக்குத்தான் உன் உதவி மிகவும் தேவை. என் அழகி ற்கு இணையாக இவனை மாற்று நண்பா!" என்றது மிகவும் அட்டகாசமாக.

இதைக் கேட்ட யானைக்கு வந்த கோபத்தை பார்க்க வேண்டுமே. "டேய்! அயோக்கிய ராஸ்கல்!" என்று கர்ஜித்துவிட்டு, தன் தும்பிக்கை நிறைய தண்ணீரை நிரப்பி குதிரை மேல் பாய்ச்சியது. தன் வாலை சுழற்றி தன் அருகில் இருந்தவர்களை துரத்தி, தன் கால்களால் தரையில் ஓங்கி ஓங்கி அடிக்க, மண்ணும் சகதியும் கூடியிருந்த கூட்டத்தின் மேல் ஒரே சகதி அபிஷேகம்!

"என் அழகிற்கு என்ன குறைச்சல்? இதைவிட என்னை எப்படி அழகாக்குவாய்? என் உருவம்தான் என் பலம், என் அழகு. உனக்கு உன் திறமையை வெளிப்படுத்த ஒரு சந்தர்ப்பம் வேண்டுமெனில், அதோ அந்த மரத்தில் உட்கார்ந்திருக்கும் மிக பரிதாபத்திற்குரிய அந்த மயிலைப் பார். அழகான மூக்கில்லை, பித்தளை கெட்டிலின் மூடியைப் போன்ற சின்னத்தலை, பாவம்.

செத்த காக்கையைப் போல் கறுத்த சிறகுகள். குச்சி குச்சியாக விளக்கு மாற்று குச்சிபோன்ற வால். தயை செய்து அவனை அழகாக்கு. உம் சீக்கிரம். உன் கை வண்ணத்தைப் பார்க்க மிக ஆவலாக இருக்கிறது!" என்றது மிக ஜம்பமாக.

உடனே சட்டென்று மரத்திலிருந்து, "பெருமைக்குரிய கருணையான தேவதையே! தயவு செய்து என்னை அழகாக்கு.

குரங்கைப் போன்ற கால்கள் இல்லை. குதிரையைப் போன்ற வாலில்லை. யானையைப் போன்ற உடலும், மூக்கும் இல்லை. இவர்களைப் போல் பெருமைபட்டுக் கொள்ள என்னிடம் என்ன இருக்கிறது. தயவு செய்து எனக்கு உதவு. என்றென்றும் உனக்கு நான் நன்றிக் கடன் பட்டவனாக இருப்பேன்!" என்றது மிகவும் சோகம் கூப்பிய குரலில்.

""மயிலே! கவலைப்படாதே. உன் தன் அடக்கத்திற்கு என்றுமே மதிப்புண்டு. அதற்கு வெகுமதியாக இதோ பார்!" என்று சொல்லி கண் இமைக்கும் நேரத் தில் தன் கைவணணத்தை காட்ட ஆரம்பித்தது.

"இனி உன் மிக அழகான நீளமான தோகையைக் கண்டு உலகமே வியக்கும். உன் தோகையில் நான் தீட்டப் போகும் கண்களைப் போன்ற மிகவும் கவர்ச்சியான கண்கள், அரண்மனையில் பிறக்கும் இளவரசிக்குக் கூட இருக்காது!" மேற்கொண்டு பேச்சை முடிக்கும் முன், ஓ அங்கே கண்கவர் மயிலாக உருமாறியது.

கூடியிருந்த அந்த மிருகங்களின் கூட்டம், பெருமை கொழுந்து விட்டு எரியும் கண்களுடன் அதனை பார்த்து வியந்தன.

"ஐயோ இந்த தேவதையை பார்த்து தப்பு கணக்கு போட்டு நம் தலையில் நாமே மண்ணை வாரி போட்டுக் கொண்டு விட்டோமே' என்று மனதிற்குள் புழுங்கிக் கொண்டன என்று சொல்லவும் வேண்டுமா?

(முற்றும்)




- 1593 - குரொவெசியர்கள் சிசாக் என்ற இடத்தில் இடம்பெற்ற சமரில் துருக்கியர்களை வென்றனர்.
- 1633 - அண்டத்தின் மையம் பூமி அல்ல, சூரியன் என்ற தனது அறிவியல் கொள்கையை கலிலியோ கலிலி ரோமின் அரசுப் படைகளின் வற்புறுத்தலின் பேரில் திரும்பப் பெற்றுக் கொண்டார்.
- 1658 - போர்த்துக்கேயரிடம் இருந்து ஒல்லாந்தர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றினர்.
- 1783 - ஐஸ்லாந்தின் லாக்கி எரிமலையிலிருந்து வெளியேற்றிய நச்சு வளி பிரான்சின் ல ஹாவ்ரா நகரைத் தாக்கியது.
- 1812 - முதலாம் நெப்போலியன் ரஷ்யாவின் மீது போரை அறிவித்து முற்றுகையிட்டான்.
- 1815 - நெப்போலியன் பொனபார்ட் இரண்டாம் தடவையாக பதவியிழந்தான். 4 வயதான இரண்டாம் நெப்போலியன் இரண்டு வாரங்களுக்கு ஆட்சியில் அமர்ந்தான்.
- 1825 - பிரித்தானிய நாடாளுமன்றம் நிலமானிய முறையை நீக்கியது.
- 1848 - பாரிசில் தொழிலாளர்களின் ஜூன் நாட்களின் எழுச்சி ஆரம்பமாயிற்று. ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டனர்.
- 1866 - ஆஸ்திரிய-புரூசிய போரில் ஆஸ்திரிய இராணுவம் இத்தாலிய இராணுவத்தைத் தோற்கடித்தனர்.
- 1893 - காம்பர்டவுன் என்ற ரோயல் கடற்படைக் கப்பல் ஒன்று விக்டோரியா என்ற பிரித்தானிய மத்தியதரைக்க் கடற்படைக் கப்பலுடன் மோதியதில் 358 மாலுமிகள் கொல்லப்பட்டனர்.
- 1898 - ஸ்பானிய-அமெரிக்கப் போர்: அமெரிக்கக் கடற்படையினர் கியூபாவில் தரையிறங்கினர்.
- 1911 - ஐந்தாம் ஜோர்ஜ் ஐக்கிய இராச்சியத்தின் மன்னனாக முடி சூடினான்.
- 1940 - இரண்டாம் உலகப் போர்: பிரான்ஸ் கட்டாயமாக நாசி ஜெர்மனியுடன் அமைதி உடன்பாட்டுக்கு ஒப்புக் கொண்டது.
- 1941 - கிழக்குப் போர்முனை: ஜெர்மனிப் படையினர் சோவியத் ஒன்றியத்தை முற்றுகையிட்டனர்.
- 1941 - சோவியத் ஆக்கிரமிப்புக்கு எதிரான லித்துவேனியாவின் விடுதலைப் போர் ஆரம்பமானது.
- 1962 - எயார் பிரான்சின் போயிங் விமானம் மேற்கிந்தியத் தீவுகளில் கௌதலூபே தீவில் விபத்துக்குள்ளாகியதில் 113 பேர் கொல்லப்பட்டனர்.
- 1976 - கனடாவில் மரணதண்டனை தருவது நிறுத்தப்பட்டது.
- 1978 - புளூட்டோவின் சாரண் என்ற துணைக்கோள் கண்டுபிடிக்கப்பட்டது.
- 1986 - மெக்சிகோவில் இடம்பெற்ற உலகக் கோப்பை காற்பந்தாட்டப் போட்டியில் ஆர்ஜெண்டீனிய வீரர் மரடோனா நூற்றாண்டுக்கான கோலைப் போட்டார்.
- 2002 - மேற்கு ஈரானில் இடம்பெற்ற 6.5 றிக்டர் அளவு நிலநடுக்கத்தில் 261 பேர் கொல்லப்பட்டனர்.

பிறப்புகள

- 1962 - க்ளைட் ட்ரெக்ஸ்லர், முன்னாள் அமெரிக்கக் கூடைப்பந்து ஆட்டக்காரர்
- 1964 - டான் ப்ரவுன் ஆங்கில எழுத்தாளர்
- 1974 - விஜய், தென்னிந்திய நடிகர

இறப்புகள்

- 1990 - ஈலியா பிராங்க், நோபல் பரிசு பெற்ற ரஷ்ய இயற்பியலாளர் (பி. 1908)

# விஜய்




விஜய் தமிழ்த் திரைப்பட நடிகர் ஆவார். தொடக்கத்தில் இவர் தனது தந்தையான எசு. ஏ. சந்திரசேகர் இயக்கிய திரைப்படங்களில் நடித்து வந்தார். ஏறத்தாழ 10 படங்களுக்குப் பிறகு தமிழ்த் திரைப்படத் துறையில் தனது இடத்தைத் தக்கவைத்துக் கொண்டார். இன்று இவர் தமிழ்த் திரைப்படத்துறையில் முக்கிய நடிகர்களுள் ஒருவராகக் காணப்படுகிறார். விஜயின் ரசிகர்கள் அவரை "இளைய தளபதி" என்று அழைக்கிறார்கள். விஜய் குழந்தைப் பருவத்தில் இருந்தே தன்னுடைய தந்தையின் படங்களில் நடித்து வருகிறார். பின்னர் கதாநாயகனாக நடிக்கத் தொடங்கினார். கதாநாயகனாக அவர் நடித்த முதல் படம் நாளைய தீர்ப்பு. பின்னர் அவரது தந்தையின் இயக்கத்தில் கதாநாயகனாக பல படங்களில் நடிக்கத் தொடங்கினார். தற்பொழுது, விஜய்க்காக தளபதி ஆன்தம் என்ற பெயரில் ஒரு பாடல் ஒன்றை உருவாக்கி வருகிறார்கள் .எங்கேயும் எப்போதும் படத்தில் பேருந்து காட்சிகளில், கல்லூரி மாணவனாக நடித்த வாட்சன் என்பவர் இதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறார். இப்பாடலை தனது நண்பர்களுடன் இணைந்து உருவாக்கி வரும் வாட்சன், இப்பாடலை தயார் செய்து வெளியிட தீர்மானித்து இருக்கிறார். இவர் விளம்பரப் படங்களிலும் நடிக்கிறார் கொக்கக் கோலா , டோகோமா நகர்பேசி மற்றும் ஜோஸ் ஆலுக்காஸ் போன்ற விளம்பரப்படங்களிலும் நடித்தார்.

# சிறையில் அடைப்பதன் மூலம் அரசியலை மாற்றிவிட முடியாது

## தினேஷ் குணவர்த்தன காட்டம்

(கொழும்பு)

**அரசியல்வாதிகளை சிறையில் அடைப்பதன் மூலம் நாட்டின் அரசியலை மாற்றி விட முடியாது என கூட்டு எதிர்க்கட்சியின் தலைவர் தினேஷ் குணவர்த்தன காட்டமாக தெரிவித்துள்ளார்.**



கொழும்பு மகசின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பிவித்துரு ஹெல உறுமய கட்சியின் தலைவர் உதய கம்மன்பிலவை பார்வையிடச்சென்று திரும்பிய போது நேற்றுமுன்தினம் ஊடகவியலாளர்களிடம் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஆளும் கட்சிக்கு எதிராக செயற்படும் எதிர்க்கட்சி உறுப்பினர்களின் பின்னணியில் இவ்வளவு அரசியல் சூழ்ச்சிகள் மேற்கொள்ளப்படுவதன் மர்மம் புரியவில்லை.

உதய கம்மன்பில அவரது கட்சி அலுவலகத்தில் கடந்த 18 ஆம் திகதி கைது செய்யப்பட்டார். அதன் பின்னர் அன்றே நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

நாடாளுமன்ற உறுப்பினராகவும் சட்டத்தரணியாகவும் உதய கம்மன்பில கடமையாற்றுகின்றார். அவ்வாறான ஓர் நபர் எப்போதும் ஒளிந்து திரிவதில்லை.

அவ்வாறான ஓர் பின்னணியில் அரசாங்கம் அவசரமாக உதய கம்மன்பிலவை கைது செய்து சிறையில் அடைத்தமைஏனென்று புரியவில்லை என தினேஸ் குணவர்த்தன கேள்வி எழுப்பியுள்ளார். (இ-5)

# சிறைச்சாலை உணவை நிராகரித்தார் கம்மன்பில

(கொழும்பு)

கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள பிவித்துரு ஹெல உறுமய கட்சியின் தலைவர் உதய கம்மன்பில சிறைச்சாலை உணவு வகைகளை நிராகரித்துள்ளார்.

நேற்று முன்தினம் முதல் வீட்டிலிருந்து உணவு பெற்று உட்கொண்டு வருகின்றார்.

கொழும்பு மகசின் சிறைச்சாலையில் உதய கம்மன்பில தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

ஆவண மோசடி செய்து சொத்துக்களை அபகரித்துக் கொண்டதாக உதய கம்மன்பில மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

கடந்த 18 ஆம் திகதி முதல் முற்பகல் வரையில் சிறைச்சாலை உணவை உதய கம்மன்பில உட்கொண்டார்.

எனினும், 'தொடர்ந்தும் சிறைச்சாலை உணவை உட்கொள்ள முடியாது எனவும் வீட்டிலிருந்து உணவு பெற்றுக்கொள்ள அனுமதிக்குமாறும் உதய கம்மன்பில விடுத்த கோரிக்கையை சிறைச்சாலை அதிகாரிகள் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

உறங்குவதற்கு பாய் ஒன்று வழங்கப்பட்டுள்ளதாகவும் மகசின் சிறைச்சாலையின் ஈ வார்டில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

உதய கம்மன்பிலவிற்கு உரிய பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (இ-5)

# லசந்த, எக்னெலிகொட தொடர்பில் நீதிமன்ற விசாரணைகளை ஆரம்பிக்கும் இராணுவம்

சண்டேலீடர் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க கொலை செய்யப்பட்டமை மற்றும் ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட காணாமல் போனமை தொடர்பில் இலங்கை இராணுவம் இரண்டு நீதிமன்ற விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளது.

இந்த இரண்டு சம்பவங்கள் தொடர்பிலும் இராணுவத்திடம் இருந்த ஆவணங்கள் தொலைந்துள்ளதாக கூறி அதனை கண்டு பிடிக்கும் நோக்கில், இரண்டு விசாரணை நீதிமன்றங்களை இராணுவ தளபதி அமைத்துள்ளதாக இராணுவத்தின் செய்திக்குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில் லசந்த விக்கிரமதுங்க கொலை தொடர்பான விசாரணைகளுக்கு இராணுவம் ஒத்துழைப்பு வழங்கவில்லை என்று கூறப்படும் குற்றச்சாட்டை இராணுவம் அறிக்கை ஒன்றின் மூலம் மறுத்துள்ளது.

இராணுவத்தை பொறுத்தவரையில் நாட்டின் பாதுகாப்பு, சட்டம் ஒழுங்கு தொடர்பில் பிழை செய்பவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கத் தயங்காது என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

# மகிந்தவின் 82 மில். நிதிமோசடி அம்பலம்



## ரஞ்சன் குற்றச்சாட்டு

நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த ராஜபக்ஷ ஆழிப்பேரலை அனர்த்தத்தின் போது வழங்கப்பட்ட உதவித் திட்டத்தில் 82 மில்லியன் டொலர்களை மோசடி செய்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரதி அமைச்சர், ரஞ்சன் ராமநாயக்க இந்த குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

மகிந்த, முன்னாள் பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ், மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் ஆகியோர், தொழில்நுட்பத்தில் தேர்ச்சி பெற்றவர்களை அருகில் வைத்துக் கொண்டு இந்த ஊழலை மேற்கொண்டனர்.

இதன் காரணமாகவே தங்களை கைது செய்யுமாறு அச்சமின்றி கூறி வருகின்றனர்.

தவறிழைத்திருப்பார்களாயின் கட்சி பேதமின்றி அவர்கள் தொடர்பில் கருத்துக்களை வெளியிட தாம் ஒரு போதும் அச்சமடையப் போவதில்லை. அமைச்சர் ஜோன் அமர துங்க மற்றும் ஹிருணிகா ஆகியோரின் குற்றங்கள் தொடர்பிலும் தாம் அச்சமின்றி கருத்துக்களை வெளியிட்டதாக அவர் தெரிவித்துள்ளார். (இ-5)

# இன்று ஒரு தகவல்

## கலந்து பழகுவதுண்டா?

மற்றவர்களோடு நன்கு பேசிக் கொள்ளாதவர்களை, நன்கு கலந்து பழகாதவர்களை என்னால் புரிந்து கொள்ள முடிவதில்லை. இந்த உலகில் நாம் வாழும் நாட்களைக் காட்டிலும் நம்மைப் பற்றிய நினைப்புகள் மற்றவர்களின் இதயத்தில் வாழும் நாட்களே அதிகமாக இருக்க முடியும். அப்படியிருக்க

சிரிப்பை உதிர்க்காமல்

வாயைத் திறக்காமல்

சகஜமாகப் பழகாமல்

வாழும் இவர்கள், தங்கள் செயலுக்கு எப்படி நியாயம் கற்பிக்கப் போகிறார்கள்? தாங்கள் செய்வது சரிதான் என்று இவர்களால் எப்படிக் கூற முடியும்? மற்றவர்களிடமும் நன்கு பேசாமலும் பழகாமலும் இருப்பவர்களுக்கு உலகமே சூன்யமாகிவிட்டதைப் போன்ற உணர்வு ஏற்படும்.

வாழ்வில் போதுமானபிடிப்பு இராது, தனிமை வதைக்கும், உலகமே ஒதுக்கித் தள்ளிவிட்டது என்பது போன்ற நினைப்பு நெஞ்சை அடைத்துக் கொள்ளும். இத்தகைய கொடுமைப் பாம்புகளின் நடுவே இவர்கள் எப்படி வாழ்கிறார்கள். வேதனை தான்! கலந்து பழகுவது என்றால் அரட்டை அடிப்பதல்ல! நம்மைச் சந்திப்பதை அல்லது நம்முடன் இருப்பதை மற்றவர்கள் விரும்ப வேண்டும். நம்மை வேற்று மனிதர் என எண்ணாத நினைப்பு மற்றவர்களுக்கு ஏற்பட வேண்டும்.

காரியம் என்றால் தான் மதிப்பார்; பழகுவார்; இல்லாவிட்டால் மிதிப்பார்; ஒதுங்குவார் என்ற நினைப்பு மற்றவர்களுக்கு ஏற்படவே கூடாது. கலந்து பழகாதவர்களைத் திமிர் பிடித்தவர்கள் என உலகம் மதிப்பிட்டு விடுகிறது. இந்த மதிப்பீடு தவறு தான். ஆனால் உலகத்தை திருத்த முயல்வதை விட இவர்கள் தங்களை மாற்றிக் கொள்ள முயல்வது எளிதானது. மூட் இருந்தாலும் இல்லாவிட்டாலும் விக்கிரமாதித்தன் கூடுவிட்டு கூடு பாய்வானாமே, அப்படி மற்றவர்களைச் சந்திக்கும் போது, நம் மனத் துன்பங்களை அழுத்திக் கொண்டு சகஜ உணர்வுகளை மேலே கொண்டு வர வேண்டும்.

பெண்களுக்கு இப்பட்டுவிட்ட சிறுவட்டத்தை அறியாமல் இப்படிக் கலந்து பழகச் சொல்கிறீர்களே? எனப் பெண் இனத்தின் கேள்வி வளையங்கள் என் பேனாவைப் பின்னுவதாக இந்தக் கணம் உணர்கிறேன்.

நியாயமான கேள்வி.

பெண்கள் பெண்களோடு கலந்து பழகுவதில் தவறில்லை. ஆண்களோடு பழகுவதைப் பொறுத்தவரை அவர்கள் யாரைச் சார்ந்திருக்கிறார்களோ அவர்களது உணர்வுகளை மதித்து அளந்து, அதற்கு ஏற்ப எல்லையோடு கலந்து பழகலாம், குற்றமில்லை.

கலந்து பழகாமல் ஒரு மாதிரியான பேர் வழி என்றும், சிடுமூஞ்சி என்றும் பெயரைச் சம்பாதித்துக் கொண்டால் வாழ்வில் வெறுமையைத் தவிர வேறெதுவும் மிஞ்சாது.

**லேனா தமிழ்வாணன்**

## துவிச்சக்கர வண்டி வழங்கல்




யாழ். மண்டைதீவு மக்கள் முன்னேற்ற ஒன்றியம் மண்டைதீவு மகா வித்தியாலய மாணவி ஒருவருக்கு அதிபர் முன்னிலையில் துவிச்சக்கர வண்டி ஒன்றை நேற்றைய தினம் வழங்கியுள்ளது. (இ-7)



## நாணயமாற்று விகிதம்

மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கை-21.06.2016

| நாடு | நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|---|
| அமெரிக்கா | டொலர் | 143.76 | 147.54 |
| பிரிட்டன் | பவுண்ட் | 209.97 | 217.43 |
| ஐரோப்பிய ஒன்றியம் | ஈரோ | 161.96 | 168.43 |
| சுவிட்சர்லாந்து | பிராங் | 148.47 | 154.73 |
| கனடா | டொலர் | 111.64 | 116.31 |
| அவுஸ்திரேலியா | டொலர் | 106.49 | 111.50 |
| சிங்கப்பூர் | டொலர் | 106.57 | 110.69 |
| இந்தியா | ரூபா | 2.1424 | ------- |
| சீனா | யுவான் | 21.9830 | -------- |

மத்திய கிழக்கு நாடு

| நாடு | நாணயம் | பெறுமதி |
|---|---|---|
| பகரெயின் | டினார் | 383.2997 |
| குவைத் | டினார் | 480.3859 |
| ஓமான் | ரியால் | 375.4198 |
| கட்டார் | ரியால் | 39.7029 |
| சவுதி அரேபியா | ரியால் | 38.5400 |
| ஐக்கிய அரபு எமிரேட்ஸ் | டிராம் | 39.3505 |



## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 100 | 50 | 70 | 80 | 80 | 80 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 80 | 100 | 90 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 600 | 400 | 450 | 400 | 550 | 800 | 600 |
| தக்காளி | 240 | 200 | 200 | 220 | 180 | 240 | 180 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 100 | 60 | 70 | 70 | 120 | 80 |
| கோவா | 180 | 300 | 120 | 160 | 160 | 200 | 180 |
| கரட் | 250 | 300 | 250 | 320 | 280 | 400 | 250 |
| பூசணி | 80 | 100 | 80 | 80 | 70 | 100 | 70 |
| புடோல் | 100 | 300 | 70 | 90 | 100 | 120 | 80 |
| வாழைக்காய் | 100 | 100 | 60 | 60 | 70 | 80 | 100 |
| சின்ன வெங்காயம் | 80 | 200 | 140 | 120 | 140 | 200 | 120 |
| பெரிய வெங்காயம் | 130 | 100 | 70 | 80 | 80 | 100 | 80 |
| பாகற்காய் | 200 | 500 | 200 | 200 | 200 | 200 | 250 |
| வெண்டிக்காய் | 140 | 300 | 100 | 140 | 100 | 120 | 120 |
| கருணைக் கிழங்கு | 120 | 200 | 100 | 120 | 120 | 160 | 120 |
| பயற்றங்காய் | 200 | 200 | 100 | 120 | 140 | 160 | 180 |
| லீக்ஸ் | 220 | 200 | 150 | 160 | 200 | 240 | 200 |
| பீற்றூட் | 140 | 200 | 180 | 140 | 180 | 200 | 150 |
| கறிமிளகாய் | 300 | 400 | 220 | 300 | 260 | 280 | 250 |
| முருங்கைக்காய் | 450 | 400 | 400 | 800-1000 | 400 | 600 | 900 |
| போஞ்சி | 250 | 400 | 180 | 240 | 200 | 240 | 200 |
| கத்தரிதம்புள்ள | 60 | 50 | — | 60 | 80 | 80 | 80 |
| கீரை-1பிடி | 30 | 50 | 10 | 30 | 30 | 20 | 30 |
| தேசிக்காய் | 200 | 300 | 150 | 240 | 250 | 200 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 50 | 15-25 | 40 | 30 | 20-30 | 40 |
| இராசவள்ளி | 180 | 300 | 120 | 160 | — | 200 | 160 |
| வெங்காயப்பூ | 250 | 300 | — | 240 | — | — | 300 |
| முள்ளங்கி | 100 | 200 | — | 100 | — | 120 | 100 |
| பொன்னாங்காணி | 30 | 50 | 20 | 30 | 40 | 40 | 30 |
| வல்லாரை | 10 | 20 | 10 | 10 | 20 | 20 | 15 |
| ஈரப்பலா | 80 | 120 | — | 80 | 80 | 80 | 70 |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## நெருக்கடி நிலை பிரகடனம் சந்திரிகா அதிரடி நடவடிக்கை 209

### இந்தியாவுக்குத் தெரிவிப்போம்

முதல் கட்ட பேச்சு வார்த்தை விவரங்களை இந்திய அரசிடம் தெரிவிப்போம்.

நாட்டில் தமிழர் பிரச்சனைக்கு தீர்வு ஏற்பட்டால் மகிழ்ச்சி அடையும் முதல் நாடு இந்தியாவாகத்தான் இருக்கும். அமைதி முயற்சியை இந்தியா ஆதரிப்பது மிகவும் சந்தோசமாக இருக்கிறது.

இவ்வாறு பாலசிங்கம் கூறினர்ர்.

### மகிழ்ச்சி

அமைச்சர் பீரிஸ் நிருபர்களிடம் கூறுகையில், விடுதலை புலிகளுக்குத் தனி நாடு கோரிக்கை இல்லை என்பதை நான் அறிவேன். அது குறித்து அரசு மகிழ்ச்சி கொள்கிறது. எல்லாம் சரியான போக்கில் சென்று கொண்டு இருந்தால் தமிழர்களின் விருப்பம் நிறைவேற்றப்படும் என்று தெரிவித்தார்.

சமரசப் பேச்சு வார்த்தை நடப்பதற்கு ஏதுவாக விடுதலைப் புலிகள் மீதான தடையை அரசு ஏற்கனவே நீக்கி இருந்தது. இந்த தடை நீக்கம் மேலும் 4 மாதத்துக்கு நீக்கப்பட்டது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க-சந்திரிகா இடையே மோதல் முற்றியது. எனவே பாதுகாப்பு அமைச்சர் உட்பட 3 அமைச்சர்களை சந்திரிகா பணிநீக்கம் செய்தார். பாராளுமன்றத்தை சஸ்பெண்ட் செய்ததுடன் நெருக்கடி நிலை பிரகடனம் செய்தார்.

இதனால் பரபரப்பும் கொந்தளிப்பும் ஏற்பட்டன.

### மோதல்

ஜனாதிபதி சந்திரிகாவின் கட்சியான இலங்கை சுதந்திர கட்சி 2001 ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் தோற்றது.

இதனால் வெற்றி பெற்ற தேசிய கட்சி சார்பில் ரணில் விக்ரமசிங்க பிரதமரானார்.

இருவரும் வெவ்வேறு அரசியல் கட்சிகளை சேர்ந்தவர்கள் என்பதால் இருவருக்கும் இடையே மோதல்கள் ஏற்பட்டன.

பிரதமரையும் அமைச்சர்களையும் நீக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு. இராணுவம், கடற்படை, விமானப்படைகளைக் கட்டுப்படுத்தும் அதிகாரமும் ஜனாதிபதிக்கு உண்டு.

### அமெரிக்காவில் பிரதமர்

இது போன்ற அரசியல் சூழ்நிலையில் பிரதமர் ரணில் விக்ரமசிங்க அமெரிக்கா சென்றார். ஜனாதிபதி புஸ் உடன் அவர் 05-11-2003 அன்று பேச்சு நடத்தினார்.

விடுதலை புலிகளின் சமர சத்திட்டத்தை ஏற்பது பற்றி சர்வதேச ஆதரவு பெறுவதற்காக இந்த சந்திப்பு நடந்தது.

### அதிரடி நடவடிக்கை

இந்த நிலையில் ஜனாதிபதி சந்திரிகா அதிரடி நடவடிக்கையை மேற்கொண்டார். அமைச்சர்கள் 3 பேரை அவர் பதவி நீக்கம் செய்தார். இவர்கள் காபினெண்ட் அந்தஸ்து உள்ளவர்கள்.

பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரபனா, உட்துறை அமை ச்சர் ஜான் அமரதுங்கா, செய்திதுறை அமைச்சர் இம்தியாஸ் பகீர் மார்கர் ஆகியோர் நீக்கப்பட்டனர். அவர்களது துறைச்செயலாளர்களும் நீக்கப்பட்டனர்.

### பாராளுமன்றம் சஸ்பெண்டு

பாராளுமன்றத்தில் 12-11-2003 அன்று 2004 ஆம் ஆண்டுக்கான பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இந்த நிலையில் பாராளுமன்றத்தை 2 வார காலம் சஸ்பெண்டு செய்து ஜனாதிபதி 04-11-2003 அன்று அதிரடி உததரவை பிறப்பித்தார்.

இதன்படி பாராளுமன்றம் 19 ஆம் திகதி வரை செயற்படாது.

இது குறித்து ஜனாதிபதி சபாநாயகர் ஜோசப் மைக்கேல் பெரேராவுக்கு கடிதம் அனுப்பினர்.

### இராணுவம் விரைந்தது

ஜனாதிபதியின் அதிரடி உத்தரவுகள் அறிவிக்கப்பட்டதும் இராணுவம் கொழும்பு நகரின் முக்கிய வீதிகளில் பாதுகாப்புக்காக நிறுத்தப்பட்டன.

கொழும்பு நகரில் உள்ள மின்சார நிலையம், அரசு தொலைக்காட்சி நிலையம் செய்தித்துறை அலுவலகம் அரசு அச்சகம் மற்றும் முக்கிய இடங்களில் பாதுகாப்பு பொறுப்பை இராணுவம் ஏற்றது. இதனால் கொழும்பு நகரில் பதற்றமும் பரபரப்பும் நிலவியது.

ஜனாதிபதியின் அதிரடி நடவடிக்கைகளால் நாட்டில் அரசியல் நெருக்கடி ஏற்பட்டு இருப்பதாக அரசியல் நிபுணர்கள் கருத்து தெரிவித்தனர். நாட்டில் அமைதி முயற்சி பாதிக்கப்படும் என்று கருதப்பட்டது.


### பிரதமர் அறிக்கை

இந்த நிலையில் வோசிங்டன் நகரில் இருந்து பிரதமர் விக்ரமசிங்க வெளியிட்ட அறிக்கையில் இருந்ததாவது,

ஜனாதிபதியின் பொறுப்பற்ற நடவடிக்கையால் நாட்டில் குழப்பம், அமைதி இன்மை புரட்சி ஏற்படும் நிலை உருவாகும். பொருளாதார சீர் குலைவும் ஏற்படும்.

தற்போது அரசு எடுத்து வரும் அமைதி நடவடிக்கைகளுக்கு பங்கம் விளைவிக்க ஜனாதிபதியை அனுமதிக்க மாட்டேன்.

நான் நாட்டிற்கு வரும் வரை பொதுமக்களும் இராணுவத்தினரும் பொலிஸாரும் அரசு ஊழியர்களும் அமைதி காக்கும் படி கேட்டு கொள்கிறேன் இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டிருந்தது.





(தொடரும்)

# முதியோர் பாதுகாப்பிற்காக புதிய யாப்பு

(கொழும்பு)

**தமது பிள்ளைகளால் கைவிடப்பட்டு நிர்க்க திக்குள்ளாகும் முதியவர்களின் உரிமைகளை பாதுகாப்பதற்கென புதியதோர் யாப்பு உருவாக்கப்படுமென சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.**



பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற முதியோர்களுக்கான விசேட நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஐக்கிய நாடுகளின் முதியோர் பாதுகாப்பு தொடர்பான விசேட வேலைத்திட்டத்தில் நாமும் இணைத்து கொள்ளப்பட்டுள்ளோம்.

மேலும் எமது நாட்டினது முதியோர்களின் எண்ணிக்கை கடந்த காலத்தைவிட வெகுவாக அதிகரித்துள்ளது.

. இதற்கு பிரதான காரணம் மக்களினது ஆயுட்காலம் அதிகரித்தமையே ஆகும்.

குறிப்பாக இலங்கையில் கடந்த 1952 ஆம் ஆண்டளவில் சராசரி மனிதனது ஆயுட் காலமானது 52 வயதாகவே காணப்பட்டது. எனினும் அது 60,65 வயது மட்டத்தை கடந்து தற்போது 70 ஆக அதிகரித்துக் காணப்படுகின்றது.

இந்நிலையில் இலங்கையை பொறுத்தமட்டில் நூற்றுக்கு 99 வீதமான முதியவர்கள் தங்களது பிள்ளைகளிடத்தில் தங்கி வாழ்பவர்களாகவே இருக்கின்றனர். இதில் பலர் சூழ்நிலை காரணமாக தனித்து விடப்படுகின்றனர்.

இவ்வாறு தனித்து விடப்படுபவர்களின் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் அவர்களுக்கான இருப்பிடத்தை ஏற்படுத்திக்கொடுப்பது அவசியமாகின்றது.

இதற்கென இலங்கையில் 300இற்கும் மேற்பட்ட முதியோர் இல்லங்கள் செயற்பட்டு வருகின்றன. மேலும் வேலை நிமித்தம் புலம் பெயர்ந்துள்ள பிள்ளைகளால் தங்களது பெற்றோர்களுக்கு பணம் அனுப்பப்பட்டாலும் அவர்களின் நலன் பாதுகாப்பு தொடர்பான காரணங்களால் பலர் பெரிதும் முதியோர் இல்லத்தினை நாடுகின்றனர். இந் நிலையில் பெரும்பாலான முதியவர்களை குறைந்த பட்ச சேவையாளர்களே கவனிக்கின்றனர்.

இவர்களது ஊதியமும் வெறும் பத்தாயிரம் ரூபாவிற்கும் குறைவாகவே இருக்கின்றது.

இதற்காக திவிநெகும மற்றும் சமுர்த்தி நலன்புரி அமைப்புகளில் பெறப்படும் நிதியினைக் கொண்டு முதியோர் இல்லங்களில் காணப்படும் குறை களை நிவர்த்தி செய்யவுள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## பொலிஸாருக்கான புதிய ஒழுக்க விதிக்கோவை

பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கான ஒழுக்க விதிக்கோவையை தயாரிப்பதற்கு தேசிய பொலிஸ் ஆணைக்குழு (NPC) நடவடிக்கை எடுத்துள்ளது.

பொதுமக்களுடனான பரஸ்பர உறவை பேணும் முகமாகவே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அண்மையில் இடம்பெற்ற அமர்வொன்றின் போது இதற்கான அனுமதி கிடைத்துள்ளதாக ஆணைக்குழுவின் செயலாளர் ஆரியதாச குரே தெரிவித்தார்.

நாடளாவிய ரீதியில் இப்புதிய ஒழுக்க விதி கோவையானது அடுத்த மாதமளவில் வெளியிடப்படுமென அவர் தெரிவித்தார்.

மக்களுடன் இணைந்து செயற்படும் போது பொலிஸார் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்க விதிகள் உள்ளிட்ட பல விதிகளை உள்ளடக்கி இந்த ஒழுக்க விதிக் கோவை தயார் செய்யப்படவுள்ளது.

புதிய ஒழுக்க விதிக் கோவையில் பொலிஸ் உத்தியோகத்தர்கள் அனைவரிடமும் கையெழுத்து பெறப்படும் எனவும் தேசிய பொலிஸ் ஆணைக்குழு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

## நோயாளியாக நடித்து வைத்தியரிடம் கைவரிசை

நபர் ஒருவர் கைத்துப்பாக்கியை பயன்படுத்தி வைத்தியரிடம் மோசடி செய்த சம்பவம் அண்மையில் நடைபெற்றது.

நாகொடை பிரதேசத்தில் குறித்த நபர் நோயாளியாக வைத்தியரிடம் சென்று கைத்துப்பாக்கியை காட்டி அவரிடம் இருந்த 8,000 ரூபா பணத்தை பறித்துள்ளார்.


வைத்தியர் குறித்த நபரை பிடிக்க முற்பட்ட வேளை குறித்த நபர் மோட்டார் சைக்கிளில் தப்பி ஓடி தலைமறைவாகியுள்ளார். (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 758

ரூபன் லிங்கா




சிந்துஜா





உஷாந்தன் நெய்மார்




விது




சர்மி சர்மிளா




தர்மசீலன்




**நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.**

# ஆனி மாத இராசிபலன்கள்

## 15.06.2016~15.07.2016



*நம்பிக்கையும், நாணயமும் நமக்குத் தேவை என்று வலியுறுத்தும் கும்ப ராசி அன்பர்களே!*

தூமுகி வருடம் ஆனி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும்பொழுது, மாதத்தொடக்கத்தில் சுகஸ்தானாதிபதி சுக்ரனும், பஞ்சமாதிபதி புதனும் பரிவர்த்தனை யோகம் பெற்றுச் சஞ்சரிக்கிறார்கள். எனவே செல்வ நிலையில் உயர்வும், செயற்பாடுகளில் வெற்றியும் கிடைகக்கும் மாதமாகவே அமையப் போகின்றது. அது மட்டுமல்லாமல் சப்தம ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் குருவின் பார்வை உங்கள் ராசியில் பதிகின்றது. வக்ர நிவர்த்தியடைந்து பலம் பெற்ற தனலாபாதிபதியான குரு பார்ப்பதால் வருமானம் இரு மடங்காகும். புதிய ஒப்பந்தங்கள் வந்து சேருிம. பொருளாதார நிலை உயரும். அதிகப் பிரயாசை எடுக்காமலேயே ஆதாயம் கிடைக்கும். சென்ற மாதத்தில் தடைபட்ட சில காரியங்கள், இந்த மாதத்தில் இனிதே நடைபெறும்.

எல்லாவற்றிற்கும் மேலாக பத்தாம் இடத்திறகும், மூன்றாம் இடத்திற்கும் அதிபதியான செவ்வாய் வக்ர நிவர்த்தியாகின்றார். எனவே சொத்துக்களால் ஆதாயம், சொந்தங்களால் அனுகூலம், விலகிச் சென்ற சகோதரர்கள் விரும்பி வந்து சேரும் வாய்ப்பு, வாகன யோகம், புதிய தொழில் தொடக்கம் போன்றவைகள் ஏ்றபட்டு புதிய பாதையை அமைத்துக்கொடுக்கும்.

ஜென்மத்தில் கேது இருப்பதால் ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். இனத்தார் பகை மாறி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். பணத்தேவைகள் உடனுக்குடன் பூர்த்தியாகும். பதவிகளும், பொறுப்புகளும் கிடைக்கவில்லையே என்று ஏங்கியவர்களுக்கு இப்பொழுது எதிர்பார்த்த பொறுப்புகள் கிடைக்கும். ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும். சப்தமாதிபதி சூரியன் பரிவர்த்தனை கிரகத்தோடு இணைந்திருப்பதால் கல்யாண வாய்ப்புகள் கைகூடும். கடல்தாண்டி வரும் செய்தி அனுகூலம் தருவதாக இருக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் விருப்ப ஓய்வில் வெளிவந்து, சுயதொழில் தொடங்க முன்வரும் நேரம் இது. இம்மாதம் குரு வழிபாட்டை முறையாக மேற்கொள்ளுங்கள். குரு ஸ்தலமாக கருதப்படும் திருச்செந்தூருக்கு யோகபலம் பெற்ற நாளில் சென்று வருவது நல்லது.

**செவ்வாய்ப் பெயர்ச்சி பலன்!**

இந்த மாதம் செவ்வாய் வக்ர நிவர்த்தியாவதால் மிகுந்த நற்பலன்கள் வந்து சேரப் போகின்றன. சகாய ஸ்தானம் மற்றும் தொழில் ஸ்தானத்திற்கு அதிபதியாக விளங்குபவர்

## புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும் நேரம்!

செவ்வாய். அவர் மாதத் தொடக்கத்தில் ஜூன் 19ஆம் திகதி வக்ர இயக்கத்தில் துலாம் ராசிக்குச் செல்கிறார். எனவே பூர்வீகச் சொத்துக்களால் லாபம் கிடைக்கும். பல நாட்களாக நடைபெற்று வந்த பஞ்சாயத்துகள் நல்ல முடிவிற்கு வரும். சம்பள உயர்வு பற்றிய சந்தோஷத் தகவல் வந்து சேரும். ஜூன் 28ஆம் திகதி செவ்வாய் வக்ர நிவர்த்திக்குப் பிறகு அற்புதமான பலன்கள் வந்து சேரப்போகின்றது. அரசியலில் உள்ளவர்களுக்குப் புதிய பொறுப்புகளும், பதவிகளும் வந்து சேரும். கல்வித்தடை அகலும். வீடு கட்டும் முயற்சி அல்லது வாங்கும் முயற்சியில் ஆர்வம்




காட்டியவர்களுக்கு அது கைகூடும்.

**புதனின் பெயர்ச்சிக் காலம்!**

உங்கள் ராசிக்கு பஞ்சம அஷ்டமாதிபதியானவர் புதன். அவர் பஞ்சம ஸ்தானத்தில் ஜூன் 20ஆம் திகதி அடியெடுத்து வைக்கின்றார். இதன் விளைவாக பெண் குழந்தைகளின் சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவிற்கு வரும். பெற்றோர்களின் மணி விழாக்களை நடத்தி பார்பபீர்கள். தொழில வெற்றி நடை போடும். பழைய கடன்க்ளை பைசல் செய்வீர்கள். ஜூலை 6ஆம் திகதி கடகத்தில் புதன் சஞ்சரிக்கும் பொழுது விபரீத ராஜயோகம் அடிப்படையில், திடீர் தன லாபமும், தெய்வ அனுகூலத்தால் நடைபெறாத சில காரியங்கள் நடைபெறும் அமைப்பும் உண்டாகும். வீடு மாற்றங்களும், நாடு மாற்றங்களும் விரும்பி வந்து சேரும்.

**சுக்ர பெயர்ச்சிக் காலம்!**

ஜூலை 8ஆம திகதி கடக ராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகிறார். 4இற்கு அதிபதி 6இல் சஞ்சரிக்கும் பொழுது, தொழில் மாற்றங்கள், பணியாளர் மாற்றங்கள் உருவாகும். உத்தியோக அமைப்பு உள்ளவர்களுக்கு நேர்முகத் தேர்வில் வெற்றி கிடைத்து அரசப் பணி கிடைக்கும் வாய்ப்பும் உருவாகலாம். தாயின் உடல்நலத்தில்கவனம்தேவை. புதிய வாகனங்கள் வாங்கும் முயற்சியில் வெற்றி கிடைக்கும்.

இம்மாதம் ஆனைமுகப் பெருமானை சனிக்கிழமை தோறும் வழிபட்டு வருவது நல்லது.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

கல்யாண வாய்ப்புகள் கைகூடும் மாதம் இது. குரு பார்வையால் குழப்பங்கள் தீரும். குடியிருக்கும் வீட்டால் ஏற்பட்ட பிரச்சினைகள் அகலும். பணவரவு திருப்திகரமாக அமையும். தன்னம்பிக்கையோடு செயறபடுவீர்கள். தாய்வர்க்கத்தினராலும், கூடப் பிறந்தவர்களாலும் கூடுதல் நன்மை கிடைக்கும். கணவன்-மனைவிக்குள் பாசம் கூடும். அன்னியோன்யம் அதிகரிக்கும். புத்திர விருத்திக்கான அறிகுறிகள் தென்படும். புதன், சுக்ரன் பரிவர்த்தனை யோகத்தால் உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு சலுகைகள் அதிகம் கிடைக்கும். வீடு வாங்கும் யோகம் உண்டு. நடராஜர் தரிசனம் நலம் பயக்கும்.

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



*தவறுகளைச் சுட்டிக்காட்டித் தனக்கென ஒரு இடத்தைப்பிடித்துக்கொள்ளும் மீன ராசி அன்பர்களே!*

துர்முகி வருடம் ஆனி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, தனாதிபதி செவ்வாய் வக்ர இயக்கத்தில் இருந்தாலும் பின்னர் வக்ர நிவர்த்தியாகி விடுகின்றார். எனவே பொருளாதாரப் பற்றாக்குறை அகலும். புதிய திருப்பங்கள் பலவற்றையும் காணப்போகிறீர்கள். மதிப்பும், மரியாதையும் உயரும். மக்கள் செல்வங்களின் முன்னேற்றம் கண்டு வியப்படைவீர்கள். தக்க தருணத்தில் நண்பர்கள் கைகொடுத்து உதவ முன்வருவர். தடைப்பட்ட திருமணங்கள் நடைபெறும். ஒரு சிலருக்கு கடைதிறப்பு விழாக்கள் முதல் கட்டிடத் திறப்பு விழாக்கள் வரை நடத்தும் யோகம் ஏற்படும். காரணம் ராசிநாதன் குரு வக்ர நிவர்த்தி அடைந்திருக்கிறார்.

பொதுவாக ராசிநாதன் வக்ர நிவர்த்தியாகும் பொழுது, நல்ல காரியங்கள் இல்லத்தில் நடைபெறும் என்பது நம்பிக்கை. அந்த அடிப்படையில் சுபகாரியப் பேச்சுக்கள் கைகூடும். மங்கல ஓசை மனையில் கேட்கும் வாய்ப்பு உருவாகும். தங்கு தடைகளை அகற்றும் குருவின் பார்வை, உங்கள் ராசிக்கு 2,10,12 ஆகிய இடங்களில் பதிவாகின்றது. எனவே குடும்ப முன்னேற்றம் கூடும். குல தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள். கட்டிய வீட்டைப் பராமரித்து, பழுதடைந்த பாகங்களை சீர் செய்ய முன்வருவீர்கள். தொழில் வளர்ச்சிக்கு மாற்றினத்தவர்கள் உங்களுக்கு கூட்டாளியாக வந்திணைவர். நிலையான வருமானத்திற்கு வழிவகுத்துக்கொள்வீர்கள்.

மாதத் தொடக்கத்தில் சகாயஸ்தானத்திற்கு அதிபதியான சுக்ரனும், சுக ஸ்தானத்திற்கு அதிபதியான புதனும் பரிவர்த்தனை யோகம் பெற்றிருக்கிறார்கள். எனவே சுகங்களும், சந்தோஷங்களும் அதிகரிக்கும். துணிவும், தன்னம்பிக்கையும் கூடும். மாமன், மைத்துனர் வழியில் ஏற்பட்ட மனக்கசப்புகள் அகலும். சேமிப்புகள் உயரும். குழந்தைகளின் நலன் கருதி வங்கிகளில் வைப்புநிதி வைக்க முன்வருவீர்கள்.

**செவ்வாய் பெயர்ச்சிக் காலம்!**

செவ்வாய், மாதத் தொடக்கத்தில் வக்ர இயக்கத்தில் இருக்கிறார். ஜூன் 19ஆம் திகதி

## சேமிப்பு உயரும் நேரம்!

துலாம் ராசிக்கு, வக்ர இயக்கத்தில் செல்கின்றார். அஷ்டமத்தில் செவ்வாய் அடியெடுத்து வைக்கும் பொழுது, ஆரோக்கியத் தொல்லை அதிகரிக்கும்.

வாகனங்களில் செல்லும் பொழுது கூடுதல் கவனம் தேவை. கடன் பிரச்சினையை முன்னிட்டு ஒரு சில சொத்துக்களை விற்க நேரிடலாம். உடன்பிறப்புகளை கொஞ்சம் அனுசரித்து செல்ல வேண்டிய நேரமிது. ஜூன் 28ஆம் திகதி செவ்வாய் வக்ர நிவர்த்தியாகின்றார். அதன பிறகு ஜூலை முதலாம் திகதி விருச்சிகத்திற்குச் செல்கின்றார். இந்த இடைப்பட்ட நான்கு நாட்களும், உங்களுக்கு மிகுந்த கவனம் தேவை. எதிர்பாராத சம்பவங்கள் நிறைய நடைபெறலாம். விருச்சிகத்திற்குள் செவ்வாய் வந்த பின்னால் சொத்துக்களால் உங்களுக்கு லாபம் கிடைக்கும். சொந்தங்களின்




பாராட்டுக்களைப் பெறுவீர்கள். வெளி நாட்டிலிருந்து வியக்கும் தகவல் வந்து சேரும்.

**பொன்னான புதனின் பெயர்ச்சி!**

ஜூன் 20ஆம் திகதி மிதுன ராசிக்கும், ஜூலை 6ஆம் திகதி கடக ராசிக்கும் புதன் பெயர்ச்சியாகிறார். இதன் விளைவாக ரொக்கத்தால் வந்த சிக்கல்கள் தீரும். பக்கத்தில் இருப்பவர்களால் ஏற்பட்ட பாதிப்புகள் அகலும். மாமன், மைத்துனர் வழியில் ஏற்படும் மங்கல நிகழ்ச்சிகளை முன்னின்று நடத்துவீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரிகள் உங்கள் குரலுக்கு செவிசாய்ப்பார்கள். கேட்ட சலுகைகள் கிடைக்கும். விலை உயர்ந்த பொருட்கள், தங்கம், வெள்ளி வாங்குவதில் தனிக் கவனம் செலுத்துவீர்கள்.

**சுகம் தரும் சுக்ரப் பெயர்ச்சி!**

சுக்ர பகவான் ஜூலை 8ஆம் திகதி கடக ராசிக்குச் செல்கிறார். 3,8இற்கு அதிபதி 5இல் சஞ்சரிப்பதால், பிள்ளைகள் நலன் கருதி ஒரு தொகையைச் செலவிடுவீர்கள். அவர்களின் வேலை வாய்ப்புக் கருதி கடல் தாண்டும் முயற்சிக்கு ஏற்பாடு செய்வதன் மூலம் செலவுகள் ஏற்படலாம். நம்பிக்கைக்கு உரியவர்களிடம் உங்கள் பிரச்சினைகளைக் கூறி நல்ல முடிவெடுப்பீர்கள். ஆடம்பரச் செலவுகள் அதிகரிக்கும். அயல் நாட்டு அழைப்புகளை ஏற்றுக்கொள்வது பற்றிச் சிந்திப்பீர்கள்.

இம்மாதம் தென்முகக் கடவுள் வழிபாடு நன்மைகளை வழங்கும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

விட்டுக் கொடுத்துச் செல்வதன் மூலமே விருப்பங்களை நிறைவேற்றிக்கொள்ள இயலும். செவ்வாய், சனி சேர்க்கையால் கோபம் அதிகரிக்கலாம். உடன் பிறந்தவர்களின் பிரச்சினைகளைச் சமாளிக்க வேண்டியதிருக்கும். கணவன்-மனைவிக்குள் அனுசரித்துச் செல்வதன் மூலமே அமைதி காண முடியும். வீடுமாற்றங்கள் வந்து சேரலாம். பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக்கொள்வது நல்லது. உடன்பிறப்புகள் உதட்டளவில் பேசிச்சிரிப்பார்கள். உஷ்ண நோய் உடலை ஆக்கிரமிக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்கள், இடமாறுதல் கேட்டு விண்ணப்பிக்க முன்வருவர். சகிப்புத் தன்மையின் மூலமே சந்தோஷத்தை வரவழைத்துக்கொள்ள இயலும். ஆனித் திருமஞ்சனத்தன்று நடராஜரை வழிபட்டால் நன்மைகளைப் பெறலாம்.

(முற்றும்)

# நினைவு நல்லது வேண்டும்

"நினைவு நல்லது வேண்டும்" என்று பாடினார் மகாகவி சுப்பிரமணிய பாரதியார். "எண்ணம்போல வாழ்வு" என்றொரு பழமொழியும் தமிழர் மத்தியில் வழங்கப்பட்டு வருவதனைக் காணமுடிகின்றது.

தூய எண்ணமே மேன்மையைத் தருகின்றது. நல்லவற்றை எண்ணுவதென்பது பிறருக்குத் தீங்கு விளைவிக்காத சிந்தனையுடன் வாழ்வது என்ற பொருளைத் தருவதாக அமைந்துள்ளது.

உலகப் பொது மறையாம் நீதி நூலாகிய திருக்குறளிலும் "உள்ளுவது எல்லாம் உயர்வுள்ளல்" எனவும் "உள்ளத்தனையது உயர்வு" என்பதும் கூறப்பட்டிருப்பதை நாம் காண முடிகின்றது.

ஒருவனது நல்ல எண்ணமும் நல்ல உறவும் நல்ல ப்ழக்கவழக்கங்களுமே உலக உயர்வுக்கு வழிவகுக்கவல்லன.

நல்லிணக்கமும் நட்பும் உறவும் தொடர்புமே நமது உள்ளத்திலும் நல்ல நிலையை ஏற்படுத்தவல்லன. நல்ல நினைவு உள்ளவர்கள் நன்மையும் மகிழ்வும் தருகின்ற நல்லாரோடேயே இணக்கம் கொண்டவராக காணப்படுவர் என்பதை

"நல்லாரைக் காண்பதுவும் நன்றே நலமிக்க
நல்லார் சொற்கேட்பதும் நன்றே
நல்லார் குணங்கள் உரைப்பதுவும் நன்றே
அவரோடிணங்கி யிருப்பதுவும் நன்றே"

ஔவைப்பிராட்டியார் அழகாக உரைத்தருளியுள்ளார்.

நல்லார் சொற்கேட்டு நடத்தல் மிகமிக அவசியமாகும். உள்ளத்தில் நல்ல சேவை, கடமை, தொண்டு, தியாகம் புரிந்தவர்களது நினவு நல்லதாக இருந்திருக்கின்றது. தமது செய்கைமூலம் பிறருக்கு நன்மை விளைவிப்பவர்களே நல்ல நினைவுடன் வாழ்பவர்கள். நல்லவனென்று பெயரெடுப்பது மிகவும் கஷ்டமான காரியமாகும். ஆனால் ஒரு நிமிடத்தில், ஏன் ஒரு செக்கனில், தீயவன், கெட்டவன், முரடன் என்றெல்லாம் பெயர் எடுத்துவிடலாம். நினைவு நல்லது என்பதனால் சமூகத்தில் பெயரும் புகழும் ஏற்பட வாய்ப்பிருக்கின்றது.

இறைவன் கூட விரும்புவது தூய உள்ளத்தவர்களையே. சுவாமி விபுலானந்தர் ஈசனுவக்கும் மலர் எதுவெனக் கூறும் போது "உள்ளக்கமலமடி உத்தமனார் வேண்டுவது" என்று குறிப்பிடுகின்றார். நீதியுள்ளம் நிறைந்தவர்களுக்கு நினைவு நல்லதாக அமையும். சமய நம்பிக்கை கொண்டவர்களது உள்ளத்தில் "நல்ல நினைவு" மலரும். நல்ல குலத்தில் பிறந்தவர்களது இயல்பு நல்லதாகவே அமையும் என்பதனை நாலடியார், திருக்குறள் போன்றன குறிப்பிடும்போது நன்னிலத்தில் இடும் வித்து முளைத்துச் செழித்து வளத்துடன் உயர்ந்து பயன் தருவதனைப் போன்றது என எடுத்தியம்புகின்றன.

இதனைவிட நல்ல சிந்தனை நிறைந்தவர்களின் வாய்ச்சொல் கூட தூய்மையுள்ளதாக அமையும். கெட்ட நினைவு உள்ளவர்களுக்கு தீயவார்த்தைகளே வாயிலும் வரும். நல்ல நினைவுள்ளவர்கள் சமூகத்தின் செல்வாக்குப் பெற்றவர்களாக சுயமதிப்புடன் மிளிருவார்கள். நல்ல நினைவுள்ளவர்களின் வாழ்வு பிறருக்கு முன்னுதாரணமாகத் திகழும். சங்கப் பாடலாம் புறநானூற்றிலே "உலகம் என்பது உயர்ந்தோர் மேற்றோர்" என்ற கொள்கை எடுத்துரைக்கப்படுகின்றது. சங்கப்புலவர்கள் கூட சான்றாண்மை உடையவர்களாக, தூய உள்ளம் நிறைந்தவர்களாக, உள்ளதை உள்ளபடி கூறும்பண்பு மிகுந்தவர்களாக விளங்கினார்கள்.

உள்ளச் செம்மை வாய்க்கப் பெற்றவர்கள் ஞானிகள், சித்தர்கள், ரிஷிகள் என அழைக்கப்படுவார்கள். இறைவனது திருவடிகளில் பற்றுக்கொண்டவர்கள் உலகத்தை நேசித்து வாழ்க்கையில் மானிடர்கள் பெறும் உலகியலின்ப அனுபவங்களை மறுதலித்து உலகம் மாயை என்ற தத்துவத்தையுணர்ந்து பற்றற்று வாழ்பவர்கள். உள்ளத்தால், உணர்வால், செய்கையால் சாத்வீக குணமுடையவர்கள். காந்தியடிகள், இராமகிருஷ்ண பரமஹம்சர், சுவாமி விவேகானந்தர், முத்தமிழ் வித்தகர் விபுலானந்தர், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், சேர்.பொன். இராமநாதன் போன்றவர்களது சேவையும் மொழியுணர்வும் பண்பாட்டு நலநாட்டமும் எல்லோராலும் பாராட்டப்படுகின்றது. இவர்கள் நல்ல சிந்தனையுள்ளவர்களாக தமது சேவையை மொழிக்காக, மதத்திற்காக, இனத்துக்காக அர்ப்பணித்துள்ளனர்.

நல்ல தேசப்பற்று, மொழிப்பற்று, சமூகப்பற்று, சமயப் பற்று என்ற நல்ல அம்சங்களும் வாழ்ந்து காட்டிய சத்தியவான் மகாத்மா காந்தியடிகள், தமது காலகட்டத்தில் மகத்தான சாதனைகள் புரிந்து இன்று அஹிம்சாமூர்த்தியாகத் திகழ்ந்துள்ளார். நைட்டிக பிரமச்சரிய ஒழுக்கத்தை கடைப்பிடித்து சைவத்தமிழ் மறுமலர்ச்சிக்காக உழைத்த நல்லையம்பதி ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் நல்ல நினைவுகளுடன் வாழ்ந்து காட்டிய யுகபுருஷர். அன்னை திரேசா சேவைக்கென வாழ்ந்த பெருந்தகை. இவ்வாறு மேன்மைகளுடன் விளங்கும் நல்ல நினைவுள்ளவர்களை நாமும் பின்பற்றி வாழ்ந்து வாழ்வில் உயர்வடைவோமாக.

செல்வி.ய.தங்கவேலு
ஆசிரியர்,
யாழ்.சங்கானை
சிவப்பிரகாச ம.வி.

# இந்தோ. பௌத்தர்களிடமிருந்து இலங்கைக்கு அனர்த்த நிதியுதவி

(கொழும்பு)

வெள்ளம் மற்றும் மண் சரிவு காரணமாகப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக இந்தோனேசியாவின் சங்க தேரவாத இந்தோனேசியா அமைப்பும, லயன் எயார் நிறுவனத்தின் தலைவர் மற்றும் பேராசிரியர் சங்கைக்குரிய பெல்லன்வில விமலரத்ன தேரர் ஆகியோரினால் அன்பளிப்புச் செய்யப்பட்ட நிதியுதவி நேற்று முற்பகல் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கையளிக்கப்பட்டது.

இந்தோனேசியாவின் சங்க தேரவாத இந்தோனேசியா அமைப்பு மற்றும் லயன் எயார் நிறுவனம் இருபத்தைந்து இலட்சத்து ஆறாயிரம் ரூபாவையும், பேராசிரியர் சங்கைக்குரிய பெல்லனவில விமலரத்ன தேரரினால் ரூபா ஐந்து இலட்சம் ரூபாவும அன்பளிப்பு செய்யப்பட்டது.

இந்த நிதியுதவியை பேராசிரியர் சங்கைக்குரிய பெல்லன்வில விமலரத்ன தேரர் ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து ஜனாதிபதியிடம் கையளித்தார். (இ-5)






மொரீசியஸ் தேசிய வங்கியினால் வெளியிடப்படும் நாணயத்தாள்களில் தமிழிலும் நாணயத்தின் பெறுமதி அச்சிடப்பட்டு வெளியிடப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# செய்தித்துளிகள்

## பேருந்து சில்லில் சிக்குண்டு இளைஞன் பரிதாப மரணம்

மாத்தளை - நாவுல, ஏ-9 வீதியில் சென்ற பேருந்திலிருந்து வெளியில் குதிக்க முற்பட்ட இளைஞன் பேருந்தின் சில்லில் சிக்கி உயிரிழந்துள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த விபத்து நேற்று முன்தினம் இரவு வேளையில் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கலேவெல, அலுத்வேவ பிரதேசத்தைச் சேர்ந்த 25 வயதுடைய இளைஞரே விபத்தில் உயிரிழந்துள்ளார் என பொலிஸாரால் அடையாளம் காணப்பட்டுள்ளது.

மேலும் இந்த விபத்து யாத்திரைக்கு சென்று மீண்டும் வீடு திரும்பும் போதே இடம்பெற்றுள்ளதாகவும், பேருந்தின் சாரதியை பொலிஸார் கைது செய்துள்ளதாகவும் தெரிய வருகிறது. (இ-5)

## ஹாஸ் சிலிண்டரினால் பரவிய தீயில் கருகிப் பெண் உயிரிழப்பு

மட்டக்களப்பு முறக்கொட்டாஞ்சேனையில் ஹாஸ் (Gas) சிலிண்டரினால் பரவிய தீயில் கருகி பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

வாழைச்சேனை பகுதியில் அமைந்துள்ள கோவில் திருவிழா ஒன்றுக்குச் சென்று விட்டு வீட்டுக்கு வருகைதந்த குடும்பப் பெண் ஒருவரே இவ்வாறு தீப்பிடித்து உயிரிழந்துள்ளதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணியளவில் மட்டக்களப்பு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நில்லயில் உயிரிழந்துள்ளதாக தெரிய வந்துள்ளது. (இ-5)

## சிகிச்சைக்குச் சென்ற சிறுமி துஷ்பிரயோகம்

அம்பாறை நிந்தவூரில் 8 வயது சிறுமியொருவரை துஷ்பிரயோகத்திற்குட்படுத்தியதாக வைத்தியர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த வைத்தியர் 52 வயதுடையவர் எனவும் பொலிஸார் சுட்டிக்காட்டியுள்ளனர்.

சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தில் முன்வைக்கப்பட்ட முறைப்பாட்டிற்கமையவே நேற்று முன்தினம் இரவு சந்தேகநபரை கைது செய்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

சுகயீனம் காரணமாக வைத்தியரிடம் சிகிச்சைக்காக சென்ற போதே குறித்த சிறுமி துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும் பொலிஸாரின் முதற்கட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது. (இ-5)

## மரம் சாய்ந்ததால் ஒருவர் பலி

பன்வில-கலாபொக்க தோட்டத்திலுள்ள மரம் ஒன்றினை வெட்டும் போது வெட்டிய மரம் அவரின் மீது சாய்ந்ததால் சம்பவ இடத்திலேயே பலியாகியுள்ளார்.

குறித்த சம்பவத்தில், மரம் சாய்ந்ததில் கல்கிரிய பிரிவை சேர்ந்த சுப்பிரமணியம் என்பவரே உயிரிழந்துள்ளார். மேலும், குறித்த நபர் 40 வயதானமூன்று பிள்ளைகளின் தந்தை என்பது தெரிய வந்துள்ளது. (இ-5)

## தொழிற்சாலையில் தீ

அநுராதபுரம், எப்பாவெல போஸ்பேட் தொழிற்சாலையில் நேற்று அதிகாலை திடீர் தீப்பரவல் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தத் தீயினால் குறித்த தொழிற்சாலை முற்றாக சேதமடைந்துள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த தீயினால் வழங்கல் பிரிவு, கணக்காய்வு பிரிவு ஆவண காப்பகங்கள் என்பன முற்றாக நாசமடைந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-5)

## 15 இலட்சம் ரூபாய் பெறுமதியான சாராயப் போத்தல்கள் கைப்பற்றல்

மட்டக்களப்பு கரடியனாறு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கரடியனாறு பிரதேசத்தில் சட்டவிரோதமான முறையில் வியாரபத்திற்கென வைக்கப்பட்டிருந்த 4500 போத்தல் (கால் போத்தல் கொள்ளளவு கொண்ட) சாராயத்தை மட்டக்களப்பு மதுவரி திணைக்கள அதிகாரிகள் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது கைப்பற்றியுள்ளதாக மதுவரி திணைக்கள மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களுக்கான சிரேஷ்ட மதுவரி அத்தியட்சகர் நடராஜா சுசாதரன் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் மாலை கரடியனாறு பிரதேசத்திலுள்ள சாராய விற்பனை நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது இவை கைப்பற்றப்பட்டுள்ளன.

கைப்பற்றப்பட்ட சாரய போத்தல்களின் பெறுமதி 15 இலட்சம் ரூபா என அவர் தெரிவித்தார். (இ-5)

# தமிழ் சினிமா வரலாறு

## 188 தூக்குத்தூக்கியில் சிவாஜியின் ஜனரஞ்சக நடிப்பு

**கூண்டுக்கிளி**

தூக்குத் தூக்கி வெளிவந்த அதே திகதியில் (26.08.1954) எம்.ஜி.ஆரும் சிவாஜியும் இணைந்து நடித்த ஆர்.ஆர். பிக்சர்ஸ் கூண்டுக்கிளியும் வெளிவந்தது.

இரு பெரும் நடிகர்கள் சேர்ந்து நடித்த ஒரே படம் என்ற சிறப்பைத் தவிர வேறு எந்த சிறப்பையும் பெறாத படம் இது. படத்தை டி.ஆர்.ராமண்ணா டைரக்ட் செய்திருந்தார்.

**துளிவிஷம்**

நரசு காவி நிறுவனத்தின் அதிபரான வி.எல்.நரசு தயாரித்த படம் துளிவிஷம். திரைக்கதை-வசனம் எழுதி படத்தை இயக்கியவர் ஏ.எஸ்.ஏ.சாமி.

இப்படத்தில் கே.ஆர். ராமசாமி கதாநாயகனாகவும் சிவாஜி கணேசன் வில்லனாகவும் நடித்தார். கதாநாயகி கிருஷ்ண குமாரி (சவுகார் ஜானகியின் தங்கை)



முக்கிய வேடத்தில் டி.வி. நாராயண சாமி நடித்தார். படம் எதிர்பார்த்த வெற்றியைப் பெறவில்லை.

**அந்த நாள்**

ஏ.வி.எம்.மின் அந்த நாள் ஆடல் பாடல் இல்லாமல் தயாரிக்கப்பட்ட முதல் படம்.

புதுமை விரும்பியான வீணை, எஸ்.பாலச்சந்தர் டைரக்ட் செய்தார். ஜாவர் சீதா ராமன், பண்டரிபாய், சூர்யகலா, டி.கே.பாலசந்திரன் ஆகியோர் முக்கிய வேடங்கவில் நடித்தனர்.

ஜப்பான் நாட்டைச் சேர்ந்த அகீஷா குருஷேவா என்ற டைரக்டர் உலகின் தலை சிறந்த டைரக்டராக போற்றப் படுகிறார். அவர் தயாரித்த ரோஷமான் என்ற படத்தின் கதையை தழுவி எடுக்கப் பட்ட படம் அந்த நாள்.

இதில் ஒரு வேடிக்கை என்னவென்றால் சிவாஜிக்குப் பதிலாக வேறொரு நடிகரை வைத்துத்தான் அந்த நாளைத் தயாரித்தார்கள். படம் கிட்டத் தட்ட முடிவடையும் தருணத்தில் அதுவரை தயாராக இருந்ததை போட்டுப் பார்த்தார் ஏவி.மெய்யப்ப செட்டியார். படம் அவருக்குப் பிடிக்கவில்லை. எதற்கப்பா விஷப் பரீட்சை சிவாஜி கணேசனை கதாநாயகனாக போட்டுப் படத்தை முடியுங்கள் என்று கூறிவிட்டார்.

பராசக்தி படத்தில் சிவாஜி நடித்த சில காட்சிகளைப் பார்த்துவிட்டு எதுக்கப்பா விஷப்பரீட்சை கே.ஆர்.ராமசாமியைப் போட்டு படத்தை எடுங்கள் என்று சொன்ன அதே மெய்யப்ப செட்டியார் அந்த நாள் படத்தைப் பார்த்துவிட்டு விஷப்பரீட்சை வேண்டாம் சிவாஜியை வைத்துப் படம் எடுங்கள் என்றார்.

இதுபற்றி பின்னர் சிவாஜி குறிப்பிடும் போது இது ஏ.வி.எம். இன் பெருந்தன்மை. நான் செய்த பாக்கியம். காரணம் அவர் புகழும் அளவுக்கு நான் வளர்ந்து விட்டேன் என்று கூறினார்.

**இல்லற ஜோதி**

மார்டன் தியேட்டர்ஸ் தயாரிப்பான இல்லற ஜோதி சுமாராகவே ஓடியது என்றாலும், நல்ல படம்.என்று பெயர் வாங்கியது.

இதன் கதை-வசனம் - பாடல்களை கண்ணதாசன் எழுதினார். கற்பனை வளம் மிக்க எழுத்தாளராக சிவாஜி நடித்தார். ஸ்ரீரஞ்சினி அவருடைய மனைவி.

இவர்களின் வாழ்க்கையில் பத்மினி குறுக்கிடுகிறார். இந்த முக்கோண காதல் கதையை டைரக்ட் செய்தவர் ஜீ.ஆர் ராவ். ஜி.ராமநாதன் இசையில் பாடல்கள் இனிமையாக ஒலித்தன.

இதில் இடம் பெற்ற அனார்கலி ஓரங்க நாடகத்தை மு.கருணாநிதி அருமையாக எழுதி இருந்தார். சிவாஜிகணேசன் சலீமாகவும் பத்மினி அனார்கலியாகவும் பாத்திரத்துடன் ஒன்றி நடித்தனர்.

இந்த ஓரங்க நாடகம் இசைதட்டாக வெளிவந்து சக்கை போடு போட்டது.

**சிறந்த நடிகர்**

1954ஆம் ஆண்டுக்கான சிறந்த படம், சிறந்த நடிகர் -நடிகைகளை சென்னை சினிமா ரசிகர்கள் சங்கம் தேர்ந்தெடுத்தது.

(தொடரும்)

# இராசையா குவேந்திரநாதனின் தனி மனித பங்களிப்பின் ஊடாக மாதிரிக் கிராமம் உருவாக்கம்



யாழ்பாணத்தில் உள்ள சமூக சேவையாளர் இராசையா குவேந்திரநாதனுடைய தனிமனித பங்களிப்பின் ஊடாக நவக்கிரி பகுதியில் 15 வீடுகள் அமைக்கப்பட்டு மாதிரிக் கிராமம் ஒன்று உருவாக்கப் பட்டுள்ளது.

நவக்கிரி பகுதியில் புத்தூர் தெற்கு மஸ்கன் வீதியில் 15 வீடுகளைக் கொண்டு அமைக்கப் பட்டுள்ள இந்த வீட்டுத்திட்டம் "ராஜா பிளாசா மாதிரிக்கிராமம்" எனும் பெயரில் சிறுவர் இல்லங்களில் தங்கி வாழும் 14 பெண் பிள்ளைகளின் குடும்பங்களுக்கு நாளை வியாழக்கிழமை கையளிக்கப்படவுள்ளமை சிறப்பம்சமாகும்.

கோண்டாவில் கிழக்கில் உள்ள ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயகர் சனசமூக நிலையமும் குமரன் விளையாட்டுக்கழகமும் இணைந்து கடந்த 2014 ஆம் ஆண்டு ஆரம்பித்த "வறுமையை ஒழிப்போம் கல்வியைக் கொடுப்போம்" எனும் தொனிப்பொருளில் உயர்த்தும் கரங்கள் எனும் வேலைத் திட்டத்தின் கீழ் வடமாகாணத்தில் பல்வேறு நற்பணிகளை மேற் கொண்டு வருகின்றனர்.



அதே பிரதேசத்தை சேர்ந்தவரான இராசையா குவேந்திரநாதன் என்பவர் சிறுவயதில் இருந்து வியாபாரத்தினூடாக தன்னை வளர்த்து சமூகத்திற்காக பல்வேறு பணிகளை மேற்கொண்டு வருகிறார். இந்த சமூகசேவையாளன் தனது பணிவரிசையில் இவ்வாறான பாரிய செயற்திட்டம் ஒன்றை மேற் கொண்டுள்ளார்.

இந்த ராஜா பிளாசா மாதிரிக் கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள 15 வீடுகளில் 14 வீடுகள் பயனாளிகளுக்கு வழுங்கப்படவுள்ளதுடன் ஒரு வீடு சனசமூக நிலையத்துக்காக கையளிக்கப்படவுள்ளது. அதாவது ஒருவருடத்துக்கு குறித்த வீடுகளின் பயன்பாடுகளை கண்காணிப்பதற்காக கையளிக்கப் படவுள்ளது. பின்னர் வேறு ஒரு பயனாளிக்கு குறித்த வீடு கையளிக்கப்படும்.

மேலும் இவ் வீடுகள் அனைத்தும் ஒரே மாதிரியான கட்டிட அமைப்புக்களை கொண்டுள்ளதுடன் நீர் வசதி, மலசல கூடம், மினசாரம், பாதை அமைப்பு போனற சகலவசதிகளையும் கொண்டிருப்பது சிறப்பம்சமாகும்.

25 பரப்பு காணியை கொண்ட இப் பகுதி 15 பகுதிகளாக பிரிக்கப் பட்டு ஒவ்வொரு வீடுகளுக்கும் தலா 1.5 பரப்பளவு வீதம் ஒதுக்கப்பட்டுள்ளதுடன் வீடுகளுக்கான பாதைகள் 14 அடிகொண்டதாகவும் அமைக்கப்பட்டுள்ளது. அத்துடன் ஒவ்வொரு வீடும் காணிப்பெறுமதியுடன் சேர்த்து 25 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அண்மக்கப்பட்டுள்ள வீடுகளை வடமாகாணத்தில் வெவ்வேறு பகுதிகளில் இருந்து யாழ் மாவட்டத்தில் உள்ள சிறுவர் பராமரிப்பு இல்லங்களில் தங்கி வாழும் தெரிவுசெய்யப்பட்ட 14 பெண்பிள்ளைக்ளின் குடும்பங்களுக்கு கையளிக்கப்படவுளது.

அந்தவகையில் திருநெல்வேலி கருணாலைய சிறுவர் இல்லத்தில் உள்ள 6 பெண்பிள்ளைகளின் குடும்பங்களுக்கும், திருநெல்வேலி சைவ வித்தியா விருத்திச்சங்கத்தில் உள்ள 2 பெண்பிள்ளைகளுக்கும், உரும்பிராய் கருணையில்லத்திலுள்ள பெண்பிள்ளைகள் 2 பேருக்கும், துர்க்காபுரம் மகளிர் இல்லத்தில் உள்ள 2 பெண் பிள்ளைகளுக்கும் மற்றும் கோணடாவில் பிரதேசத்தை சேர்ந்த 2 பேருக்குமாக மொத்தம் 14 வீடுகள் நன் கொடையாக வழங்கப்படவுள்ளது. குறித்த வீடுகள் அந்தந்த சிறுவர் இல்லங்களின் நிர்வாகத்தினுடைய சிபாரிசுடன் வழங்கப் பட்டு ள்ளது.

குறித்த மாதிரிக்கிராம வீட்டுத் திட்ட திறப்பு விழா நாளை வியாழக்கிழமை (23.06.2016) வடமாகாண முதலமைச்சர் சி.வி.விகனேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளதுடன் வீட்டுத்திட்ட நன் கொடையாளர்களான இராசையா குவேந்திரநாதன் மற்றும் திருமதி குவேந்திரநாதன் றஞ்சினிதேவி ஆகியோருக்கான கௌரவிப்பு விழா எதிர்வரும் 26 ஆம் திகதி கோண்டாவில் ஆசிமட அரசடி விநாயகர் மணிமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தனிமனிதருடைய பங்களிப்பில் இவ்வாறான பாரிய சமூகப் பணிகள் மேற்கொள்ளப்படுவது அனைவராலும் வரவேற்கத்தக்க விடயம்.

பொ.சோபிகா

தவறுகளை ஒப்புக்கொள்ளும் துணிவும் திருத்திக் கொள்ள விரும்பும் விருப்பமும் தான் வெற்றி பெறுவதற்கான இரு வழிகள். ~ லெனின்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## எம் தலையில் கொத்துக்குண்டு வீசியவரிலும் கொடியவர் நமரே!

வன்னியில் நடந்த போரில் கொத்துக் குண்டுகள் வீசப்பட்டன என்று பிரித்தானிய கார்டியன் பத்திரிகை உறுதி செய்து செய்திவெளியிட்டுள்ளது.

உலக நாடுகளில் தடைசெய்யப்பட்ட கொத்துக் குண்டுகளை வன்னி மண்ணில் வீசிய நாசகாரம் சாதாரணமானதன்று.

இந்த நாட்டின் பிரஜைகளான தமிழ் மக்களைக் காப்பாற்றவேண்டிய இலங்கை அரசாங்கம் தமிழர்களின் தலையில் கொத்துக் குண்டுகளைக் கொட்டிக் கொலைப் பாவம் செய்தது எனில், வன்னியில் நடந்த போரின்தாக்கம் எப்படியாக இருந்திருக்கும் என்பதை நாம் சொல்லி யாரும் தெரிய வேண்டிய அவசியம் இருக்க மாட்டாது.

இலங்கை பௌத்த நாடு என்று சொல்லிக்கொள்பவர்கள் தம்நாட்டு மக்களைக் கொல்வதற்குக் கொத்துக் குண்டுகளை வீசினர் எனில், தமிழ் இன அழிப்பின் வக்கிரம் எத்துணை தூரம் இருந்திருக்கும் என்பதை உணர்வதில் கடினம் இருக்க முடியாது.

ஓ! சிங்களப் பேரினவாதிகளே! தமிழ் இனத்தின் தலையில் கொத்துக் குண்டுகளை வீசிவிட்டு, மின்சாரக் கதிரையில் இருந்து முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை காப்பாற்றிவிட்டோம் என்று ஜெனிவாவில் நின்று உலகின் முன் உரைக்கின்ற உங்களிடம் நீதி, நியாயம், நேர்மை, தர்மம் ஏதேனும் இருக்கிறதா! என்ன?

ஒவ்வொரு பூரணையிலும் போதி மாதவனை பூசிப்பதாகக் காட்டிக்கொள்ளும் உங்களின் செயலை அந்தப் புத்தபிரான் ஏற்றுக்கொள்வாரா? ஒரு கணம் சிந்தித்துப் பாருங்கள்.

அட! இதை நாம் சொல்லும்போது ஒரு உண்மை புலப்படுகிறது. கொத்துக் குண்டுகளை எங்கள் உறவுகளின் தலைகளில் போட்ட உங்களைவிட, உங்களைக் காப்பாற்றுவதற்காக எங்கள் அரசியல் தலைமைகள் கடுமையாகப் பாடுபட்டனவே, உண்மையில் உங்களைவிட மிகக் கொடியவர்கள் எங்களை நம்பவைத்து எங்களுக்காகக் கதைப்பது போலப் பாசாங்கு செய்து உங்களைக் காப்பாற்றிய எங்கள் அரசியல் தலைவர்கள் என்றால் அது பிழையன்று.

பிரித்தானிய கார்டியன் பத்திரிகை சொல்கிறது வன்னிப்போரில் இலங்கைப் படைத்தரப்பு கொத்துக் குண்டுகளை வீசியதாக.

ஆனால் லண்டன் சென்ற எங்கள் அரசியல் பிரதிநிதித்துவம்; இன அழிப்பு நடக்கவில்லை என்கிறது என்றால், நிலைமை என்ன என்பதைப் புரிய முடிகிறது அல்லவா?

என்ன செய்வது! எங்கள் ஊழ்வினைப் பயன் அதுவாயிற்று. எனினும் இறைவன் என் முன் வந்து என்ன வேண்டும் கேள் என்று என்னிடம் கூறினால்,

தனிநாடு வேண்டும்; சர்வதேசப் போர்க்குற்ற விசாரணை வேண்டும்; இன அழிப்பு செய்தவர்களுக்குத் தண்டனை கொடுக்க வேண்டும் என்றெல்லாம் கேட்கமாட்டேன். மாறாக இறைவா! எங்களுக்கு வாய்த்துள்ள அரசியல் தலைமை போல என் எதிரிக்குக் கூட ஒரு அரசியல் தலைமை வாய்த்துவிடக் கூடாது. இதை வரமாகத் தா என்று தான் கேட்பேன்.

ஏனென்றால் என் எதிரிக்கும் இப்படியொரு மோசத்தலைமை கிடைத்துவிடக் கூடாது. கிடைத்தால் அவனும் அவன் இனமும் மீள முடியாத பாவம் செய்தவர்களாவர்.

# பெண்களை பாதுகாக்கும் நடவடிக்கையில் யாழ்.மகளிர் அபிவிருத்தி நிலையம்

வடக்கு கிழக்கு மாகாணங்களில் தெரிவு செய் யப்பட்ட பிரதேசங்களான யாழ்ப்பாணம், வவுனியா, மட்டக்களப்பு மாவட்டங்களில் சிவில் சமூகத்தினர் இடையே நீதி, சட்டம் ஒழுங்கு தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்தி வன்முறைகளால் பாதிக்கப்படும் மக்களுக்கு இலவச சட்ட சேவை ஆலோசனை வழங்கி வருவதாக யாழ். மகளிர் அபிவிருத்தி நிலையம் தெரிவித்துள்ளது.

யாழில் நேற்றைய தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர்களுக்கான கருத்தரங்கில் அந்த நிலையத்தினரால் வெளியிடப்பட்ட அறிக்கையி லேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, வன்முறைகளினால் அதிகம் பாதிக்கப்படுகின்ற பிரதேசங்களை இனங்கண்டு அப்பிரிவிற்குட்பட்ட கிராம மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் பெண்கள் சிறுவர் தொடர்பான உரிமைகள் சட்டங்கள் நீதி ஒழுங்கு போன்றவற்றை நிலைநாட்டத் தேவையான அடிப்படை சட்டங்கள் போன்றவற்றையும் பெண்கள் சிறுவர்களை பாலியல் துஷ்பிரயோகத்திலிருந்து பாதுகாப்பதற்கான ஆலோசனை வன்முறைகளை குறைப்பதற்கான வழிமுறைகளையும் சிறந்த வளவாளர்களின் நெறிப்படுத்தலின் கீழ் பயனுள்ள வகையில் மக்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது.

யாழ்ப்பாணத்தில் இரு சட்டத்தரணிகளும் வவுனியா, மட்டக்களப்பு பிரதேசங்களில் ஒரு சட்டத்தரணியும் செயற்பட்டு வருகின்றனர்.

2015 மாரி தொடக்கம் இன்று வரை யாழ். மாவட்டத்தில் 160 வழக்குகளும் வவுனியாவில் 75 வழக்குகளும் மட்டக்களப்பில் 89 வழக்குகளும் எமது நிலையத்தில் பதியப்பட்டுள்ளது.

மேலும் ஆனந்தி எனும் குறும்படம் காட்சிப்படுத்தப்பட்டு குறிப்பாக பெண்கள் சிறுவர்கள் மத்தியில் விழிப்புணர்வுச் செயற்பாடாகவும் நடத்தப்பட்டு வருகின்றது. இதன் போது எம்மால் வெளியிடப்பட்ட சட்ட விழிப்புணர்வுக் கையேடும் வழங்கப்பட்டு வருகின்றது. இச்செயற்றிட்டத்தின் மூலம் 3000 இற்கும் அதிகமான மக்கள் நன்மையடைந்துள்ளனர். எம்மால் செயற்படுத்தப்படும் இத்திட்டமானது மக்கள் மத்தியில் மிக அதிகளவிலான பங்குபற்றுதலுடன் கூடிய வரவேற்பைப் பெற்றுள்ளதுடன் குடும்ப வன் முறையால் பாதிக்கப்படும் பெண்கள் சரியான வகையில் தமது பிரச்சினைகளை இனங்காணவும் கிராமமட்டத்தில் பெண்கள் குழுக்களை உருவாக்கி பிரச்சினைகளுக்கான தீர்வுகளைப் பெற்றுக் கொள்ளவும் அதனை ஏனைய பிரதேச மட்ட பெண்கள் குழுக்களுடன் பகிர்ந்து கொள்ளும் வகையிலும் அமைந்துள்ளது.

பாதிப்புக்களுக்கு ஆளானவர்கள் தமக்குத் தேவைப்படும் சட்ட உதவிகளையும் முறைப்பாடுகளையும் தமக்கான நட்டஈடுகளைப் பெற்றுக் கொள்வதற்குரிய உரிமைகளையும் சட்டங்களையும் மிகத் தெளிவாக அறிந்து கொண்டுள்ளனர். கிராமப்புறத்திலுள்ள அடிப்படை வசதியற்ற பாதிக்கப்பட்ட பெண்கள் சிறுவர்கள் இலவச சட்ட சேவை நிலையங்கள் நிறுவனங்கள் சுயதொழில் பெறும் வழிவகைகள் நிதியுதவி பெறும் வழி வகைகளை அறிந்து கொண்டனர்.

தத்தமது பிரதேசங்களிலுள்ள பிரச்சினைகளை இனங்காண்பதுடன் அதற்கான தீர்வுகளை தாமாகவோ அல்லது துறைசார் உத்தியோகத்தர் ஊடாகவோ இலவச சட்ட சேவை நிறுவனங்கள் ஊடாகவோ தீர்த்துக் கொள்ளும் ஆற்றலைப் பெற்றுள்ள தாக அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## விழுமியங்கள் பற்றிய விவாத போட்டிக்கான கருத்துகள்-05
## அன்பு என்ற சக்தி

உலக சனத்தொகைப் பெருகிக் கொண்டு செல்கிறது. ஆனால், அதற்கேற்ற வகையில் மனிதர்கள் அனைவருடைய தேவைகளையும் பூர்த்தி செய்யக் கூடிய வளங்கள் அருகிக் கொண்டே செல்கின்றன. பற்றாக்குறையாக இருக்கும் வளங்களை அதிக எண்ணிக்கையிலான மக்களுக்கிடையே பங்கிட்டுக் கொள்வதிலே சமமின்மை ஏற்படுவது மிகவும் சாத்தியமானதொன்றே ஆகும்.

இவ்வகையில், வருமானத்தின் சமனற்ற பரம்பல், மனிதர்களிடையே போட்டி, பொறாமை, ஏய்ப்பு, ஏமாற்றம், அடக்கு முறை, பழிவாங்கல் போன்றவற்றை பல்வேறு வடிவங்களிலும் பல்வேறு மட்டங்களிலும் தலைதூக்கச் செய்கின்றது. ஒரு விதத்தில் சொல்லப் போனால், இன்றைய உலகில் வளங்களின் பகிர்வு என்பது, தந்தையில்லாத வீட்டிலே சகோதரர்களுக்கிடையில் ஏற்படும் பாகப்பிரிவினை போன்றமைந்து விடுகிறது. வீட்டிலே மட்டுமின்றி சமூகத்தில், நாட்டில் என்று இன்று உலகெங்குமே மனித குலத்தில் இத்தகையதோர் மனப்பான்மை அறிந்தோ அறியாமலோ புரையோடிப் போயிருப்பதைப் உலகெங்கும் இடம்பெறும் பல சம்பவங்களின் வாயிலாகவும் அறிகிறோம்.

நிம்மதியையும் சந்தோசத்தை அடைய பல வழிகளையும் கையாளும் மனிதன், அதனைப் பேணிப் பாதுகாப்பதற்காகவும் பல வழிகளில் முயல்கிறான். இந்நிலையில், நாம் அனைவரும் மனிதர்கள் என்ற ஒற்றுமையைத் தவிர தாயும் பிள்ளையானாலும் கூட வாயும் வயிறும் வேறுபட்டு விடுகிறது.

சுய-பாதுகாப்பற்ற உணர்விலே சந்தேகம், பயம், ஒளிவு-மறைவு என்ற சுழலில் சிக்கி மனிதர்கள் ஒருவரையொருவர் தன்னையறியாமலே எதிரிகளாக நோக்கும் இக்கட்டானதோர் சூழலில் இன்று நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். குழந்தைகள் பெற்றோருடனும் பெற்றோர் குழந்தைகளுடனுமே கூட மறைமுகமாக மிகுந்த அவதானமாக நடந்து கொள்ளும் நிலை காணப்படுகிறது.

மனித இனம், மன மகிழ்ச்சிக்காக இன்னொன்றைச் சார்ந்திருப்பதன் அடிப்படையிலேயே தொன்று தொட்டுத் தன்னை வளர்த்து வந்திருக்கிறது. ஆனால், மனிதர்கள் மனதளவில் ஒருவருக்கொருவர் நெருக்கத்தைத் தவிர்த்துக் கொள்வதால், பலரும் தொலைக்காட்சி போன்ற உணர்வற்ற சடப்பொருட்களுடனான தொடர்பை நாடுகிறார்கள். இந்த உளவியல் வரட்சிக்கு ஒரே நிவாரணம் அன்பின் சக்தியே ஆகும்.

சுகதாமம் (கலட்டிச் சந்திக்கு அருகே பிறவுண வீதியில்) மண்டபத்தின் ஓராண்டுப் பூர்த்தியை முன்னிட்டு க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கு இடம் பெறும் விழுமியங்கள் பற்றிய விவாதப் போட்டிக்கு மாணவர்கள் தம்மைத் தயார் செய்யும் பொருட்டு இக்கருத்துகள் பிரசுரிக்கப்படுகின்றன. மேலதிக விபரங்களுக்கு 077 261 2088, 077 221 5102 ஆகிய தொலைபேசி இலக்கங்களைத் தொடர்பு கொள்ளவும்.

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வியாழக்கிழமை யாழ்.பிரதேசத்தில நவிண்டில் VC, நாச்சிமார் கோவிலடி, இலந்தைக்காடு, கொற்றாவத்தை, பொலிகண்டி ஆலடி, நெடியகாடு, வெள்ள றோட், உடுப்பிட்டி சந்தி, உடுப்பிட்டி வாசிக சாலை, நாவலடி உடுப்பிட்டி, வனனிச்சி கோவிலடி, பழைய பொலிஸ் நிலையம், VVT, தொண்டைமானாறு, கெருடாவில், மயிலிய தனை, கெருடாவில், சிதம்பரா, வல்லை வீதி, ஐஸ் தொழிற்சாலை பொலிகண்டி ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில தோணிக்கல் சிவன் கோவில் ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில சவேரியார்குளம் பிரதேசம் நறுவிலிக்குளம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

## நிறுவுநர்நாள் நிகழ்வும் பரிசளிப்பு நிகழ்வும்

யாழ்.தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி நிறுவுனர் நாள் மற்றும் பரிசளிப்பு நிகழ்வு என்பன நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் கல்லூரியின் பாவலர் துரையப்பா பிள்ளை கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் ம.மணிசேகரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக கல்லூரி கல்வி அபிவிருத்தி நிதியத் தலைவர் சி.ஜெயவர்மன், பழையமாணவர் பா.கிருபாகரன் அவுஸ்திரேலிய பழைய மாணவர் சங்கம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளதுடன் கௌரவ விருந்தினர்களாக தெல்லிப்பழை கோட்டக்கல்வி அலுவலர் மா. ஆனந்தகுமார், தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-5)

## 10 அடிக்கும் அதிக நீளமான நாகம்

தெமட்டபிட்டிய தம்மிககம பிரதேசத்தில் தென்னை தோட்டத்துக்கு மத்தியில் இருந்த 10 அடிக்கும் அதிக நீளமுடைய நாகம் உயிரிழந்த நிலையில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. அதிக வயது காரணமாக இந்த நாகம் உயிரிழந் திருக்கலாம் என கருதப்படுகின்றது. (இ-5)

## அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.தெல்லிப்பழைகிழக்கு திருவருள்மிகு குருநாத சுவாமி கோவில் கும்பாபிஷேக தினத்தை முன்னிட்டு அலங்கார உற்சவம் நாளை வியாழக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 11 தினங்கள் நடைபெறவுள்ளது. (இ-5)

## விதவைகள் தினம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் நடத்தும் விதவைகள் தினம் நாளை முற்பகல் 10 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் சாமசத் தலைவர் செ.இலகுநாதன் தலைமையில் நடைபெறும். (இ-7)

# கைதடி நவீல்ட் பாடசாலை மாணவர்கள் தேசிய கராத்தே போட்டிக்கு தகுதி



மாகாண மட்ட பாடசாலைகளுக்கிடையிலான கராத்தே சுற்றுப் போட்டி அண்மையில் யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்றது.

இதில் கைதடி நவீல்ட் பாடசாலையைச் சேர்ந்த வீர, வீராங்கனைகள் 5 தங்கப்பதக்கம், 5 வெள்ளிப் பதக்கம், 2 வெண்கலப் பதக்கங்கள் பெற்று சாதனை படைத்து தேசிய போட்டிக்கு தெரிவாகியுள்ளனர்.

அவர்களுடன் உடற்கல்வி பணிப்பாளர் M. சத்தியபாலன், கராத்தே பொறுப்பாசிரியர் பவிராஜையும் பிரதம பயிற்சி ஆசிரியர் சென்சே விஜயராஜ் (S.S.K.A. கராத்தே கழகம்) யும் படத்தில் காணலாம். 15 வயதுப்பிரிவு R. மதுலன்காட்டாவெண்கலம், 17 வயதுப்பிரிவு L. பிரியதர்சன் தனிக்காட்டா தங்கம், குறூப்காட்டா வெள்ளி, 19 வயது பிரிவு A, சுபானுசன் குறூப்காட்டா வெள்ளி, 15 வயதுப்பிரிவு S. லக்சனா தனிக்காட்டா வெள்ளி, குறூப்காட்டா தங்கம், 17 வயது S.ஜானுகா தங்கம், 17 வயதுப் பிரிவு Y.அஜந்தினி தனிக்காட்டா வெள்ளி, குறூப்காட்டா தங்கம், 19 வயதுப்பிரிவு K. கஜனி தனிக்காட்டா வெண்கலம், குறூப்காட்டாதங்கம். (கு)

# மென்பந்து போட்டிக்கு விண்ணப்பிக்குக

காந்தியூர் இளம்பிறை விளையாட்டுக்கழகம் நடத்தும் மென்பந்து போட்டிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

5 ஓவர்கள் 7 வீரர்கள் பங்குபற்றும் மேற்படி போட்டிக்கு பங்குபற்றவுள்ள விளையாட்டுக் கழகங்கள் எதிர்வரும் 23 ஆம் திகதிக்கு முன்னர் பதிவினை மேற்கொள்ளுமாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

அனுமதி கட்டணமாக ஆயிரத்து இருநூறு அறவிடப்படவுள்ளது.

சம்பியன் ஆகும் அணிக்கு வெற்றிக்கிண்ணமும் பெறுமதியான பரிசில்களும் வழங்கப்படவுள்ளன.

தொடர்புகளுக்கு:

077 456 1569, 077 834 4298, 076 996 4151. (கு)

# நடராசா வைத்திலிங்கம் ஞாபகார்த்த மென்பந்தாட்டம்




சைனிங்ஸ் விளையாட்டுக்கழகம் மறைந்த உறுப்பினர் நடராசா வைத்திலிங்கம் (வைத்தியப்பர்) ஞாபகார்த்தமாக 2 வது வருடமாக நடத்தும் சுழல் கிண்ண மென்பந்தாட்ட தொடர் நடைபெற்றது.

அண்மையில் நடைபெற்ற போட்டியில் தீருவிலை எதிர்த்து நேதாஜி அணி மோதியது.

போட்டியில் முதலில் ஆடிய தீருவில் அணி 12 ஓவர்கள் நிறைவில் 77 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுக்களை இழந்தது. தீருவில் சார்பாக மயூரன் 23, தாஸ் 18 ஓட்டங்களை பெற்றனர்.

பந்துவீச்சில் நேதாஜி சார்பாக பிரகாஷ் 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

78 என்ற வெற்றி இலக்கை நோக்கி ஆடிய நேதாஜி அணி 66 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. நேதாஜி சார்பாக நரேன் 20 ஓட்டங்களை பெற்றார்.

தீருவில் சார்பாக அசத்தலாக் பந்து வீசி 4 விக்கெட்டுக்களை வீழ்த்தி B. மயூரன் ஆட்டநாயகன் விருதையும் பெற்றார். தீருவில் அணி 11 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. (கு)







வடமாகாண பாடசாலைகளுக்கு இடையே இடம்பெற்ற வலைப்பந்தாட்ட போட்டியில் வயது 15,17 பிரிவில் அராலி சரஸ்வதி மகாவித்தியாலய அணி சம்பியன் கிண்ணத்தை பெற்றுக் கொண்டது. அவ் அணியினரை படத்தில் காணலாம். (கு-91)

# இன்றைய போட்டிகள்

பருத்தித்துறை உதைபந்தாட்ட சங்க அனுமதியுடன் வல்வெட்டித்துறை நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக்கழகம் நடத்தும் வடமாகாண வல்லவன் உதைபந்தாட்ட தொடரில் இன்று புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் கிளிநொச்சி ஜெகமீட்பர் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது.

➤➤➤➤➤

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 97 ஆவது நிறைவை முன்னிட்டு யாழ். உதைபந்தாட்ட லீக் அனுமதியுடன் நடத்தும் உதைபந்தாட்ட போட்டியில் இன்று புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் எவரெஸ்ட் விளையாட்டுக்கழத்தை எதிர்த்து வளர்மதி விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது.

➤➤➤➤➤

யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் புத்தூர் எவரெஸ்ட் விளையாட்டுக்கழகம் நடத்தும் வடமாகாண ரீதியிலான 11 பேர் கொண்ட உதைபந்தாட்ட போட்டியில் இன்று மாலை 4.45 மணிக்கு நடைபெறும் போட்டியில் டயமன்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து அண்ணாஸ்டார் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. (கு)

# ஜொலிஸ்ரார் வெற்றிக்கிண்ணம் சென்றலைட்ஸ் அரையிறுதியில்







ஜொலி ஸ்ரார் விளையாட்டுக் கழகம் நடத்தி வரும் 30 ஓவர்கள் கொண்ட போட்டியில் ஸ்ரான்லி விளையாட்டுக்கழகத்தை வீழ்த்தி அரையிறுதிக்கு தகுதி பெற்றது சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகம்.

காலிறுதி போட்டியில் சென்றலைட்ஸ் எதிர் ஸ்ரான்லி விளையாட்டுக்கழகம் மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்ரான்லி அணி 25.4 ஓவர்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 148 ஓட்டங்களை பெற்றது. அவ் அணி சார்பாக பிரசாந் 28, பிரசன்னா 26 ஓட்டங்களை பெற்றனர். பந்து வீச்சில் சென்றலைட்ஸ் சார்பாக ஜெறிக் 5, கோகுலன் 2 இலக்குகளை கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சென்றலைட்ஸ் 11.2 ஓவர்களில் 3 இலக்கினை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. அவ் அணிசார்பாக ஜேம்ஸ் 84. யூலியஸ் 34 ஓட்டங்களை பெற்றனர். பந்து வீச்சில் ஸ்ரான்லி அணி சார்பாக துசாந்தன் 1, பிரசாந் 1 இலக்கினை கைப்பற்றினர். அரையிறுதி போட்டியில் சென்றலைட்ஸ் எதிர் மானிப்பாய் பரிஸ் அணியினர் மோதவுள்ளனர். (கு)

# வடமாகாண விளையாட்டு திணைக்களம் நடத்திய மரதன், வேகநடை போட்டி





வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் புதுக் குடியிருப்பு பிரதேச செயலகம் இணைந்து நடத்திய ஆண், பெண் இருபாலாருக்குமான மரதன் ஓட்டப்போட்டி, வேக நடை என்பன அண்மையில் புதுக்குடியிருப்பு பிரதேச செயலக முன்றலில் இருந்து ஆரம்பமாகியது. வடமாகாண விளையாட்டுத் துறை செயலாளர் குருபரனின் தலைமையில் நடைபெற்ற விளையாட்டு நிகழ்வில் பிரதம விருந்தினராக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வைத்திய கலாநிதி சி.சிவமோகன் கலந்து கொண்டு போட்டி நிகழ்வினை ஆரம்பித்து வைத்தார். இந்நிகழ்வில் புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரணவ நாதன் மற்றும் உத்தியோகத்தர்கள், விளையாட்டுக்கழக உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (கு-281)

## போலி இலக்க...

வெளிப்படுத்தியிருந்தார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் குறித்த வாகனம் விளையாட்டுத்துறை அமைச்சர் வசம் இருந்ததாகவும், அப்போதைய விளையாட்டுத்துறை அமைச்சராக மகிந்தானந்த அளுத்கமகே பதவி வகித்ததாகவும் ரஞ்சன் ராமநாயக்க இதன்போது தெரிவித்துள்ளார்.

அத்துடன், மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்துக்கு தொலைபேசி அழைப்பை மேற்கொண்ட அவர், ஜீ.ஈ 20 34 என்ற இலக்கத் தகடுள்ள வாகனம் பதிவு செய்யப்பட்டுள்ளதா என வினவிய போது, இல்லை என அங்கிருந்து பதிலளிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து, இந்த வாகனம் கொலை மற்றும் கடத்தல் நடவடிக்கைகளுடன் தொடர்புபட்டதாக அங்கு கருத்து வெளியிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஆனந்த அளுத்கமகே, இது தொடர்பில் நாவலபிட்டிய மற்றும் கறுவாத்தோட்டம் ஆகிய பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

இது தொடர்பில் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டுள்ளதாகவும், குறித்த இலக்கத் தகடு கொண்ட வாகனத்தை தேடும் படி நீதிமன்றத்தால் பொலிஸாருக்கு பணிக்கப்பட்டுள்ளதாகவும் ஆனந்த அளுத்கமகே மேலும் தெரிவித்துள்ளார்.

முன்னாள் அமைச்சரும், மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவானவருமான மகிந்தானந்த அளுத்கமகேவை எதிர்வரும் 27ஆம் திகதி பாரிய ஊழல் மோசடி தொடர்பில் விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் முன்னிலையாகுமாறு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## ஜெயாவின்...

லல்களுக்கெல்லாம் திமுக தான் காரணம என்றும் ஜெயலலிதா குறிப்பிட்டார் .

ஜெயலலிதாவின் இந்தக் கருத்துக்குக் கடும் கண்டனம் தெரிவித்திருக்கும் திமுக தலைவர் கருணாநிதி, 1974ஆம் ஆண்டில் தமிழக சட்டப்பேரவையில் இது தொடர்பாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருப்பதைச் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

1974 ஜூன் 27ஆம் திகதி கச்சதீவை இந்தியா இலங்கைக்கு அளிப்பது தொடர்பாக அறிவிப்பு வந்ததர்கவும், பத்திரிகைகளில்தான் இதைப் பார்த்து தான் பதறிப் போய் அனைத்துக் கட்சியினருக்கும் அழைப்பு விடுத்து பேசியதாகவும் கருணாநிதி கூறியிருக்கிறார்.

கச்சதீவை இலங்கைக்குக் கொடுத்ததை தான் ஒருபோதும் ஏற்றுக்கொண்டதில்லை என்றும், தன்னால் முடிந்த அளவுக்கு அதற்காக போராடியிருப்பாதகவும் கூறியிருக்கும் கருணாநிதி, கச்சதீவின் மீது இலங்கைக்கு இருக்கும் இறையாண்மையை ஏற்றுக் கொள்ளலாம் என முன்னாள் பிரதமர் வாஜ்பாயிக்கு கடிதம் எழுதியதாக கூறியிருக்கிறார்.

இந்த விவகாரம் தொடர்பாக, நேற்று முன்தினம் தமிழக சட்டப்பேரவையில் ஆளும் அதிமுகவிற்கும், எதிர்க்கட்சியான திமுகவிக்கும் இடையில் கடுமையான வாதம் நடைபெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது. (செ-11)

## நிறைவேற்று...

உரையாற்றிய அமைச்சர் ரணவக்க, தான் பதவிக்கு வந்தால் நிறைவேற்று அதிகாரங்கள் கொண்ட ஜனாதிபதி முறை ஒழிக்கப்படுமென்று கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வாக்குறுதியொன்றை வழங்கியதாக தெரிவித்தார்.

ஆனால், நிறைவேற்று அதிகாரங்கள் கொண்ட ஜனாதிபதி முறை முழுமையாக ஒழிக்கப்பட கூடாதென்று கூறிய அமைச்சர் ரணவக்க, இதன்முலம் நாடு பலவீன மடைய வாய்ப்பு இருப்பதாக எச்சரித்தார்.

இன்று ஆளும் கட்சிக்கு நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை இல்லாத நிலையில் கூட அரசாங்கத்தை முன் கொண்டு செல்லும் வாய்ப்பு ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்கள் காரணமாகவே கிடைத்துள்ளதாக அமைச்சர் ரணவக்க தெரிவித்தார்.

எனவே, ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்கள் முற்றாக ஒழிக்கப்பட்டால் அதன்மூலம் நாட்டில் திறமற்ற தன்மை உருவாகுவதற்கு வாய்ப்பு இருப்பதாகவும் அவர் எச்சரித்தார். (செ-11)

## கொத்துக் குண்டு...

ளதாக பிரித்தானியாவிலிருந்து வெளிவரும் த கார்டியன் பத்திரிகை நேற்று முன்தினம் செய்தி வெளியிட்டிருந்தது.

வடக்கில் கண்ணிவெடி அகற்றும் ஹலோ டிரஸ்ட் குழு கொத்துக் குண்டுகளின் சிதைவுகளை மீட்கும்போது எடுக்கப்பட்ட புகைப்படங்களை த கார்டியன் பத்திரிகை இதற்கான ஆதாரங்களாக வெளியிட்டிருந்தது.

இதுதொடர்பாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சி கருத்து வெளியிடுகையில், ஜெனிவாவில் போர்க் குற்ற விவகாரத்தை அரசாங்கம் மிகத் துல்லியமாக எதிர்கொண்டுவருகின்ற இத் தருணத்தில் எங்கேயோ உள்ள செய்தி நிறுவனம் வெளியிட்டுள்ள பரபரப்பு தகவலுக்கு பதில் வழங்க வேண்டிய தேவை அரசாங்கத்திற்கு கிடையாது.

எவ்வாறாயினும் கொத்துக் குண்டுகளை படையினர் பயன்படுத்தவில்லை என்பதோடு குறித்த ஊடகம் வெளியிட்டிருக்கும் செய்தியும் உண்மைக்குப் புறம்பானது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை முல்லைத்தீவு மாவட்டத்தின் சாலை பகுதியில் AO-2.5RT, RBK-500 AO-2 தசம் 5RT ரக கொத்துக்குண்டுகள் வன்னி பிரதேசத்தில் இடம்பெற்ற இறுதி யுத்தத்தில் பயன்படுத்தப்பட்டமைக்கான ஆதாரங்களாக அமைந்துள்ளதாக த கார்டியன் வெளியிட்டுள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் ஆனையிறவை அண்மித்த பச்சிலைப்பள்ளி பிரதேசத்தின் சில இடங்களிலிருந்து 2011 மற்றும் 2012 ஆண்டுகளிலும் நாற்பதுக்கும் மேற்பட்ட கொத்துக்குண்டுகளின் பாகங்கள் மீட்கப்பட்டதாக ஹலோ டிரஸ்ட் அமைப்பு உறுதிப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-11)



மத்திய மாகாண சபையின் நேற்றைய அமர்வின்போது ஏற்பட்ட அமளிதுமளி காரணமாக மாகாண சபையின் உறுப்பினர் திரக் ராஜபக்ஷ உள்ளிட்ட சிலர் செங்கோலுடன் வெளியேறினர். இதனைத் தொடர்ந்து சபை அமர்வு 20 நிமிடத்துக்கு ஒத்திவைக்கப்பட்டது.


## தீவக கல்வி வலயத்துக்கு பி.க.பணிப்பாளர்கள் இருவர் நியமனம்

(யாழ்ப்பாணம் )

தீவக கல்வி வலயததுக்கு இரண்டு பிரதிக் கல்விப்பணிப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். கல்வி அபிவிருத்திக்கான பிரதிக்கல்விப் பணிப்பாளராக பொ.அருணகிரிநாதனும் கல்வி முகாமைத்துவத்திற்காக வீ. கணேசராஜாவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கல்விச் சேவையில் இருந்து ஓய்வுபெற்ற இவர்களுக்கான மீள் நியமனத்தை வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ஆர். ரவீந்திரன் வழங்கியுள்ளார். இவர்கள் இருவரும் இன்று பதவி ஏற்கவுள்ளனர். (ந)

## ஆயுத மீட்புப் பணி...



அமைய தர்மபுரம் பொலிஸாரின் கவனத்துக்குக் கொண்டு வந்த குற்றத்தடுப்புப் பொலிஸார், தர்மபுரம் பொலிஸார் ஊடாக அந்த இடத்தைத் தோண்டுவதற்கான அனுமதியை கிளிநொச்சி நீதிமன்றத்தில் பெற்றிருந்தனர். இதன்படி நேற்று மாலை ஆறு மணியளவில் ஆரம்பிக்கப்பட்ட தோண்டும் பணி ஆயுதங்கள் எதுவும் கிடைக்காமையினால் தோல்வியில் முடிவடைந்துள்ளது.

இத் தோண்டுதல் பணிக்காக 40 பொலிஸார், 10 இராணுவத்தினர் களமிறக்கப்பட்டு முன்னெடுக்கப்பட்ட ஆயுத மீட்புப் பணியில் ஆயுதங்கள் எதுவும் கிடைக் காமையினால் மேலதிகமான அகழ்வுப் பணி இடைநிறுத்தி வைக்கப்பட்டு ள்ளது. (செ-281,60)

## ஐந்து மாணவிகள்...

ஒரு மாதகாலத்திற்கும் மேலாக பாலியல் துன்புறுத்தல்களை வழங்கி வந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் பாடசாலை நிர்வாகத்துக்கு பலமுறை தெரியப்படுத்தியும் நடவடிக்கை எடுக்காத காரணத்தினால் பாடசாலையை முற்றுகையிட்ட மாணவர்கள் மற்றும் பழைய மாணவர்கள் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர். இதனால் நேற்றைய தினம் அங்கு பதற்றம் காணப்பட்டது.

எனினும் குறித்த ஆசிரியர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்படுவார் என்ற உறுதிமொழியை அடுத்து பாடசாலை மாணவர்கள் அங்கிருந்து கலைந்து சென்றனர். இது குறித்து யாழ்.பொலிஸ் நிலைய சிறுவர் பெண்கள் பிரிவிடம் கேட்ட போது, குறித்த சம்பவம் தொடர்பில் அவ்வாறு யாரும் சரணடையவில்லை எனத் தெரிவித்தனர்.

எனினும் குறித்த சம்பவத்தில் பாதிக்கப்பட்ட சில மாணவிகளின் பெற்றோர்கள் யாழ்.பொலிஸ் நிலைய சிறுவர் பெண்கள் பிரிவில் நேற்று மாலை முறைப்பாட்டினை பதிவு செய்துள்ளனர். இந்த முறைப்பாட்டின் அடிப்படையில் மாணவிகளை பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கிய குறித்த ஆசிரியர் மற்றும் சம்பவத்தை மறைக்க முயன்ற அனைவரும் கைது செய்யப்படுவார்கள் என தெரியவருகின்றது. (செ-4)

## இணையத்தின் ஊடான பங்குச் சந்தை முதலீடுகள்

இணையத்தின் உதவியுடன் பங்குகளை கணனி மற்றும் கையடக்கத் தொலைபேசி ஊடாக நீங்களே கொள்வனவு மற்றும் விற்பனை செய்யும் ஆற்றலினை மேம்படுத்தும் கருத்தரங்கு ஒன்று நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 3.00 - 4:30க்கு கொழும்பு பங்குப்பரிவர்த்தனை யாழ். கிளையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இக் கருத்தரங்கில் ஆர்வமுடையவர்கள் கலந்து பயனடைந்து கொள்ளமுடியும் என கொழும்பு பங்குப் பரிவர்த்தனை யாழ்.முகாமையாளர் மு.திலீபன் அறிவித்துள்ளார்.

இது குறித்த மேலதிக தகவல்களை 0777 822014 என்ற தொலை பேசி இலக்கத்தினூடாகப் பெற்றுக் கொள்ளலாம் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (செ)


## மரண அறிவித்தல்

### திருமதி இராஜநாயகி திருச்செந்திநாதன்

(நிர்வாக அலுவலர் பிரதேச செயலகம் – தெல்லிப்பழை)



தெல்லிப்பழை கிழக்கைப் பிறப்பிடமாகவும் உடுவில் இணுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராஜநாயகி திருச்செந்திநாதன் நேற்று 21.06.2016 செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராஜா (தெல்லிப்பழை கிழக்கு) தம்பதியரின் மூத்த புதல்வியும் சிதம்பரநாதபிள்ளை (இணுவில் கிழக்கு) தம்பதியரின் மூத்த மருமகளும் சிதம்பரதிருச்செந்திநாதனின் (ஓய்வுபெற்ற நிர்வாக அலுவலர், பிரதேச செயலகம் - தெல்லிப்பழை) அன்பு மனைவியும் சிதம்பரசுப்பிரமணியன் (Aerospace Engineer-uk), சிதம்பரவானதி (TLM - Morattuwa University), சிதம்பரபாரதி (UWA Wellassa University), சிதம்பரநடராஜன் (மாணவன் - மயிலணி சைவ மகா வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் திருமதி இராஜசெல்வி தவராசா (தவம் ஸ்ரோர்ஸ்), திருமதி இராஜசௌந்தரி விஜயகுமார் (ஆசிரியை-மயிலணி சைவ மகா வித்தியாலயம்) ஆகியோரின் சகோதரியும் திருமதி அகிலாண்டநாயகி (உடுவில்), கதிர்காமநாதன் (தொல்புரம்), திருமதி திரிபுரநாயகி (கொழும்பு), திருமதி செந்தில்நாயகி (பிரான்ஸ்), திருமதி கேதாரநாயகி (கனடா), திருத்தனிகைநாதன் (கொழும்பு), குமரகுருபரநாதன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (2016.06.22) புதன்கிழமை பி.ப 3 மணிக்கு அம்பலவாணர் வீதி, உடுவில் கிழக்கு, சுன்னாகத்தில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இணுவில் பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அம்பலவாணர் வீதி,
உடுவில் கிழக்கு,சுன்னாகம். (5012)

திரு.சிதம்பரதிருச்செந்திநாதன்
(கணவர்)
0773156938

## ஜனாதிபதி...

க்கைகள் இதுவரை எடுக்கப்படவில்லை என்ற அதிருப்தி தமிழ் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது. இது தொடர்பிலான தமிழ் மக்களின் அதிருப்தியை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தற்போது வெளிப்படுத்தி வருகின்றது.

ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவில் கடந்த செப்டெம்பர் மாதம் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் விசாரணைப் பொறிமுறையில் வெளிநாட்டு நீதிபதிகள் மற்றும் சட்டவாளர்கள் உள்ளடக்கப்பட வேண்டும் என பரிந்துரைக்கப்பட்டிருந்தது.

ஆனால் உள்ளக விசாரணைப் பொறிமுறையில் வெளிநாட்டு நீதிபதிகள் உள்ளடக்கப்படமாட்டார்கள் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் திட்டவட்டமாக தெரிவித்துள்ளனர்.

உள்ளக விசாரணைப் பொறி முறையில் வெளிநாட்டு நீதிபதிகளுக்கு இடமில்லை என்று கடந்த வாரம் ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உறுதியாகக் கூறியுள்ளார்.

ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் 32ஆவது கூட்டத்தொடர் நடைபெற்று வரும் நிலையில், ஜனாதிபதியின் இந்தக் கருத்து வெளியாகியுள்ளது.

ஆனால், ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை அரசாங்கம் முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும், இதில் விட்டுக்கொடுப்புக்கு இடமில்லை என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சம்பந்தன் வலியுறுத்தியுள்ளார்.

ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை அரசாங்கம் முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும், பொறுப்புக்கூறல் கடப்பாட்டை நிறைவேற்றுவதற்கு வெளிநாட்டு நீதிபதிகளைக் கொண்ட நீதிமன்றம் அமைக்கப்பட வேண்டும் என்றும், அமெரிக்கா விடமும், ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளரிடமும், உறுப்பு நாடுகளிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

இந்நிலையில், இலங்கை தொடர்பானதனது வாய்மூல அறிக்கையை ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளர் செயிட் அல்ஹுசைன எதிர்வரும் 29ஆம் திகதி சமர்ப்பிக்கவுள்ளார்.

இத்தகையதொரு பின்னணியிலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தலைமையிலான குழு ஜனதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (செ-11)

## வலி.வடக்கு...

யுள்ள மகஜரில் மேலும் தெரிவிக்கையில்,

முகாம்களில் உள்ள மக்களை சொந்த நிலங்களில் மீள்குடியேற்றுவதாக ஜனாதிபதி கூறிய காலமும் முடிவடைகிறது. நிலங்களை விடுவிப்பார் என எதிர்பார்த்திருந்த மக்களுக்கு அவர் எதுவும் கூறாதது வலி.வடக்கு மக்களுக்கு பெரிதும் ஏமாற்றத்தையே தந்துள்ளது.

கொஸ்கமவில் நடைபெற்ற துரித மீள்குடியேற்ற நிகழ்வும் புனர்நிர்மானங்களும் உதவிகளும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

வலி.வடக்கு மீள்குடியேற்றம் புனர்வாழ்வு சங்கமும் மயிலிட்டி மீள் குடியேற்றக்குழுவும் இடம்பெயர்ந்த மக்களும் நலன்புரி நிலையங்களின் தலைவர்களும் மக்களும் இணைந்து அரசியல் தலைவர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், பொது அமைப்புக்களை இணைத்து தென்பகுதி அரசியல் சார்ந்தவர்களின் உதவியும் கோரப்பட்டு மிக விரைவில் பாரிய அளவிலான சாத்வீக போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளோம்

27 வருடங்களாகியும் சொந்த நிலத்துக்கு போவதற்கு ஏங்கி நிற்கும் மக்களை குடியேற்றுவதற்கு உதவி செய்வார்கள் எனவும் எமது போராட்டத்துக்கு முன்னராக ஜனாதிபதி எமது நிலங்களை விடுவிப்பார் என எதிர்பார்க்கின்றோம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-9)

## வவுனியா...

ந்து தனது வீடு நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்ற இவர் தனது வீட்டு வாசலில் வைத்து கடத்தப்பட்டுள்ளார்.

வாகனமொன்றில் வந்தவர்களால் இவர் கடத்தப்பட்டதாக
தெ                   த

விக்கப்படுகிறது. கடத்தப்பட்ட வர்த்தகரின் குடும்பத்தார் கொழும்பில் வசித்து வருவது டன் அவர் தனியாகவே வாழ்ந்து வந்துள்ளார்.

அருகிலிருந்தவர்கள் வழங்கிய தகவலையடுத்து சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (செ-250, 28)


தேவை
நெல்லியடி நகரப் பகுதியில்
சிறிய கடையொன்று
வாடகைக்குத் தேவை.
தொடர்புகளுக்கு : 0772931062
(சி-4980)

ALLAINCE FRANCAISE DE JAFFNA -
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி

பிரான்ஸ் FOREIGN MINISTRY & FRENCH EMBASSY யின் கீழ்
யாழில் 40 வருடங்களாக AF இன் பயணம் ...
இயங்குகின்ற ஒரே சர்வதேச நிறுவனம் AF.
தலைமை நிறுவனம் FRANCE இல் 1883 இல் நிறுவப்பட்டது. 136 நாடுகளில் 1092 கிளைகள்.

CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS. பிரெஞ்சு மொழிபெயர்ப்புகள் :
• ஆசிரியர்கள் : பிரான்ஸிலிருந்து வருகைதரும் நிபுநர்களால் பயிற்றுவிக்கப்படும் சிறந்த ஆற்றலும் அனுபவமுள்ளவர்கள், யாழ். பல்கலைக்கழக பிரெஞ் (பிரான்ஸ் நாட்டவரும்) ஆசிரியர்கள்.
மாணவர்களுக்கு 40% கழிவு
• இலவசம்: படிக்கும் பாடங்களின் PHOTOCOPIES, படித்ததற்கான LETTER, VISA FORM நிரப்புதல், CD, BOOKS பாவனை ...
பிரான்ஸ், கனடா, சுவிற்சர்லாந்து...
செல்வோர்: யாழ், வன்னி, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு, கொழும்பைச் சேர்ந்த நூற்றுக்கணக்கானோர் AF இல் படித்தே வெளிநாடு செல்கிறார்கள்.
ஆரம்பம் 26.06.2016. உடன் பதிவு செய்யுங்கள் அல்லது இந்த நம்பரை உங்கள் மொபைலில் சேமியுங்கள் !!
021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்.
கச்சேரி பஸ் நிலையம் → புகையிரத கடவை → AF. (வெள்ளை மாடிக்கட்டடம்)
(4993)

CCTV INSTALLATION
சகலவிதமான
CCTV கண்காணிப்பு
உதிரிப்பாகங்கள்
மொத்த விலையில்
பெற்றுக்கொள்ளலாம்
- Sales & Installation
- Service & Maintenance
- Replacement
- Repair

iCS tech >> vision
021 7306000
077 6656778
77, மணிக்கூட்டு கோபுரவீதி, யாழ்ப்பாணம்.
(பெருமாள்கோவிலுக்கு அருகாமையில்)
(சி-4977)

CNR எக்ஸ்பிறஸ் பொதி விநியோக சேவை
உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு/ வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.

CNR World wide Express
No.401 Clock tower road,
Jaffna.
(பெருமாள் கோவில் அருகாமை)
அழையுங்கள் - 077 29 31 062
(C-4974)



CIMA UK புலமைப்பரிசில்

CIMA-UK நிறுவனம் வறிய மாணவர்களும் கற்கைநெறியினை பயிலும் வகையில் மிகப்பெரும் புலமைப்பரிசிலினை வழங்குகின்றது. இம்மாதம் 25ம் திகதிக்கு முன்னர் பதிவினை மேற்கொள்ளும் மாணவர்களுக்கு பதிவுக்கட்டணம், 2 வருடத்திற்கான வருடாந்தக்கட்டணம் என்பனவற்றை புலமைப்பரிசிலாக வழங்குகின்றது. இச்சந்தர்பத்தில் வறிய மாணவர்களும் கல்வியைத் தொடரும் வகையில் யாழ் MCS நிறுவனம் கற்கைநெறிக்கான செலவில் 20000 ரூபாவினை கட்டணச்சலுகையாக வழங்குகின்றது. இதன் மூலம் கற்கை நெறியை பயிலும் மாணவர்கள் 90000 ரூபா வரையில் சேமிக்க முடியும். க.பொ.த பரீட்சைக்கு தோற்றும் மாணவரகளும் விண்ணப்பித்து பரீட்சையின் பின் பயில முடியும். விண்ணப்பிக்க விரும்புவோர் தமது முழுப்பெயர், பிறந்த திகதி முகவரி என்பற்யை 772395895 என்ற எண்ணிற்கு குறுந்தகவலாக அனுப்பி வைக்கவும். மேலதிக விபரங்களை MCS தகவல் தொழில் நுட்ப வளாகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

-இணைப்பாளர், CIMA கற்கை நெறி,
(சி-4983)



100க்கும் மேற்பட்ட வெற்றிடங்கள் கைவசம்
நீங்கள் தொழில் தேடுபவரா?
5 நட்சத்திர ஹொட்டேல்களில் கவர்ச்சிகரமான சம்பளத்துடனான வேலைவாய்ப்பு ஏற்பாட்டுடன் கூடிய
O/L உடன் Business & Hotel Management
UK Certified
CERTIFICATE - DIPLOMA - DEGREE
Up to 30% Discount
With FREE >>> English Course
3 மாத கால தொழில்துறைப் பயிற்சி
(பயிற்சி காலத்தில் கொடுப்பனவுகளும் வழங்கப்படும்)
கற்கைநெறி நிறைவில் வேலைவாய்ப்பு ஏற்பாடு
வெளிநாடு செல்ல விரும்புவோருக்கு விசா ஏற்பாடு.
புதிய பிரிவு ஆரம்பம் Week & Weekend Batch
அனுமதிகளுக்கு: 077 3616 798
SIKARAM ACADEMY Business · Hospitality · English
SCHOOL of HOSPITALITY
www.sikaram.lk
Sikaram Academy
021 222 0011
077 3616 798
275-2/1, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
(வைத்தியசாலை பின்புறம் - பஸ் நிலையத்திலிருந்து 100m)
(C-4986)

FALC FRENCH LANGUAGE CENTRE
"FOR THE BEST FRENCH FOREVER"
FRENCH CLASSES
பிரான்ஸ், கனடா, சுவிஸ், பெல்ஜியம் செல்வோர்க்கான Embassy ஆல் அங்கிகரிக்கப்பட்ட International Diploma in French
விரிவுரையாளர் : MR. V. JEGAN (Trained in France - 2007)
DELF A1, A2 Exam இல் 100 % சித்தி.. 1110 மாணவர்கள் French கற்றுள்ளனர்....
No. 40, பலாலி வீதி, இலுப்பையடி. 0779 789 456 / 021 221 7781 ஆரம்பம் : 02.07.16 சனி 10 am.
பிரதான வீதி, நெல்லியடி TP: 021 3202973 ஆரம்பம்: 04.07.16 Mon@ 4 pm.
ஆரியகுளம் → 100M → பலாலி வீதி → அப்பலோ Hospital → FLC
(C-4975)

2016 ம் ஆண்டிற்கான விண்ணப்பம் கோரல்
ACCA (Association of Chartered Certified Accountants)
(சான்றிதழ் அளிக்கப்பட்ட பட்டயக் கணக்காளர் சம்மேளனத்தின் பரீட்சை)
இக் கற்கை நெறி மூன்று நிலைகளை கொண்டது
A/L பூர்த்தி செய்த மாணவர்கள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள் இக்கற்கை நெறியினை தொடர முடியும்
A C C A
DEGREE
DIPLOMA
ACCA - 03 கட்டாய பாடங்களையும் 02 தெரிவுப் பாடங்களையும் கொண்டது (12 மாத காலம்)
Degree Level - 06 பாடங்களை கொண்டது (12 மாத காலம்)
Diploma Level - 03 பாடங்களை கொண்டது (06 மாத காலம்)
விண்ணப்ப முடிவுத்திகதி - 26th June 2016
மேற்குறிப்பிட்ட திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை சமர்ப்பிப்பவர்களுக்கு ரூ 40,000
(Registration & Subscription Fee)
வரையிலான கட்டண சலுகை வழங்கப்படும்.
AAT, மாணவர்களுக்கு பாட விலக்களிப்பு மற்றும் அதற்குரிய கட்டணச் சலுகையும் வழங்கப்படும்.
149 2/1 K.K.S Road, Jaffna. 077372 2104
K-AIMS BUSINESS SCHOOL
(சி-4981)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.06.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# தரம்-5 மாணவர்களுக்கான
# புலமைப்பரிசில் பரீட்சை — மாதிரி வினாத்தாள் இல-17


பகுதி-I **தமிழ்க் கல்விக் கழகம்** நேரம்:- 45 நிமிடங்கள்

**பரீட்சை எழுதும் மாணவர்களுக்கான அறிவுறுத்தல்கள்**


- எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடையளிக்குக.
- ஒவ்வொரு வினாவுக்கும் தரப்பட்ட அறிவுறுத்தல்களை நன்கு விளங்கி அதற்கேற்ப விடையளித்தல் வேண்டும்.
- உமது பெயர் அல்லது சுட்டெண்ணை உரிய இடத்தில் தெளிவாக எழுதுக.
- செய்கை வேலைகளுக்காக வேறு ஒரு தாளைப் பயன்படுத்துக.

**◆ 01 ஆம், 02 ஆம் வினாக்களில் தரப்பட்ட உருச்சோடிகளுக்கிடையே தொடர்புள்ள உருச்சோடியைத் தெரிவு செய்க.**

01)

1) 


2) 

3) 

02)

1) 

2) 

3) 

03) ஒன்றுக்கொன்று தொடர்புகள் இல்லாத சொற்கள் இடம்பெறும் அடைப்பைத் தெரிவு செய்க.

| | | |
|---|---|---|
| வனம்<br>காடு<br>அடவி | மகிழ்ச்சி<br>துக்கம்<br>சோகம் | அன்பு<br>பாசம்<br>நேசம் |

**◆ 04 ஆம், 05 ஆம் வினாக்களில் தரப்பட்ட முதலிரு சொற்களின் தொடர்பை அவதானித்து அடுத்துவரும் சொல்லுடன் மிக நெருங்கிய தொடர்புள்ள சொல்லின் கீழ்க் கோடிடுக.**

04. கட்டமம்: அத்திவாரம் போல மனிதன்...............

1) உடல் 02) கால் 03) கை

05) பனை : வடலி போல வாழை ............

1) குட்டி 02) மரம் 03) பிள்ளை

◆ தரப்பட்டுள்ள பாடலடிகளைக் கொண்டு 06 ஆம், 07 ஆம் வினாக்களுக்கான விடைகளைத் தெரிவு செய்க.

அன்பொடு பைந்தமிழ் பாடல் பாடி
அறத்தின் கடவுளை வாழ்த்திடுவோம்–உயர்
இன்பமும் கல்வியும் தூய ஒழுக்கம்
எய்தவென்றே தலை தாழ்த்திடுவோம்

06. எவற்றுக்கு தலை தாழ்த்திட வேண்டும்

01) அறம், அன்பு, வறுமை 02) இன்பம்,கல்வி,ஒழுக்கம் 03)துயர்,பணம்,ஒழுக்கம்

07.பாடலில் கூறப்படாத கருத்து

01) அறத்தின் கடவுளை வாழ்த்த வேண்டும்

02)வாழ்க்கையில் இன்பமும் துன்பமும் சாதாரணம்

03)இன்பம்,கல்வி,ஒழுக்கம் போன்றவற்றுக்கு தலை தாழ்த்த வேண்டும்

**08ஆம் 09 ஆம் வினாக்களில் வேறுபட்ட சொல் இடம்பெறும் சொல் வரிசையின் கீழ்க்கோடிடுக.**

08. 01)பாடசாலை,வைத்தியசாலை,தபாலகம்,கோயில்

02)நீலம்,சிவப்பு, மஞ்சள்,வர்ணம்

03)பேருந்து,கார்,சிற்றூர்ந்து,மோட்டார் சைக்கிள்

09. 01)பாகல்,பூசணி,புடோல்,மரங்கள்

02)வீணை,யாழ்,தம்புரா,கிற்றார்

03)பாம்பு,பல்லி,ஓணான்,முதலை

10.“விழலுக்கிறைத்த நீர் போல” என்பதன் கருத்து

01)உபயோகமான வேலை

02)வீணான வேலை

03)தந்திரமான வேலை

11.எழுத்துப் பிழையற்ற வாக்கியத்தைத் தெரிவு செய்க

01)தவழைகள் ஓயாமல் கத்திக் கொண்டேயிருந்தன

02)வானம் கருத்து மளை பெய்தது

03)மனிதர்கள் ஓயாமல் பாடுபட்டு உழைத்து முன்னேறுகின்றனர்

12.இரவு-பகல் எனின் இன்பம்..........வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்

01)சந்தோசம்

02)துன்பம்


03)மகிழ்ச்சி

**13ஆம்,14ஆம் வினாக்களில் எண்கோலங்களில் வெற்றிடத்திற்குப் பொருத்தமான எண்ணைத் தெரிவு செய்க.**

13.




1)8
2)12
3)16





1)14
2)9
3)12

15.  0.6 பங்கை நிழற்றுவதற்கு இன்னும் எத்தனை முக்கோணங்கள் நிழற்றப்பட வேண்டும்?

01) 3 02) 4 03) 5

16. 8+6 +3 கட்டமிடப்பட்ட அடைப்புக்குள் தரப்பட்ட எண் பெறுமானத்திற்கு சமனாக பிரதியீடு செய்யத்தக்க எண் கூட்டைத் தெரிக.

01) 7X3 02) 3X4 03) 16-2

17.  இவ்வுரு 6 சதுரங்களால் ஆனது.இவ்வருவில் உள்ள செவ்வகங்களின் எண்ணிக்கை

01)9 02)2 03)8

8.இரு பகுதிகளும் சமனாக இருக்கும் நிரையைத் தெரிவு செய்க

1)785BR-578RB
2)AZBYU-AZBUY
3)RY53MN-RY53MN

◆இல்ல விளையாட்டுப் போட்டியில் 100m ஓட்டப்போட்டியில் 4மாணவர்கள் ஓடி முடித்த நேர விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.இதனை அடிப்படையாகக் கொண்டு 19 ஆம் 20ஆம் வினாக்களுக்கான விடைகளைத் தெரிவு செய்க.

| | |
|---|---|
| நிராஜ்-14.50 செக்கன் | தனுஸ்-13.28 செக்கன் |
| அனுசங்கர்-20 செக்கன் | சாகித்தியன்-16.20 செக்கன் |

19.இவர்களில் முதலாவது,இரண்டாவது,மூன்றாவது நிலைகளைப் பெற்றவர்களது விபரம் முறையே

01)தனுஸ்,சாகித்தியன்,அனுசங்கர்
02)தனுஸ்,நிராஜ்,சாகித்தியன்
03)அனுசங்கர்,சாகித்தியன்,நிராஜ்

20.அனுசங்கரது வேகம் செக்கனுக்கு எத்தனை மீற்றர்


01)4மீற்றர் 02)5மீற்றர் 03)6மீற்றர்

21.180இன் 1/3 பங்குடன் 40ஐக் கூட்டி 50ஐக் கழித்து வரும் எண்ணை 5ஆல் வகுத்தால் வரும் எண்

01) 12 02) 8 03) 10

22.  நிழற்றப்பட்ட சிறிய முக்கோணத்தின் பரப்பளவு முழு உருவின் பரப்பளவின்


01)1/2 பங்கு 02)1/3 பங்கு 03)1/4 பங்கு

23. 

இது போன்ற 15 சீனிப் பைக்கற்றுக்களின் நிறை

01)750Kg
02)7500g
03)7.05Kg

◆ செல்லப்பிராணிகளை விரும்பும் பிள்ளைகள் பற்றிய விபரம் கீழே தரப்பட்டுள்ளது. அதனை அவதானித்து 24 ஆம் 25 ஆம் வினாக்களுக்குரிய விடைகளைத் தெரிவு செய்க.




24.மூன்றையும் வளர்க்க விரும்புவோர் எத்தனை பேர்?

01)4பேர் 02)5பேர் 03)7பேர்

25.பூனை,நாய் ஆகிய இரண்டையும் மட்டும் வளர்க்க விரும்புவோர் எத்தனை பேர்?

01)4பேர் 02)7பேர் 03)6பேர்

26.“திலகவதி” என்பதைக் குறிக்கும் இரகசியக் குறியீடு

1) ✡□○△✡ 2) ✡□○□○ 3) ✡○□○✡

◆சரியான விடையினைத் தெரிவு செய்க.

27.வட்டவடிவமான மைதானத்தைச் சுற்றி 40 சிவப்புக் கொடிகள் நடப்பட்டுள்ளன.அவை ஒவ்வொன்றிற்கும் இடையில் நீலநிறக்கொடிகள் நடப்பட்டுள்ளன எனின் அம்மைதானத்தைச் சுற்றியுள்ள கொடிகளின் மொத்த எண்ணிக்கை

01) 41 02) 80 03) 79

28.ஒரு தடவைக்கு 2மாத்திரைகள் வீதம் நாள் ஒன்றுக்கு மூன்று தரம் மருந்து உட்கொள்பவருக்கு 6 நாட்களுக்குத் தேவையான மாத்திரைகள் எத்தனை?

01)24 02)48 03)36

29.செவ்வக வடிவ காட்போட் மட்டையை இரண்டாக மடிக்கும்போது 64 சதுர சென்ரி மீற்றர் பரப்பளவு கொண்ட சதுரத்துண்டுகள் 2 கிடைத்தன எனின் செவ்வகத்தின் சுற்றளவு யாது?

01)48cm 02)36cm 03)24cm

30.3 தூண்களுக்கு இடைப்பட்ட தூரம் 90m எனின் 6தூண்களுக்கு இடைப்பட்ட தூரம்

01)270 m 02)220 m 03)225 m

31. 1 தொடக்கம் 100 வரை இலக்கங்கள் எழுதும்போது இலக்கம் 4 எழுதப்படும் தடவைகளின் எண்ணிக்கை

01) 21 02) 20 03) 19

32.சமபக்க முக்கோணியொன்றின் ஒருபக்க நீளம் 1m50cm எனின் அம் முக்கோணியின் சுற்றளவு

01)3m 150cm 02)4m50cm 03)4m25cm

33.பண்ணை ஒன்றில் 8கோழிகளும் 12 முயல்களும் 16 பன்றிகளும் உள்ளன.எனின் அவற்றின் கால்களினதும் தலைகளினதும் எண்ணிக்கைகள் முறையே


01)128,36 02)130,34 03)120,35

34.தாத்தாவினதும் பேரனதும் வயதுகளின் கூட்டுத்தொகை 75 வருடங்கள் ஆகும்.தாத்தா பேரனைப் போன்று 4மடங்கு வயதானவர்.பேரனின் வயது எத்தனை வருடங்கள்

01)60வருடங்கள் 02)15வருடங்கள் 03)20வருடங்கள்

35.செருபாவிடம் ரூபா 5.00 முத்திரைகளும ரூபா 10.00முத்திரைகளும் இருந்தன.அவற்றின் பெறுமதி ரூபா95.00எனின் செருபாவிடம் உள்ள முத்திரைகளின் எணணிக்கை


01)ரூபா 10.00 முத்திரைகள்6, ரூபா5.00முத்திரைகள் 5
02)ரூபா 10.00 முத்திரைகள்7,ரூபா5.00முத்திரைகள் 5
10.00 முத்திரைகள்5,ரூபா5.00முத்திரைகள் 6

36. 

இவ்வுரு வட்டத்தின் 3/4பங்கை காட்டுகிறது.இங்கு X-Y இன் நீளம் 7 cm.இவ்வுருவின் சுற்றளவு 44cm எனின் ABயின் நீளம் யாது?


01)20cm
02)15cm
03)10cm

37.இரண்டு தராசுத் தட்டுக்களும் சமனிலையில் உள்ளன எனின் △ உருவின் நிறை யாது?




1) 4kg 2) 2kg 3) 3kg


38)




வீட்டிலிருந்து ஆலயம் சென்ற பிள்ளை எத்தனை தடவை இடதுபக்கம் திரும்பவேண்டும்

01)6தடவை 02)8தடவை 03)7தடவை

◆ கீழே தரப்பட்ட உறவுமுறைகளின் தொடர்பை அவதானித்து 39ஆம் 40ஆம் வினாக்களுக்கான விடையைத் தெரிவு செய்க.




39.மதிக்கும் நிமாலுக்கும் இடையிலான உறவுமுறை

01)அத்தை-மருமகள்

02)சிறியதாய்-மகன்

03)தாய்-மகன்

40.தீபனின் பேரனாக இருப்பவர்

01)குமார்

02)ராமு

03)கதிரவன்

இவ் வினாக்களுக்குரிய விடைகள் நாளை வியாழக்கிழமை (23.06.2016) வலம்புரி பத்திரிகையில் பிரசுரமாகும்.

●●●

**தமிழ்க் கல்விக் கழகத்தின் ஆசிரியர் குழாம்**

* யோகராசா -துஷ்யந்தன் (இயக்குநர்)
* அ.நிமலகாந்தன் (யா/இனுவில் மத்திய கல்லூரி)
* றோ.சிவபுத்திரன் (யா/கோப்பாய் மகாவித்தியாலயம்)
* G.மோகன்ராஜ் (ISA வலயக்கல்விப் பணிமனை, நுவரெலியா)
* K.L.M.நபீல் (ஹ/ஸாஹிரா தேசிய பாடசாலை, ஹம்பாந்தோட்டை)
* M.S.குகன் (யாழ்.திருக்குடும்ப கன்னியர்மடம்)